# ලංකාණ්ඩුවේ ගැසට් පත්‍රය

# இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகை

අංක 14,867 — 1969 අගෝස්තු 15 වැනි සිකුරාදා — 1969.8.15

14,867 ம் இலக்கம் — 1969 ம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I: தொகுதி (II)—விளம்பரங்கள்

[ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவைசெய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன]


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| பதவிகள்—வெற்றிடம் .. .. .. | 881 | ஆயவிற்பனையும், குத்தகை விற்பனையும் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் .. | 896 | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் .. | — |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் .. .. | 897 | அந்நிய குடிவகை உத்தரவுச் சீட்டு விண்ணப்பங்கள் .. | — |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் .. | — | ஏல விற்பனைகள் .. .. .. | — |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் .. .. | 904 | நானாவித அறிவித்தல்கள் .. .. | 904 |


### பதவிகள் — வெற்றிடம்

### " இலங்கை அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் விளம்பரப்படுத்தப்படும் அரசாங்க சேவைப் பதவிக்குரிய நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள் "

*1. படிகள்.—வேறுவிதமாகச் சொல்லப்பட்டால் ஒழிய, வாடகைப்படி, தற்காலிகமான வாழ்க்கைச் செலவுப்படி, தற்காலிகமான விசேட வாழ்க்கைச் செலவுப்படி என்பன அரசாங்க ஒழுங்குவிதிகளின் பிரகாரம் கொடுக்கப்படும்.*

*2. கேள்விக்குரிய நிபந்தனைகள்.—அரசாங்க சேவைக் கொமிஷனின் பிரமாணங்கள், நிதி ஒழுங்குவிதிகள், கரும முறைக் கைந்நூலின் ஒழுங்கு விதிகள், அரசாங்க பகுதிக் கட்டளைகள் அல்லது ஒழுங்குவிதிகள் என்னும் இவற்றுடன் அரசாங்கம் காலந்தோறும் பிறப்பிக்கும் வேறேதும் கட்டளைகள் அல்லது ஒழுங்கு விதிகளுக்கு அமைவாகவே நியமனங்கள் இருக்கும்.*

*3. நியமன விதிகள்.—(i) இளைப்பாற்றுச் சம்பளத்துக்குட்படாத பதவிகளுக்கான நியமனங்கள் விடயத்தில் (நாள் வீதச் சம்பளத்தில் இல்லாதவர்களையொழிந்த ஏனையோர் விடயத்தில்) அப்பதவிகளுக்கு நியமிக்கப்படுபவர்கள் தமது சம்பளத்தில் 5 சத விகிதத்தை அரசாங்க சேவை சகாய நிதிக்குச் செலுத்தவேண்டும். அவர்கள் விரும்பினால் மேலும் 5 சத வீதத்தைச் செலுத்தலாம். அவர்கள் 5 சத வீதத்தையோ அத்தோடு மேலும் 5 சதவீதத்தையோ செலுத்தினாலும், அவர்களுடைய சம்பளத்தில் 7½ சத வீதத்தை ஒவ்வொரு நிதியாண்டு முடிவிலும் குறித்த நிதிக்கு அவர்களுடைய கணக்கிற் செலுத்தும்.*

*(ii) நியமிக்கப்படுபவர்கள் பிணை செலுத்தவேண்டுமென்று அவர்களுக்குரிய பகுதித் தலைவர்கள் விதித்தால் அரசாங்க உத்தியோகத்தர்கள் (பிணை) கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் அவர்கள் அப்படிச் செய்ய வேண்டும்.*

*(iii) ஏற்கனவே அரசாங்க சேவையில் இல்லாத அச்சேவைக்குப் புதிதாக நியமிக்கப்படுபவர்கள் இத்துவீபத்தின் எப்பகுதியிலேனும் சேவையாற்றக்கூடிய உடலுறுதியுள்ளவர்களென்று ஓர் அரசாங்க வைத்திய உத்தியோகத்தரின் வைத்தியப் பரீட்சைக்கு ஆளாகி அதிற் சித்தி எய்த வேண்டும்.*

*4. அரசாங்க சேவையில் புதிதாகச் சேர்ந்தோர்.—(i) சந்தர்ப்பத்திற்கேற்ப, உபகாரச் சம்பளத்துக்குரிமையுள்ள பதவிகளுக்கு/உபகாரச் சம்பளத்துக்குரிமையற்ற பதவிகளுக்கு 'நியமிக்கப்படும் புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர்களின்' தகுதிகாண்/சோதனைக் காலம் எப்பதவி சம்பந்தமாகவும் நீடித்த காலம் விதிக்கப்பட்டாலொழிய மூன்றாண்டாகும்.*

*(ii) புதிதாகச் சேர்ந்த உத்தியோகத்தர் யாவரும் 1956 இன் 33 ஆம் இல. அரசகரும மொழிச் சட்ட ஏற்பாடுகளுக்கும் அரசாங்கத்தின் மொழிக்கொள்கையைச் செயற்படுத்தும் பொருட்டு இப்பொழுதுள்ள அல்லது இனிமேல் புகுத்தப்படும் எவையேனும் சட்டங்களுக்கும் விதிகளுக்கும் இணங்கி ஒழுகுவார் என்னும் நிபந்தனைக்குட்படல்வேண்டும்.*

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும் அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானிகளில் அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலை கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்கு திருப்பி அனுப்பிவைக்கப்படும்.

எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,
பதில் அரசாங்க அழுத்தகன்.

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1968 ம் ஆம் திசெம்பர் மீ 20 ந் உ.

*(iii) (அ) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தகுதிகாண்/சோதனைக் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில்—செயலாற்றும் அறிவு பெறல் வேண்டும்.*

*(ஆ) தகுதிகாண்/சோதனைக்கால முடிவில், பிறவர்றுடன் க. ப. த. ப. கட்டத்துக்கு மேற்படாத நிலைவரையுள்ள விதிக்கப்பட்ட சிங்களத் தேர்ச்சிச் சோதனையில் விதிக்கப்பட்ட காலத்துள் தேறுவதைப் பொறுத்து அவர்கள் உறுதிப்படுத்தப்படுவர். விதித்துள்ள காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினல், சோதனையில் தேறும்வரை அவர்களுக்குரிய ஆண்டேற்றங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடையவேண்டிய தாத்தை எய்தாத உத்தியோகத்தர்களின் சேவைகள்; அவர்களின் தகுதிகாண்/ சோதனைக்கால முடிவில் நிறுத்தப்படலாம்.*

*குறிப்பு.—சிங்கள மொழிமூலம் அரசாங்க சேவையில் சேருவதற்குத் தகைமை பெறுவோர் உறுதிப்படுத்தற்கு ஒரு முன் தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்கப் பெறுவர்.*

*5. வேண்டிய தகைமைகள்.—விண்ணப்பதாரர் ஒவ்வொருவரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்கவேண்டும். "இலங்கையர்" என்பவர் வம்சாவழியாகவோ பதிவு வழியாகவோ இலங்கைப் பிரசையாக விருப்பவராகும்.*

*6. யுத்தசேவைச் சலுகை.—ஏனைய சகல விடயங்களிலும் தகைமை கொண்டிருப்பின், மகாராணியின் போர்ப்படைகளில் முன்பு சேவையாற்றியவர்களும், தியணைக்கும் படை, விமானத்தாக்கப் பாதுகாப்புப்படை, ஊர்ப்பாதுகாப்புப் படை என்பனவற்றிலும் (தாமாகவே இப்படைகளைவிட்டு விலகியவர்களை ஒழிந்த) முழுநேர கடமையாற்றியவர்களும் 1939 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 3 ந் திகதியிலிருந்து 1949 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 31 ஆம் திகதிவரைக்கும் உள்ள அச்சேவைக் காலத்தை தகைமைக் கருமத்தின் பொருட்டு மாத்திரம், தங்கள் வயதிலிருந்து கழிக்க அனுமதிக்கப்படுவர். அப்படிச் செய்வதற்கு அவர்கள் குறித்த படைகளில் 1945 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 15 ஆம் திகதிக்கு முன் சேர்ந்து இருத்தல் வேண்டும். அத்தோடு அவர்கள் ஆற்றிய சேவை திருப்திகரமானதாயும் தொடர்ச்சியானதாயுமிருத்தல் வேண்டும்.*

*7. பிற தேவைகள்.—(i) தகைமையுடைய அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வவர்களின் திணைக்களத் தலைவர்கள் மூலம் அனுப்பப்படல் வேண்டும். அரசாங்க சேவை ஆணைக்குழுவின் செயலாளரினல் விளம்பரப்படுத்தப்படும் ஒரு பதவிக்கு விண்ணப்பிக்கும் ஒவ்வொரு அத்தகைய உத்தியோகத்தரும் தான் விண்ணப்பம் அனுப்பிய தேதியை, இதற்கெனத் தரப்பட்டுள்ள அச்சிட்ட அஞ்சல் அட்டையில் ("ஆ" எனக் குறிப்பிடப் பட்டுள்ளது) அரசாங்க சேவை ஆணைக்குழுச் செயலாளருக்கு நேராக விண்ணப்பம் முடிவடையுந் தேதியன்றோ அதற்கு முன்னரோ அறிவித்தல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவி வகிக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்களின் விடயத்தில் திணைக்களத் தலைவர்கள் விண்ணப்பங்களை அனுப்பும்போது, நடைமுறைக் கைந் நூலின் 109 நிருவாக பிரமாணத்திற்கிணங்க விண்ணப்பிப்பவர்கள் (தேர்ந்தெடுக்கப்பட்டால்) விடுவிக்கத் தாம் தயாராயுள்ளனரோ அன்ருே வெனவுங் கூறல் வேண்டும்.*

*(ii) குறித்த நேரத்தில் குறித்த இடத்தில் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமாயிருக்கவேண்டும் என்று பரீட்சார்த்திகள் விதிக்கப்படலாம். இதுவிடயமாகப் பிரயாணச் செலவோ வேறெவ்வகையான செலவோ கொடுக்கப்படமாட்டாது.*

*(iii) ஒரு பரீட்சார்த்தியைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் அப் பரீட்சார்த்திக்கு குணநலவத்தாட்சிப் பத்திரம் ஒன்றைக் கொடுத்து சிபார்சு செய்யலாம். ஆனல் குறித்தவோர் பரீட்சார்த்தி விடயத்தில் தலையிட்டு, அவருக்கு ஆதரவு தேட முயற்சித்தால் அது அப்பரீட்சார்த்திக்குத் தகைமையின்மையை உண்டாக்கிவிடும்.*

*(iv) ஒரு பரீட்சார்த்தி தமது விண்ணப்பத்தில் பிழையான கூற்றைக் கொடுத்திருப்பின், அது தெரிவிற்கு முன்னர் கண்டு பிடிக்கப்படின், அப் பரீட்சார்த்திக்குத் தகைமையீனம் உண்டாக்கிவிடும். தெரிவுக்குப் பின்னர் கண்டுபிடிக்கப்பட்டால் தெரிவு செய்யப்பட்டவர் பதவியிலிருந்து நீக்கப்படுவர்.*

*(v) இவ்விளம்பர விதிகள் எல்லாவற்றுக்கும் இணங்காத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.*

*8. தகுதிக்கான சம்பளத்தின் வரையறை.—தகுதிக்கான சம்பளம் என்பது நிலையான அடிப்படைச் சம்பளத்தையே குறிக்கும். பதிற் சேவைச் சம்பளம் வேறும் படிகள் முதலியவை சம்பளத்துடன் அடங்காது.*

---

இல. AB 74/X 2130/69

## இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதி

### பிரதம போக்குவரத்து செலவுக்கணக்குமுறை பார்க்கும் உத்தியோகத்தர் பதவி

இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதியில் பிரதம போக்குவரத்து செலவுக்கணக்குமுறை பார்க்கும் உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை, அ. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அவற்றிற்கு முன் இடைக்கக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும்.—

(அ) உண்ணுட்டு விண்ணப்பங்கள், 1969.8.29 ;

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள், 1969.9.5.

**குறிப்பு.**— (i) அச்சிடப்பட்ட விண்ணப்பப்படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வரவிருப்போர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும் ;

(ii) விண்ணப்பப்படிவம் அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகி விட்டது எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனுலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர் ;

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களை பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக்கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினுல் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம் ;

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர்களாயிருக்கின்றுர்களா வென்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்கு பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதாகும். விதவைகள், அனுதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும்.

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத்திட்டம் வருமாறு :—வருடத்திற்கு ரூ. 13,800 — 3 × 600 — ரூ. 15,600.

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமையுடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும்.—

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும் உடல் நலமுடையவராயும் இருத்தல் வேண்டும் ;

(ஆ) (i) லண்டன் காஸ்ட் அன் வொர்க்ஸ் அக்கவுண்டண்ஸ் இன்ஸ்டிடியூட்டின் அசோசியேட் பட்டம் பெற்றவராய் இருத்தல் வேண்டும், அல்லது,

இலங்கை சார்ட்டட் அக்கவுண்டண்ஸ் இன்ஸ்டிடியூட்டின் அல்லது மற்ற நன்மதிப்புப் பெற்ற அக்கவுண்டண்ஸ் இன்ஸ்டிடியூட்டின் இறுதிச் சான்றிதழ் பெற்றவராய் இருத்தல் வேண்டும் ;

(ii) குறைந்தது ஆறு வருட அனுபவம் இருக்க வேண்டும். இந்த அனுபவம் செலவு கணக்கு முறையில் இருந்தால் முன்னுரிமை காட்டப்படும் ;

(இ) 1969, ஆகத்து 29 ஆம் திகதிக்கு வயதில் 30 வருடத்திற்குக் குறையாமலும் 45 வருடத்திற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையும் அல்லது எல்லாவற்றையும் காட்டுமாறு கேட்கும் பொழுது, சமர்ப்பித்தல் வேண்டும்.

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (**முக்கிய குறிப்பு** : சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலை சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கு பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது) ;

(ஆ) பல்கலைக்கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ் ;

(இ) குணச்சான்றிதழ் இரண்டு, இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர், அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல் வேண்டும் ;

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும் உயர் தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

**குறிப்பு.**— (i) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது.

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கு ஊடாக அனுப்புதல் வேண்டும், எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டை (" ஆ " எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, என முகவரியிட்டு அனுப்ப வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்காயினும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்கும் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறியிடப்பட்டுள்ளது) அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பக்காரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமைபற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறாவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பக்காரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும் கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பாலசூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1969 ம் ஹு ஆகஸ்ட் மீ 8 ந உ.

8–860/1—15.8.1969 ந் திகதிய வர்த்தமானி இல. 14,867

---

இல. AB. 75/X.2131/69

## இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதி

### போக்குவரத்து செலவுக்கணக்குமுறை பார்க்கும் உத்தியோகத்தர் பதவி

இலங்கை அரசாங்கப் புகையிரதப் பகுதியில் போக்குவரத்து செலவுக் கணக்குமுறை பார்க்கும் உத்தியோகத்தர் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள், இந்த அலுவலகத்தால் வழங்கப்படும் அச்சிட்ட படிவங்களில் எழுதப்பெற்று, செயலாளர், அரசாங்க சேவை அதிகார சபை, அ. பெ. இல. 500, கொழும்பு 1 என்ற முகவரியில் பின்வரும் திகதியில் அல்லது அதற்கு முன் கிடைக்கக்கூடியதாக அனுப்புதல் வேண்டும்.—

(அ) உண்ணாட்டு விண்ணப்பங்கள், 1969.8.29 ;

(ஆ) வெளிநாட்டு விண்ணப்பங்கள், 1969.9.5.

**குறிப்பு.**—(i) அச்சிடப்பட்ட விண்ணப்பப் படிவத்தை அஞ்சல் மூலம் அனுப்புமாறு வேண்டுவோர் தம் சொந்த முகவரியிடப்பட்டதும் 9" × 4" அளவிற் குறையாததும் முத்திரையிடப்படாததுமான ஒரு கடித உறையை தமது கடிதத்தோடு அனுப்புதல் வேண்டும். மேலும், அபேட்சகராக வரவிருப்போர் அரசாங்க சேவையிலுள்ளவரா அல்லவா என்பதையும் விளக்கமாகக் காட்டுதல் வேண்டும் ;

(ii) விண்ணப்பப் படிவம், அல்லது அத்தகைய படிவம் தொடர்பான கடிதம் அஞ்சலில் தவறிவிட்டது அல்லது தாமதமாகி விட்டது. எனக் கூறப்படும் குற்றச்சாட்டு எதுவும் கவனிக்கப்படமாட்டாது. விண்ணப்பங்கள் அனுப்புவதற்குக் கடைசித் திகதி வரையும் பொறுத்திருப்பவர்கள் அதனாலாகும் இடருக்குத் தாமே பொறுப்பாவர் ;

(iii) வெளிநாட்டிலுள்ள அபேட்சகர்கள் அச்சிட்ட விண்ணப்பப் படிவங்களை பிறநாடுகளிலுள்ள இலங்கை அரசாங்கப் பிரதிநிதிகளின் அலுவலகங்களிற் பெற்றுக் கொள்ளலாம். அவ்வபேட்சகர்கள் விரும்பினால் விண்ணப்பப் படிவங்களை, விதிக்கப்பட்ட கால எல்லைக்குள், அவர்கள் வசிக்கும் நாட்டுக்குரிய அல்லது அந்நாட்டுக்கு மிகக் கிட்டவுள்ள இலங்கைப் பிரதிநிதியின் அலுவலகத்திற்கு, இலங்கை அரசாங்க சேவை அதிகாரசபையின் செயலாளருக்கு அனுப்பும் பொருட்டு, அனுப்பலாம் ;

(iv) **மருத்துவச் சோதனையும் பயணச் செலவும்.**—இலங்கை அரசாங்கத்தின் கீழ் நியமனம் பெறுவதற்கு வெளிநாட்டிற் தெரிவு செய்யப்பட்ட இலங்கை உத்தியோகத்தர்கள், சேவைக்குத் தகுதியான உடல் நலமுடையவர்களாயிருக்கின்றார்களா வென்பதை உறுதிப்படுத்துவதற்காக மருத்துவச் சோதனை செய்வதன் பொருட்டு அங்கீகரிக்கப்பட்ட மருத்துவப் பணியாற்றுவோரிடம் செல்லுமாறு வேண்டப்படுவார்கள். அத்தகைய மருத்துவச் சோதனைக்காகிய கட்டணத்தையும் இலங்கைக்கு பயணம் செய்வதற்காகிய தங்கள் செலவையும் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தரே கொடுத்தல் வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதாகும். விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும்.

3. **சம்பளமும் படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம் வருமாறு :—வருடத்திற்கு ரூ. 4,080/- — 12 × 360 — 10 × 480— ரூ. 13,200/-. (ரூ. 8,400/- க்கு முன்னும், ரூ. 11,760/- க்கு முன்னும் வினைத்திறமை காண் தடையுடன், ரூ. 11,280/- ல் இரண்டு வருடத்திற்கு நிற்பாட்டி).

**4. தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமையுடையவர் என்பதற்குத் திருப்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(அ) அபேட்சகர் சிறந்த நற்குணமுடையவராயும் உடல் நலமுடையவராயும் இருத்தல வேண்டும் ;

(ஆ) (i) லண்டன் காஸ்ட் அன் வொர்க்ஸ் அக்கவுண்டண்ஸ் இன்ஸ்டிடியூட்டின் அசோசியேட் அங்கத்துவப் பட்டம் பெற்றவராய் இருத்தல் வேண்டும்,

அல்லது

(ii) இலங்கை சார்ட்டட் அக்கவுண்டன்ஸ் இன்ஸ்டிடியூட்டின் அல்லது மற்ற நன்மதிப்புப் பெற்ற அக்கவுண்டன்ஸ் இன்ஸ்டிடியூட்டின் இடையான சான்றிதழ் பெற்றவராய் இருத்தல் வேண்டும், அல்லது இலங்கை தொழினுட்ப கல்லூரியின் கணக்கியல் தகுதித் தேர்வுப் பத்திரம் பெற்றவராய் இருத்தல் வேண்டும், அத்துடன் இத்தகைமைகள் பெற்ற பின் மூன்று வருட அனுபவம் செலவுக் கணக்கு முறையில் இருக்க வேண்டும் ;

(இ) 1969, ஆகத்து 29 ஆம் திகதிக்கு வயதில் 25 வருடத்திற்கு குறையாமலும் 35 வருடத்திற்கு மேற்படாமலும் இருத்தல் வேண்டும்.

5. அபேட்சகர்கள் பின்வரும் சாதனங்களில் எதனையாயினும் அல்லது எல்லாவற்றினையும் காட்டுமாறு கேட்கும் பொழுது, சமர்பித்தல் வேண்டும்.—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (**முக்கிய குறிப்பு** :—சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்கு பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது) ;

(ஆ) பல்கலைக்கழகப் பட்ட அல்லது மிக உயர்ந்த கல்விச் சான்றிதழ் ;

(இ) குணச்சான்றிதழ் இரண்டு, இவற்றிலொன்று பாடப்பணிப்பாளர், கல்லூரி ஆசிரியர், அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றதாயிருத்தல வேண்டும் ;

(ஈ) உயர் தொழிற்றகைமையும் தொழினுட்பத் தகைமையும் உயர் தொழிற்றகைமை அல்லது தொழினுட்பத் தகைமை பற்றிய சான்றிதழ் ;

(உ) சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகியவற்றிற் சித்தியடைந்த மிக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ்.

குறிப்பு.—(i) சாதனங்களையாயினும், சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(ii) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர் தங்கள் விண்ணப்பங்களைத் தொடர்பான திணைக்களத் தலைவர்களுக்கு ஊடாக அனுப்புதல் வேண்டும், எனினும் அவர்கள் தாம் விண்ணப்பம் அனுப்பிய திகதியை அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு நேராக அறிவித்தல் வேண்டும். அந்த அறிவித்தல், விண்ணப்பக் கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன் செயலாளரை அடையக்கூடியதாக அனுப்பப்படுதல் வேண்டும். விண்ணப்பப் படிவத்துடன் அவர்களுக்கு வழங்கப்படும் அச்சிட்ட அட்டையை (" ஆ " எனக் குறியிடப்பட்டுள்ளது) இதன் பொருட்டு உபயோகிக்கலாம்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும் செயலாளர், அரசாங்க சேவை அதிகாரசபை, என முகவரியிட்டு அனுப்பவேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்கும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்கான நியமனங்களுக்கும் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில் I ஆம் பாகம், II ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்க.

9. விண்ணப்பப் படிவத்துடன் அனுப்பப்படும் அச்சிட்ட அஞ்சல் அட்டையை (" அ " எனக் குறியிடப்பட்டுள்ளது) அதன் கண் அறிவுறுத்தப்பட்டுள்ளவாறு விண்ணப்பக்காரர் நிரப்பித் திருப்பியனுப்புதல் வேண்டும். அவ்வாறு அனுப்பப்படின் அவர்கள் விண்ணப்பம் பெற்றமை பற்றி அறிவிக்கப்படும். இத்தேவைக்கு அமைய ஒழுகாத அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி அறிவிக்கப்படமாட்டாது. இத்தேவைக்கு அமைய ஒழுகியவர்கள் விண்ணப்பக் கடைசித் திகதியிலிருந்து மூன்று கிழமைக்குள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலைப் பெறுவிடின் உடனே அரசாங்க சேவை அதிகார சபையின் செயலாளருக்கு அறிவித்தல் வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பக்காரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

டீ. ஆர். எல். பால்சூரியா,
செயலாளர்,
அரசாங்க சேவை அதிகார சபை.

அரசாங்க சேவை அதிகார சபை அலுவலகம்,
த. பெ. 500,
காலிமுகச் செயலகம்,
கொழும்பு 1,
1969 ம் ஆல் ஆகஸ்ட் மீ 8 ந உ.

8–860/2—15.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,867

---

## இலங்கை அரச விமானப் படை

### மருத்துவச்சிப் பதவி

கட்டுநாயக்காவிலுள்ள இலங்கை அரச விமானப் படையின் மருத்துவ நிலையத்திற்கு மருத்துவச்சி ஒருவர் தேவை. அதற்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழ்க்காணும் மாதிரிப் படிவத்திலமைந்தனவாய் அவரவர் கையெழுத்திலிருக்க வேண்டும். விண்ணப்பங்கள் 1969.8.31 ந் திகதிக்குப் பிந்தாமல் சிவில் பரிபாலன உத்தியோகத்தரும் கணக்காளரும், இலங்கை அரச விமானப் படைத் தலைமைக் காரியாலயம், 594 வது தபாற் பெட்டி, கொழும்பு என விலாசமிட்டு அனுப்பப்படல் வேண்டும். விண்ணப்பம் அனுப்பும் உறையின் இடதுபுற மேல் மூலையில் " மருத்துவச்சிப் பதவிக்கான விண்ணப்பம் " எனத் தெளிவாக எழுதி அனுப்புக.

2. **சம்பளத்திட்டம்** : ஆண்டிற்கு ரூபா 696—30 × 11—12 × 1—1,038 (ஆண்டிற்கு ரூபா 906 க்கும் 996 க்கும் முன்பு திறமைக்கடைவைகள் உண்டு.)

3. **வயதெல்லை** : 1969.8.31 ந் திகதியன்று 20 வயதிற்குக் குறையாமலும் 35 வயதிற்கு மேற்படாமலும் இருக்கவேண்டும்.

4. **கல்வியும் மறுதகைமைகளும்** :ஒவ்வொரு விண்ணப்பதாரரும் :

(அ) (i) சிரேஷ்ட தாராதரப்பத்திரப் பரீட்சையில் சித்தியடைந்ததற்கு

அல்லது

(ii) க. பொ. த. (சாதாரண நிலை) பத்திரப் பரீட்சையில் இரு தடவைகளுக்கு மேற்படாமற் தோன்றி சிங்களம்/தமிழ், எண்கணிதம்/பாடி கணிதம் உட்பட ஆறு பாடங்களில் சித்தியடைந்ததற்கு;

அல்லது

(iii) அதற்கு ஒப்பான வேறுபரீட்சையில் சித்தியடைந்ததற்கு.

(ஆ) மருத்துவச் சட்டத்தின் 105 ஆம் அத்தியாயத்தின் vii ஆம் பிரிவின் கீழ் பதிவு செய்யப்பட்ட மருத்துவச்சியென்பதற்கு;

(இ) நற்குணமும் உடலுறுதியும் உடையரென்பதற்கு;

(ஈ) அரசாங்க அல்லது தனியார் மருத்துவ நிலையத்தில் மருத்துவச்சியாகக் கடமையாற்றி ஆகக்குறைந்தது ஈராண்டு அனுபவமுள்ளவரென்பதற்கு திருப்திகரமான ஆதாரங்கள் காட்டவேண்டும்.

**முக்கிய கவனிப்பு** : திருமணமாகாதவர்க்கே முதல் இடம் கொடுக்கப்படும்.

5. **நியமன விதிகள்** : பதவி தற்காலிகமானதும் இளைப்பாற்றுச் சம்பளம் அற்றதுமாகும். நியமனம்பெறும் மருத்துவச்சிக்கு மருத்துவப் பணியாற்றும் வேளையில் அணிய உத்தியோக உடை கொடுக்கப்படும்.

6. **சேவை நிபந்தனைகள்** : இந்தக் கசட்டின் பகுதி I தொகுதி II இன் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்ட அரசாங்க சேவையிலுள்ள பதவி நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகளைப் பார்வையிடுக.

7. விண்ணப்பதாரர்கள் தங்கள் விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் பிரதிகளை (மூலப் பிரதிகளல்ல) இணைத்தல் வேண்டும் :—

(அ) பிறப்புச் சான்றிதழ்;

(ஆ) ஆகக் கூடுதலான கல்வித்தகைமைச் சான்றிதழ்;

(இ) தொழில் அனுபவச் சான்றிதழ் ;

(ஈ) விண்ணப்பதாரரின் நற்குணம், தகுதிபற்றி அண்மையில் வழங்கப்பட்ட 3 சான்றிதழ்கள்.

**முக்கிய கவனிப்பு** : ஏற்கனவே அரசாங்க சேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் நற்குணம், தகுதிபற்றிய சான்றிதழ்கள் இணைக்கவேண்டியதில்லை. அவரவர்களின் திணைக்களத் தலைவர்களிடமிருந்து இவைபற்றிய சான்றிதழ்பெற்று அனுப்பினால் போதுமானது. சான்றிதழ் பிரதிகள் திருப்பியனுப்பப் படமாட்டா.

8. திணைக்களத்திலுள்ள உத்தியோகத்தர் எவருக்கேனும் அல்லது எனக்குப் பெயரிட்டு விண்ணப்பங்கள் அனுப்பக்கூடாது. சொந்தப் பெயருக்கு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

9. மேற்கூறப்பட்ட தேவைகளுக்கமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். அப்படி நிராகரிக்கப்படும் விண்ணப்பங்கள் பற்றி விண்ணப்பதாரர்களுக்கு அறிவிக்கப்படமாட்டாது.

அ. செ. அரசரத்தினம்,
சிவில் பரிபாலன் உத்தியோகத்தரும், கணக்காளரும்,
விமானப்படைத் தலைவருக்காக.

இ. அ. வி. ப. தலைமைக் காரியாலயம்,
கொழும்பு, 1969 ம் ஆடு ஓகஸ்ட் மீ 6 ந் உ.

### மாதிரிப் படிவம்

**மருத்துவச்சிப் பதவிக்கான விண்ணப்பம்**

1. முழுப் பெயர் : ————.
(தெளிவாக)
2. தபால் முகவரி : ————.
3. பிறந்த திகதியும் 1969.8.31 ந் திகதியன்று வயதும் : ————.
4. எந்நாட்டவர் (வம்சாவழி மூலமோ பதிவுமூலமோ இலங்கையரா வென்பதைக் குறிப்பிடுக. பதிவு மூலமாயின் பதிவு எண்ணைக் குறிப்பிடுக) : ————.
5. திருமணமானவரா அல்லவரா : ————.
6. கல்வித் தகைமைகள் : ————.
7. தொழிற் தகைமைகள் : ————.
8. பள்ளிக்கூடம் விட்ட நாட்தொடங்கிப் பார்த்த தொழில் பற்றிய விபரங்கள் : ————.
(கால வரிசைப்படி எழுதுக)
முதலாளியின் பெயரும் விலாசமும் : ————.
சேவைக்காலம் : ————. தொடங்கி : ————. வரை. ————
வகித்தபதவி : ————.
9. என்றாவது நீதிமன்றத்தினால் குற்றவாளியாகக் காணப்பட்டீரா? அல்லது நன்னடத்தையிற் செல்லுமாறு விடப்பட்டீரா? அப்படியாயின் விபரங்கூறுக : ————.
10. நற்குணச் சான்றிதழ்கள் கொடுத்தோரின் பெயர்கள், விலாசங்கள், பதவிகள் ஆகியவற்றைக் குறிப்பிடுக : ————.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி : ————.

8–746—15.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,867

---

## கடற்றொழில் திணைக்களம்

**கடற்றொழில் உதவியாளர் (தொழில் நுட்பம்) பதவி**

கடற்றொழில் திணைக்களத்தில், கடற்றொழில் உதவியாளர் (தொழில் நுட்பம்) பதவிக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பங்கள் கீழுள்ள மாதிரிப் படிவத்தில் தயாரிக்கப்பட்டு, 1969 ஆகஸ்ட்டு 29 ம் தேதியன்றோ அதற்கு முன்னரோ எம்மை வந்தடையுமாறு அனுப்பப்பட வேண்டும்.

2. **சம்பளம் :** இப்பதவிக்கான சம்பள விகிதம் வருமாறு ஆண்டுக்கு ரூபா. 3,360 இலிருந்து ஆண்டுதோறும் ரூபா. 360 ஏற்றத்துடன், ஆண்டுக்கு ரூபா 8,400 வரை வளரும்.

3. **நியமன நியதிகள் :** பதவி நிரந்தரமானதும், உபகாரச் சம்பளமுடையதுமாகும். நியமனம் முதல் மூன்று ஆண்டுக் காலத்துக்குத் தகுதி காண் நிலையிலிருக்கும். நிரந்தர உத்தியோகத்தர் ஒருவர் தெரியப்படுமிடத்து, தொடக்கத்தில், ஒரு குறிப்பிட்ட காலத்துக்கு பதில் பணியில் அமர்த்தப்படுவார்.

4. நியமனத் தேதியிலிருந்து 4 ஆண்டுகளுள் அரசாங்க சேவை ஆணைக்குழு விதிகள், நிதிப் பிரமாணங்கள், நடைமுறைக் கைநூல் பிரமாணங்கள், கடற்றொழில் கட்டளைச் சட்டமும், பிரமாணங்களும் ஆகியவற்றின் தேர்வில் உத்தியோகத்தர் சித்தியுற வேண்டும். நாலு ஆண்டுகளுள் இத்தேர்வில் சித்தியுறத் தவறுமிடத்து அடுத்துவரும் சம்பள ஏற்றம், தேர்வுச் சித்தியுறும் காலம் வரை நிறுத்தி வைக்கப்படும்.

5. **வேண்டிய தகைமைகள் :** ஒவ்வொரு விண்ணப்பதாரரும், தான் பின்வருந் தகைமைகள் உடையவரென்பதற்குத் திருத்தியான சான்று காட்டுதல் வேண்டும் :—

(1) 1969 ஆகஸ்டு 29 ந் தேதியன்று 22 வயதுக்குக் குறையாத வராயும், 35 வயதுக்குக் மேற்படாத வராயும் இருக்க வேண்டும். (ஏற்கனவே அரசாங்க சேவையில் உள்ள உத்தியோகத்தரை இவ் வயதெல்லைகள் பாதியாது).

(2) ஒரு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பீ. எஸ். சீ. பட்டம் (பொறியந்திரவியல் அறிவு அல்லது அனுபவம் உள்ளோர்க்கு முதலுரிமை அளிக்கப்படும்) ; அல்லது

(3) (i) (அ) எஸ். எஸ். சீ.; அல்லது.

(ஆ) ஜீ. சீ. ஈ. (சாதாரணம்) : சிங்களம்/தமிழ், எண்கணிதம் அல்லது கணிதம் ஆகிய பாடங்கள் அடங்குவதாக 6 பாடங்களில் 2 தடவைகளுக்கு மேற்படாத முறைகளில் சித்தியெய்தியதாயிருக்க வேண்டும்; அல்லது,

(இ) அதையொத்த அல்லது உயர்தேர்வு; அத்துடன்,

(ii) (அ) ஒரு அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பீ. எஸ். சீ. எந்திரவியல் தேர்வில் பகுதி 1 இல் சித்தியெய்தியதோடு 8 வருட செய்முறை அனுபவம் கொண்டிருக்க வேண்டும் ; அல்லது

(அ) இலங்கை நுண்கலைக் கல்லூரி/ஹார்டி தொழில் நுட்பப் பயிற்சி நிலையத்துப் பொறிமுறை யந்திரவியல் கனிட்ட தொழில் நுட்ப உத்தியோகத்தர் சான்றிதழுடன் 10 வருட செய்முறை அனுபவம் கொண்டிருக்க வேண்டும் ; அல்லது

(இ) இலங்கை நுண்கலைக் கல்லூரி/கனிட்ட தொழில் நுட்பக் கல்லூரியில் பொறிமுறை எந்திரவியல் மாலை எத்திரவியல் சான்றிதழையும் 12 வருட செய்முறை அனுபவத்தையும் கொண்டிருக்க வேண்டும் ; அல்லது,

(ஈ) யந்திர வள்ளங்களைச் சமைத்தலில் 15 வருட அனுபவம் உடையவராக இருத்தல் வேண்டும். இவற்றுள் குறைந்தது 10 வருடங்கள் மேற்பார்வை ரீதியில் இருநதிருத்தல் வேண்டும் ; அல்லது,

(உ) இதற்குச் சமமான அல்லது இதிற்கூடிய தராதரம் கொண்டிருக்க வேண்டும்.

6. விண்ணப்பதாரர் தமது விண்ணப்பங்களுடன் பின்வருவனவற்றின் பிரதிகளை (மூலங்களையல்ல) இணைக்க வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவச் சான்றிதழ் (மு. கு. ஞானஸ்நானச் சான்றிதழ் அல்லது உதவிபெறும் பாடசாலைகளுக்கான ஒழுங்கு விதிக் கோவையின் தேவைக்கென வழங்கப்பட்ட பிறப்புச் சான்றிதழ் கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா).

(ஆ) பட்டம் அல்லது ஆகக்கூடிய கல்விச் சான்றிதழ்,

(இ) இரண்டு குணச் சான்றிதழ்கள். ஒன்று கலவி இயக்குநர், கல்லூரி விரிவுரையாளர் அல்லது பேராசிரியரிடமிருந்து பெற்றிருக்க வேண்டும் ;

(ஈ) உயர் தொழிலுக்குரிய அல்லது தொழில்நுட்பச் சான்றிதழ்கள் அல்லது இரண்டும்.

(உ) சிங்களத்தில் அல்லது தமிழில் அல்லது இரண்டிலும் சித்தியுற்ற உயர்தேர்வின் சானறிதழ்.

7. விண்ணப்பங்களையும் அவை சம்பந்தமான வேறு கடிதத் தொடர்புகளையும், "கடற்றொழில் இயக்குநர்" என்று பதவி குறித்தனுப்ப வேண்டுமேயனறி, இத்திணைக்கத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்கும் நேராக அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காக நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியில I ஆம் பாகம் II ம் பிரிவில் வெளியிடப்பட்டுள்ளன. அவற்றைப் பார்க்கவும்.

ஜ. ஒ. கே. ஜீ. பர்ணந்து,
கடற்றொழில் இயக்குநர்.

கடற்றொழில் திணைக்களம்.
த. பெ. எண். 531,
கொழும்பு 3.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

**கடற்றொழில் உதவியாளர் (தொழிநுட்பம்) பதவி**

1. முழுப் பெயர் :————.
(அ) சொந்தப் பெயர் :————.
(ஆ) ஏனைய பெயர்கள் :————.
2. தபால் முகவரி :————.
3. 1969 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29 ந் தேதியன்று உள்ளபடி வயது ......வரு. ........மா. ............ நாள்.
(ஆ) பிறந்த தேதி :————.
(பிறப்புச் சாட்சிப் பத்திரத்தின் பிரதி இணைக்கப்படல் வேண்டும்)
4. பின்வருவோர் பிறந்த இடம் :—
(அ) விண்ணப்பதாரரி :————.
(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் :————.
(இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப் பாட்டன் :————.
(ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப் பூட்டன் :————.
5. தேசிய இனமும், எப்படிப் பெறப்பட்டதென்பதும் :————.
6. விண்ணபபதாரி விவாகமானவரா ? விவாகம் செய்யாதவரா ? தாரமிழந்தவரா ? :————.

7. கல்வித் தகைமைகள், சித்தியுற்ற பொதுத் தேர்வுகளின் தேதிகளும் இறுதியாகத் தோற்றிய பொதுத் தேர்வில் எடுத்த பாடங்களும் :————

8. கல்வி முடிவுற்றபின் செய்த தொழில், தேதிகளுடனும், விபரங்களுடனும் :————.

9. தொழிநுட்ப அல்லது உயர் தொழிற்றகைமைகள், தேர்வில் அல்லது பயிற்சி முடிவின் தேதிகளுடன் :————.

10. உடற்பயிற்சி, விளையாட்டு நடவடிக்கைகளின் விபரங்கள் :————.

11. ஆங்கிலத்தில், சிங்களத்தில் அல்லது தமிழில் வாசித்தல், எழுதுதல் மொழிபெயர்ப்புத் தகைமைகள் :————.

12. தற்போதைய தொழிலும், சம்பளமும் :————.

13. குணச் சான்றிதழ்கள் வழங்காதவர்களும், விண்ணப்பதாரரை நேரடியாக அறிந்தவர்களுமான இரு நடுவர்களின் பெயர்களும், பதவியும் முகவரியும் :————.

14. யாதேனும் விசேட உரிமைகள் : உம். இவ்விண்ணப்பம் சம்பந்தமான வேலை அனுபவம் :————.

15. யுத்த சேவை இருப்பின் :————.

16. வேறு மேலதிக விபரங்கள் :————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும், செம்மையானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இவ்விபரங்களில் யாதேனும் உண்மையற்றவை அல்லது பிழையானவை எனத்தெரிவுக்குமுன் காணப்படின், நான் தகுதியற்றவராக்கப்படுவேன் எனவும், நியமனம் அளிக்கப்பட்ட பின் காணப்படின் எவ்வித நஷ்ட ஈடுமின்றி விலக்கப்படுவேன். எனவும் அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

திகதி :————

8—787—15.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,867

---

வெமு./6/நானுவித/29

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### பிரித்தானிய பல்கலைக் கழகங்களிலும் தொழில்நுட்ப நிலையங்களிலும் தமது சொந்தச் செலவில் எந்திரவியல் படிப்புகளையும் தொழில் நுட்பப் படிப்புகளையும் பின்பற்றுவதற்கு அனுமதி கோரும் மாணவர்கள்

**(கழகவாண்டு—1970 செப்ரெம்பர்/ஒக்ரோபர்)**

பிரித்தானியாவிலுள்ள பல்கலைக் கழகங்களிலும் ஏனைய தொழில்நுட்ப நிலையங்களிலும் தமது சொந்தச் செலவில் எந்திரவியல் படிப்புகளையும் தொழில்நுட்பப் படிப்புகளையும் 1970 ஆம் ஆண்டு செப்ரெம்பர்/ஒக்ரோபர் ஆரம்பமாகப் பின்பற்றுதற்கு அனுமதிகோரும் மாணவர்கள் தமது விண்ணப்பங்களை கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் வெளிநாட்டு முகவராண்மைக் கிளையிலிருந்து பெறற்பாலனவாகிய படிவங்களில் **முப்பிரதியில்** தயாரித்தனுப்பவேண்டும்.

2. **தகைமைகள் :**

(அ) பல்கலைக் கழகங்களுக்கு அனுமதிகோரும் மாணவர்கள் பின்வரும் மிகக்குறைந்த தகைமைகளைப் பெற்றிருக்க வேண்டும் :—
ஒரே தடவை தோற்றி இரு மொழிகள் உட்பட ஆறு பாடங்களில் க. பொ. த. (சாதாரண) பத்திரப் பரீட்சையில் சித்தி ; இம் மொழிகளுள் ஒன்று ஆங்கில மொழியாக இருக்கவேண்டும். இதில் திறமைச் சித்தி பெற்றிருப்பது விரும்பற்பாலது. ஏனைய பாடங்கள் கணிதம் உட்பட மூன்று விஞ்ஞான பாடங்களாக இருக்க வேண்டும். இவற்றுடன், மேற்கொள்ளப்படும் பாடநெறிக்குப் பொருத்தமான மூன்று விஞ்ஞான பாடங்களில் க.பொ.த. (உயர்தர) பத்திரப் பரீட்சையில் சித்தி.

(ஆ) தொழில்நுட்ப நிலையங்களுக்கு அனுமதிகோரும் மாணவர்கள் பின்வரும் மிகக்குறைந்த தகைமைகளைப் பெற்றிருக்க வேண்டும்:—
ஒரே தடவைகளில் தோற்றி இரு மொழிகள் உட்பட ஆறு பாடங்களில் க.பொ. த. (சாதாரணதர) பத்திரப் பரீட்சையில் சித்தி ; இம்மொழிகளுள் ஒன்று ஆங்கில மொழியாக இருக்க வேண்டும். இதில் திறமைச் சித்தி பெற்றிருப்பது விரும்பற்பாலது. ஏனைய பாடங்களில் கணிதம் உட்பட மூன்று விஞ்ஞான பாடங்களாக இருக்க வேண்டும். (சில நிலையங்களைப் பொறுத்தவரையில் இத்தகைமைகளுடன் க.பொ.த. (உயர்தர) பத்திரமும் உயர்தர தேசிய தகுதித் தேர்வுப் (H. N. D.) பயிற்சி நெறிகளுக்குத் தேவை)

3. சகல விண்ணப்பங்களுடனும் மேற்காணும் சாதனங்கள் அனுப்பப்பட வேண்டும் :—

(i) தராதரப் பத்திரங்களின் மூலகங்களின் ஒளிப்படப் படிகள் அல்லது சித்தியெய்திய பாடங்கள் தொடர்பில் பரீட்சாதிகாரியால் கொடுக்கப்பட்ட அத்தாட்சிப்படுத்தப்பட்ட பகுதிகள். (சிங்களத்தில் அல்லது தமிழில் கொடுபட்டுள்ள தராதரப் பத்திரங்கள் தொடர்பில் அவற்றின் ஆங்கில மொழிபெயர்ப்பு இணைக்கப்பட வேண்டும்).

(ii) கடவுச்சீட்டு அளவான, விண்ணப்பதாரியின் ஒளிப்படத்தின் மூன்று பிரதிகள் விண்ணப்பத்துடன் இணைக்கப்பட வேண்டும்.

(iii) பிரித்தானியாவில் பயிற்சிநெறி ஒன்றினைப்பின்பற்றுவதற்கு உடல் தகுதி உடையவரென அத்தாட்சிப்படுத்தும் வைத்திய சாட்சிப் பத்திரம்.

(iv) ஊடுகதிர்க் கூராய்வு பற்றி ஊடுகதிர்–கதிரியக்க நிபுணரின் அறிக்கை.

(v) இரண்டு நற்சாட்சிப் பத்திரங்கள் (மூலப் பிரதிகள்) ; இவற்றுள் ஒன்று கடைசியாகப் படித்த கல்லூரி அல்லது பாடசாலை அதிபரால் வழங்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

(vi) விண்ணப்பத்தில் குறிப்பிட்டுள்ள பயிற்சிநெறியைப் பின்பற்றுதற்கு விண்ணப்பதாரி தகுதியுடையவரென்றும் அவரை அனுமதித்தற்கு அவருடைய விண்ணப்பம் சீர்தூக்கப்படுமெனவும் சம்பந்தப்பட்ட நிலையத்தால் உறுதிப்படுத்தி வழங்கப்படும் ஒரு கடிதம்.

(vii) விண்ணப்பம் செய்யப்படும் பயிற்சி நெறிக்கு வேண்டிய பிறநாட்டு நாணயமாற்று அனுமதிக்கப்படும் எனக்கூறும் நாணயமாற்றுக் கட்டுப்பாட்டதிகாரியின் கடிதம் ஒன்று.

(viii) பணம் அனுப்புதற்கு பொறுப்பேற்கும் விண்ணப்பதாரியின் பெற்றோர் அல்லது பாதுகாவலர் குறைந்தபட்சம் ரூ. 30,000 அனுப்பக் கூடியவரென உரிய பகுதிக் காரியாதிகாரியால் வழங்கப்படும். ஓர் அறிக்கை. இதனைப் பெறுதற்குக் காரியாதிகாரிக்குப் பணம் ஒன்றும் கொடுக்க வேண்டியதில்லை.

4. இவ்வமைச்சால் விண்ணப்பம் அங்கீகரிக்கப்படுமிடத்து இவ்வலுவலகத்துக்கு ரூ. 150/– செலுத்தப்பட வேண்டும். எனினும், பல்கலைக் கழகம் அல்லது தொழில் நுட்ப நிலையம் விண்ணப்பத்தை ஏற்குமென பொறுப்பொன்றும் கொடுபட முடியாது.

5. விண்ணப்பம் ஏற்றுக்கொள்ளப்பட்டதும், படிப்புகளைப் பூர்த்தி செய்தவுடன் இலங்கைக்குத் திரும்பி வருவதாகவும் ஆகக்குறைந்த காலம் 5 வருடங்கள் இலங்கையில் கடமை புரிவதாகவும் இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை ஒன்றில் அபேட்சகர் கைச்சாத்திட வேண்டும்.

6. (அ) பல்கலைக் கழகங்களுக்கான (பல்கலைக் கழக மத்திய பேரவைப் பயிற்சி நெறிகளுக்கான) விண்ணப்பங்கள் முடிவடையும் திகதி 1969 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 15 ஆந் திகதியாகும்.

(ஆ) தொழில்நுட்ப நிலையங்களுக்கான விண்ணப்பங்கள் முடிவடையும் திகதி 1970 ஆம் ஆண்டு ஜூலை மாதம் 1 ஆந் திகதியாகும்.

7. புத்தகம் ஒன்றுக்கு ரூ. 6.50 கொடுத்து பல்கலைக் கழக மத்திய பேரவையின் கைந்நூலும் விண்ணப்பப் படிவங்களும் இவ்வலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ளப்படலாம்.

நிரந்தரச் செயலாளர்,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1969 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 7 ந் உ.

8–797—15.8.69 ந் தேதிய வர்த்தமானி இல. 14,867

எனதெண் : பொ./நி./5/1

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### பதவி : இயந்திரம் பொருத்துவோன், 1 ம் வகுப்பு

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள தொழில்நுட்ப நிலையங்களில் இயந்திரம் பொருத்துவோன், 1 ம் வகுப்பு பதவிக்குக் கீழ்க்காணும் நிபந்தனைகளைப் பெற்றுள்ள அபேட்சகர்களிட மிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே கொடுபட்டுள்ள மாதிரிப் படிவமுறையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு "நிரந்தரக் காரியதரிசி, (பொது நிர்வாகக் கிளை), கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2" என்ற விலாசத்துக்கு 1969 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும். காகித உறையின் இடது பக்க மேல் மூலையில் "இயந்திரம் பொருத்துவோன், 1 ம் வகுப்பு பதவி" எனத் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்**—

(i) இப்பதவி நிரந்தரமானது. நியமதாரி இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் அந்தஸ்து 7.2.64 ந் திகதிய 633 ம் இலக்கத் திறைசேரி சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கமையும், நியமதாரி மாதாந்தச் சம்பள அளவுத் திட்டத்தில் வைக்கப்பட்டதும் இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் அந்தஸ்து வழங்கப்படும்வரை அரசினர் சேவை சேமலாப நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும். இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் அந்தஸ்து வழங்கப்பட்டதும் விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும்.

(ii) நியமதாரி, அரசகரும மொழிச் சட்டத்தின் நோக்கங்களின் பொருட்டு, புதிய முறைப்படி நியமிக்கப்படுவாராயின் பரீட்சார்த்த காலம் 3 வருடங்களாகும்.

(iii) அரசினரின் கீழ் ஒரு நிரந்தர பதவியை வகிப்பவர் நியமிக்கப் படுவதற்குத் தெரிவு செய்யப்படின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு அவர் பதில் கடமைபுரியும் அல்லது பரீட்சார்த்த முறையில் நியமிக்கப்படுவார்.

(iv) நியமதாரி தீவின் எப்பகுதியிலும் கடமைபுரிய வேண்டும்.

(v) தெரிவு ஒரு நேர்முகப் பரீட்சை, ஒரு செயல்முறைப் பரீட்சை ஆகியவை மூலம் நடாத்தப்படும்.

3. **சம்பளமும் சகாயப் படிகளும்**—

(அ) கொழும்பு மாநகரசபை எல்லைக்குள்ளும் கொழும்பு மாநகரசபை எல்லையிலிருந்து 5 மைல் சுற்றுடலுக்குள்ளும் அல்லது எந்திர வியல் நிலையமாகத் திறைசேரியால் அங்கீகரிக்கப்பட்ட நிலையங் களில் சேவை புரிபவர்களுக்கு :—

முதல் ஆறு மாத காலத்துக்கு நாளொன்றுக்கு ரூ. 3.86 வீதமும் பின்னர் ரூ. 1,170—42 × 12—ரூ. 1,674 வருடாந்தம்.

(ஆ) எந்திரவியல் நிலையங்களாக திறைசேரியால் அங்கீகரிக்கப்படாத வையும் வெளியூர்களில் உள்ளவையுமான நிலையங்களில் சேவை புரிபவர்களுக்கு :—

முதல் ஆறுமாத காலத்துக்கு நாளொன்றுக்கு ரூ. 3.30 வீதமும் பின்னர் ரூ. 1,044—42 × 8—1,380 வருடாந்தம்.

சீவன சகாயப்படி, விசேட சீவன சகாயப்படி, வாடகைப்படி ஆகியவை அரசினர் விதிகளுக்கமையக் கொடுபடும்.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின் வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதாகத் திருப்திகரமான சான்று காட்ட வேண்டும் :—

(அ) விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதியன்று குறைந்தபட்சம் 25 வயதுக்குக் குறையாதவராயும் 35 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ளவர்களுக்கு இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை அமையாது.

(ஆ) (i) வாசிக்க, எழுதக் கூடியவராய் இருக்க வேண்டும்.

(ii) நுண்ணளவுமானியால் தசம அளவுகளை அளந்து விளங்கிக் கொள்ளக்கூடியவராய் இருக்க வேண்டும்.

(iii) அவர் நியமிக்கப்படும் எந்திரவியல் பிரிவிலுள்ள இயந்திரங் களை இயக்குதற்கான அடிப்படைக் கொள்கைகள் அல்லது அங்கு நடைபெறும் வேலை பற்றிய போதிய அறிவு பெற்றி ருக்க வேண்டும்.

(iv) அத்தகைய வேலைக்குப் பொருத்தமான வரைதல்களை விளங் கக் கூடியவராய் இருக்க வேண்டும்.

(v) பின்வரும் வகுதிகளிலுள்ள இயந்திரங்களில் எதனையேனும் இயக்கக் கூடியவராய் இருக்க வேண்டும் :—
(அ) கடைச்சல் எந்திரம்,
(ஆ) ஆலை எந்திரங்கள்,
(இ) உருவமை எந்திரங்கள்.

(இ) தொழில் பயில்வோனாக 10 வருட சேவை புரிந்திருக்க வேண்டும் இதில் குறைந்தபட்சம் 6 வருடங்கள் 1 ம் வகுப்புத் தொழில் பயில்வோனாக (இயந்திரம் பொருத்துவோன்) இருக்க வேண்டும். (சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.)

**குறிப்பு.**—ஐக்கிய இராச்சிய யுத்த களங்களில் தொழில் பயில்வோராக புரிந்த சேவை அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிலையத்தில் புரிந்த சேவையாக ஏற்றுக்கொள்ளப்படும்.

(ஈ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

5. அபேட்சகர்கள் வேண்டப்படும் நேரத்தில் பின்வரும் சாதனங்களில் எதனையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) ஆகக்கூடிய கல்வித் தகைமைப் பத்திரம்.

(ஆ) பிறப்புச் சாட்சிப் பத்திரம்.

(இ) தொழில் தகைமைப் பத்திரங்களும் தொழில்நுட்பத் தகைமை பத்திரங்களும் அல்லது இவற்றில் எவையேனும்.

(ஈ) மேற்போந்த 4(இ) ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அங்கீகரிக்கப் பட்டுள்ள நிறுவனத்தில் புரிந்த சேவையை அத்தாட்சிப் படுத்தும் அத்தாட்சிப் பத்திரங்கள்.

(உ) சிங்களத்தில்/தமிழில் அல்லது சிங்களத்திலும் தமிழிலும் சித்தி யெய்திய ஆகக்கூடிய பரீட்சைத் தராதரப் பத்திரம்.

(ஊ) இரு நற்சாட்சிப் பத்திரங்கள்—இதில் ஒன்று கிராமசேவகரால் வழங்கப்பட்டதாக இருக்கவேண்டும்.

**குறிப்பு**—(i) சாதனங்களையேனும் அல்லது அவற்றின் பிரதிகளை யேனும் விண்ணப்பப் பத்திரத்துடன் இணைத்தனுப்பத் தேவையில்லை.

(ii) கேட்கப்படும் நேரத்தில் சாதனங்களைச் சமர்ப்பிக்கத் தவறு வோரின் விண்ணப்பங்கள் சீர்தூக்கப்படமாட்டா.

6. அபேட்சகர்கள் தமது விண்ணப்பங்களைத் தத்தம் பகுதி/நிலையத் தலைவர்கள் மூலம் அனுப்ப வேண்டும். விதிக்கப்பட்டுள்ள திகதிக்குப் பின் இக்காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளப்படும் இத்தகைய விண் ணப்பங்கள், விதிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அவை உரிய பகுதி/நிலையத் தலைவரால் பெற்றுக்கொள்ளப்பட்டனவென்றும் நியாயமான காரணங்களைக் காட்டி அவற்றை ஏற்றுக்கொள்ளும்படி அப்பகுதி/நிலையத் தலைவர் சிபார்சு செய்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

7. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ம் பாகம், (II) ம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

8. சகல விண்ணப்பங்களும் பெற்றுக்கொள்ளப்பட்டமை பற்றி அறி விக்கப்படும். அத்தகைய அறிவித்தலை இவ்விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 21 நாட்களுள் பெறத்தவறும் அபேட்சகர்கள், கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் மகா வித்தியாதிபதிக்கு அது பற்றி உடனே அறிவிக்க வேண்டும். இவ் வேற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் அபேட்சகர்கள் தனது உரிமை சீர்தூக்கப்படுவதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரக் காரியதரிசி.

பொது நிர்வாகக் கிளை,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
1969 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 8 ந உ.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

### இயந்திரம் பொருத்துவோன், 1 ம் வகுப்பு பதவிக்கான விண்ணப்பம்

தொடரெண் பொ: நி/5/102

1. முழுப்பெயர் (தெளிவாக) :————.
2. நிரந்தர விலாசம் :————.
3. சொந்த இடம் :————.
4. விண்ணப்ப முடிவுத் திகதியன்று உள்ளபடி வயது :————.
   பிறந்த திகதி :————.
5. பின்வருவோர் பிறந்த இடம்—
   (அ) விண்ணப்பதாரி :————.
   (ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் :————.
   (இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் :————.
   (ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் :————
6. இலங்கைப் பிரஜையா? அங்ஙனமாயின் வம்சாவழியினாலா பதிவு காரணமாகவா? :————.

7. கல்வித் தகமைகள்—
(i) பொது :————.
(ii) தொழில் தகைமைகளும் தொழில்நுட்பத் தகைமைகளும் :———.
(iii) சிங்களத்தில்/தமிழில் சித்தி எய்திய ஆகக்கூடிய பரீட்சை :————.

8. அறிவித்தலின் 4 ம் பந்தியின் (உ) ம் பிரிவில் கேட்கப்படும் சேவை விபரங்கள் (நிலையம், சேவைக்காலம், வகித்த பதவிகள் ஆகியவை குறிப்பிடப்பட வேண்டும்) :————.

9. விவாகம் செய்தவரா, செய்யாதவரா, தாரமிழந்தவரா? :————.

10. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக உம்மீது குற்றத்தீர்ப்பு அளிக்கப்பட்டதா? அங்ஙனமாயின் (அ) திகதி (ஆ) வழக்கு இலக்கம், (இ) குற்றத்தீர்ப்பின் தன்மை ஆகியவற்றைக் கொடுக்கவும் :————.

11. நீர் பணமுட்டு அற்றவரா? பணமுட்டு இருப்பின், எவ்வளவுக்கு :————.

12. யுத்த சேவையிலிருந்து விலகியவராயின்—
(அ) படைக்கூற்றின் பெயர் :————.
(ஆ) வகித்த பதவி :————.
(இ) சேர்ந்த, விலகிய திகதிகள் :————.

13. ஒழுக்க நடவடிக்கை யாதேனும் உம்மீது எடுக்கப்பட்டதா? அங்ஙனமாயின் முழு விபரங்களையும் கொடுக்கவும் :————.

14. பாடசாலையில் இருந்து விலகியதன் பின் வகித்த உத்தியோகம் :————.
(i) வகித்த பதவி :————.
(ii) சேர்ந்த, விலகிய திகதிகள் :————.
(iii) விலகியதற்கான காரணம் :————.

15. அரசினரின் கீழ் அல்லது உள்ளூர் ஆட்சிச் சபையொன்றின் கீழ் சேவை புரிந்திருப்பின், நிரந்தர பதவியா அல்லது தற்காலிக பதவியா வகித்தீர், சேவை எந்நேரத்திலேனும் நிறுத்தப்பட்டதா ஆகிய விபரங்களையும் (அ) அத்தகைய் உத்தியோகம், (ஆ) சேர்ந்த விலகிய திகதிகள், (இ) வேலை நிறுத்தப்பட்டதற்கான காரணங்கள் ஆகியவற்றையும் குறிப்பிடவும் :————.

16. தற்போதைய உத்தியோகம் — நிலையம் :————.
(i) பதவிப்பெயரும் தரமும் :————.
(ii) நியமனத் திகதி :————.
(iii) இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதா, தற்காலிகமானதா, சமயோசிதமா? :————.
(iv) தற்போதைய சம்பளமும் (சகாயப்படிகள் நீங்கலாக) சம்பள விகிதமும் :————.
(v) அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி :————.

17. வேறு யாதேனும் விபரங்கள் :————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின் தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமிக்கப்படுதற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————.
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————.

(பகுதி/நிலையத் தலைவரின் அத்தாட்சிப் பத்திரம்)

எனது எண் :
உங்கள் எண் : GA/5/102

நிரந்தரக் காரியதரிசி, க.க.அ. அமைச்சு,

விண்ணப்பம், விண்ணப்பங்கள் முடிவடைவதற்கான திகதியின் முன்/*பின் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டது.

...............இலக்கப் பந்திகளில் கொடுத்துள்ள விபரங்கள் சரியானவை/*பின்வரும் திருத்தங்கள் உட்பட சரியானவை. விண்ணப்பங்கள் உங்களுக்கு அனுப்பப்படுகிறது.

அபேட்சகர்கள் தெரிவு செய்யப்படுமிடத்து சேவையிலிருந்து அவரை விடமுடியும்/*விடமுடியாது.

பகுதி/நிலையத் தலைவரின் கையொப்பம்————.
பதவிப் பெயர் :————.

திகதி :————.

* பொருத்தமற்றதைக் கீறிவிடுக.

8–868/1—15.8.69 ந் தேதிய வர்த்தமானி இல. 14,867

---

GA/5/115

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### செவிப்புல, கட்புல நுண்தொழிலாளர் பதவி

அம்பாறை, ஹாடி சிரேட்ட தொழில்நுட்ப நிலையத்திலுள்ள செவிப்புல, கட்புல நுண்தொழிலாளர் பதவிக்கு, கீழ்க்காணும் தகைமைகளைத் திருப்தி செய்யும் அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே கொடுபட்டுள்ள மாதிரிப் படிவ முறையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு, " நிரந்தரக் காரியதரிசி (பொது நிருவாகக் கிளை), கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு 1969 ஆம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்.**—

(i) இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதுமாகும். விதவைகள், அனாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும் ;

(ii) நியமதாரி, அரசகரும மொழிச் சட்டத்தின் நோக்கங்களின் பொருட்டு, புதிய முறைப்படி நியமிக்கப்படுபவராயின் பரீட்சார்த்த காலம் 3 வருடமாகும் ;

(iii) அரசாங்க சேவையில் ஏற்கனவே ஒரு நிரந்தர பதவியை வகிப்பவர் தெரிவு செய்யப்படுமிடத்து, விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு அவர் பதில் கடமை புரிய வேண்டும் ;

(iv) தெரிவு செய்யப்படும் அபேட்சகர் தீவின் எப்பகுதியிலேனும் கடமை புரிய வேண்டும் ;

(v) நியமதாரி, பகுதித் தலைவரால் வேண்டப்படின், அரசாங்க உத்தியோகத்தர் (பிணைச்) சட்டத்துக்கிணங்க பிணை கட்ட வேண்டும் ;

(vi) தெரிவு ஒரு நேர்முகப் பரீட்சை மூலம் நடாத்தப்படும்.

3. **சம்பளமும் சகாயப்படிகளும்.**—இப்பதவிக்குரிய சம்பள அளவுத் திட்டம்—ரூ. 1,860 — 120 — 3,780 (வருடாந்தம்) ஆகும். சீவன சகாயப்பணம், விசேட சீவன சகாயப் பணம், வாடகைப்பணம் ஆதியன அரசாங்க விதிகளுக்கமைய வழங்கப்படும்.

4. **தேவைப்படும் தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதாகத் திருப்திகரமான சான்று காட்ட வேண்டும் :—

(அ) (i) சிரேட்ட பாடசாலைத் தராதரப் பத்திரம், அல்லது

(ii) இரு தடவைகளுக்கு மேற்படாது தோற்றி சிங்கள/தமிழ் மொழி, எண்கணிதம்/கணிதம் ஆகியவை உட்பட ஆறு பாடங்களில் கல்விப் பொதுத் தராதர (சாதாரணதர) பத்திரம், அல்லது

(iii) சமனான அல்லது உயர்ந்த தராதரப் பத்திரம் பெற்றிருக்க வேண்டும்.

**குறிப்பு.**—தலைமைக் கந்தோரிலும் பிரதேச கல்வித் திணைக்களங்களிலும் கடமை புரியும் சலனப்பட இயக்குநரும் சலனப்பட உதவி இயக்குநரும், அப்பதவியில் 10 வருடங்களுக்குக் குறையாத சேவை புரிந்திருப்பின் அவர்களுடைய கல்வித் தரங்கள் எப்படியிருப்பினும் சேர்த்துக்கப்படுவார்கள்.

(ஆ) ஒளிப்படவியலில் 5 வருட அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

(இ) பின்வரும் சாதனங்களை இயக்கக்கூடியவராயும் பேணக்கூடியவராயும் இருக்க வேண்டும் :—
35 மி. மீ. படமெறிகருவி,
வழுக்கிப் படமெறிகருவி,
மேலிருமை காட்டி,
பாட்டுத் தட்டியக்கி,
நாடாப் படியி,
16 மி. மீ. சலனப்பட, ஒலி எறிகருவி.

(ஈ) 1969 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 31 ஆந் திகதி 21 வயதுக்கு குறையாதவராயும் 35 வயதுக்கு மேற்படாதவராயும் இருக்க வேண்டும். இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ளவர்களுக்கு அமையாது.

5. அபேட்சகர்கள், வேண்டப்படும் நேரத்தில் பின்வரும் சாதனங்களில் எதையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) பிறப்புப் பதிவுச் சான்றிதழ். (மு. கு : சமய தீட்சைச் சான்றிதழ் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளுக்குரிய பிரமாணத் தொகுப்பின் பொருட்டு வழங்கப்பட்ட சான்றிதழ் ஏற்கப்படமாட்டாது) ;

(ஆ) ஆகக்கூடிய கல்வித் தராதரப் பத்திரங்களும் தொழில்நுட்பத் தராதரப் பத்திரங்களும் ;

(இ) 4 (ஆ) ம், (இ) ம் உப-பந்திகளில் கேட்கப்பட்டுள்ள அனுபவத்தையும் அறிவையும் உறுதிப்படுத்தும் தராதரப் பத்திரங்கள் ;

(ஈ) சிங்களத்தில்/தமிழில் சித்தி எய்திய ஆகக்கூடிய பரீட்சைத் தராதரப் பத்திரம் ;

(உ) சமீப காலத்தில் பெற்ற இரண்டு குணச் சான்றிதழ்கள், இவற்றுள் ஒன்று கிராம சேவகரால் வழங்கப்பட்டதாய் இருக்க வேண்டும்.

மு. கு : ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள அபேட்சகர்கள் மேலுள்ள (உ) ம் உப பந்தியில் கேட்கப்பட்டுள்ள குணச்சான்றிதழ்கள் கொடுக்க வேண்டியதில்லை.

குறிப்பு.—(1) சாதனங்களையாயினும் சாதனங்களின் படிகளையாயினும் விண்ணப்பப் படிவத்துடன் இணைக்கக்கூடாது ;

(2) சாதனங்களைச் சமர்ப்பிக்குமாறு வேண்டும்பொழுது அவற்றைச் சமர்ப்பிக்கத் தவறும் அபேட்சகர்களின் விண்ணப்பங்கள் கவனிக்கப்படமாட்டா.

6. அரசினர் சேவையிலுள்ள தகுதியுடைய அபேட்சகர்கள் தமது விண்ணப்பங்களை தத்தம் பகுதித் தலைவர்கள் மூலம் அனுப்ப வேண்டும். விதிக்கப்பட்ட திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள், சம்பந்தப்பட்ட பகுதித் தலைவரால் விதிக்கப்பட்ட திகதிக்கு முன் பெற்றுக் கொள்ளப்பட்டதெனவும் தாமதத்துக்குப் போதிய காரணம் காட்டி அவற்றை ஏற்குமாறு அவர் சிபார்சு செய்தாலன்றி ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

7. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் 1 ஆம் பாகம், 2 ஆம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

8. விண்ணப்பங்கள் பெற்றுக் கொண்டமை பற்றி அறிவிக்கப்படும். விண்ணப்பதாரிகள் விண்ணப்பம் பெற்றமை பற்றிய அறிவித்தலை விண்ணப்பங்கள் பெற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 21 நாட்களுக்குள் பெறத்தவறின், உடனே மகா வித்தியாதிபதிக்கு (பொது நிர்வாகக் கிளை) அறிவிக்க வேண்டும். இந்த ஏற்பாட்டின்படி ஒழுகத் தவறும் விண்ணப்பகாரர் தம் விண்ணப்பத்தைக் கவனிக்கும்படி கேட்கும் உரிமை எதுவும் உடையராகார்.

நிரந்தரச் செயலாளர்.

பொது நிர்வாகக் கிளை,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி,
கொழும்பு 2,
1969 ம் ௵ ஓகஸ்ற் ௴ 8 ந் உ.

## மாதிரி விண்ணப்பப் படிவம்

**கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு**

**செவிப்புல, கட்புல நுண்தொழிலாளர் பதவி**
**ஹாடி சிரேட்ட தொழில் நுட்ப நிலையம்**

(தொடரெண் : பொ. நி/5/115)

1. முழுப்பெயர் (தெளிவான எழுத்துகளில்) :————.

2. தபால் விலாசம் :————.
(விலாசத்தில் ஏற்படும் யாதேனும் மாற்றம் உடனே அறிவிக்கப்பட வேண்டும்)

3. (i) சகாயம் :————.
(ii) வம்சாவழி காரணமாக இலங்கையரா எனக் குறிப்பிடவும் : ————.
(iii) பதிவுகாரணமாக இலங்கையரா எனக் குறிப்பிடவும் :————
(iv) பதிவு காரணமாயின் பிரசாவுரிமைச் சான்றிதழின் இலக்கம், திகதி :————.

4. (அ) பிறந்த திகதி :————.
(ஆ) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியன்று உள்ளபடி வயது :—
வரு. :———— மாதம் :———— நாள் :————

5. பின்வருவோர் பிறந்த இடம் :—
(அ) விண்ணப்பதாரி :————.
(ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் :————.
(இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் :————.
(ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் :————.

6. விவாகம் செய்தவரா, செய்யாதவரா ? :————.

7. (அ) 15 வயது தொடக்கம் படித்த பாடசாலைகள், கல்லூரி, நிலையங்கள் :—

| பொதுக் கல்வி | | | உயர்தொழில் தொழில்நுட்பக்கல்வி (யாதேனும் படித்திருப்பின்) | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | தொடக்கம் | வரை | நிலையம் | தொடக்கம் | வரை |
| | | | | | |

(ஆ) கடைசிப் பாடசாலையிலிருந்து விலகய திகதி :————.

8. கல்வித் தகைமைகள் :—
(அ) சி. பா. த. பத்திரம்—பாடங்களும் வருடமும் :————.
(ஆ) க. பொ. த. பத்திரம்—பாடங்களும் வருடமும் :————.
(இ) ஏனைய தகைமைகள் :————.

9. உயர்தொழில் தகைமைகளும் தொழில் நுட்பத் தகைமைகளும் அல்லது இவைகளில் யாதேனும் (யாதேனும் இருப்பின்) :—
தராதரப் பத்திரம் :————. நிலையம் :————. வரு. :————.

10. ஒளிப்படவியலில் பெற்றுள்ள அனுபவம் பற்றிய விபரங்கள் :————
(நிலையங்களும் சேவைக் காலமும் குறிப்பிடப்பட வேண்டும்)

11. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக உம்மீது குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டதா ? அங்ஙனமாயின், (அ) தீர்ப்பு அளிக்கப்பட்ட திகதி, (ஆ) வழக்கு எண், (இ) குற்றத் தீர்ப்பின் தன்மை ஆகியவற்றைக் குறிப்பிடுக :————.

12. நீர் பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு உமக்கு இருப்பின், எவ்வளவுக்கு :————.

13. உமக்கு எதிராக யாதேனும் ஒழுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதா ? அங்ஙனம் எடுக்கப்பட்டிருப்பின் விபரங்களைக் கொடுக்கவும் :————

14. முன்னர் யாதேனும் படையில் சேவை புரிந்து விலகியவராயின்—
(அ) படைக்கூற்றின் பெயர் :————.
(ஆ) வகித்த பதவி :————.
(இ) சேர்ந்த, விலக்கப்பட்ட திகதிகள் ஆகியவற்றைக் குறிப்பிடுக :————.

15. பாடசாலையிலிருந்து விலகிய காலம் தொடக்கம் புரிந்த உத்தியோகம் :—
(i) வகித்த பதவிகள் :————.
(ii) சேர்ந்த, விலகிய திகதிகள் :————.
(iii) விலகியதற்கான காரணம் :————.

16. அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு ஸ்தல ஆட்சிச் சபையின் கீழ் முன்னர் கடமை புரிந்திருப்பின் நிரந்தர பதவியா அல்லது தற்காலிக பதவியா வகித்தீர், சேவை எந்நேரத்திலேனும் நிறுத்தப்பட்டதா ஆகிய விபரங்களையும், (அ) அத்தகைய உத்தியோகம், (ஆ) சேர்ந்த, விலகிய திகதிகள், (இ) வேலை நிறுத்தப்பட்டதற்கான காரணங்கள் ஆகியவற்றையும் குறிப்பிடவும் :————.

17. தற்போது வகிக்கும் உத்தியோக விபரங்கள் :—
(i) நிலையம் அல்லது பகுதி :————.
(ii) பதவிப் பெயரும் பதவியின் தரமும் :————.
(iii) இப்பதவிக்கு நியமிக்கப்பட்ட திகதி :————.
(iv) இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதா/தற்காலிகமானதா/சமயோசிதமா :————.
(v) தற்போதைய (சகாயப்படிகள் உட்படாத) சம்பளமும் சம்பள விகிதமும் :————.
(vi) அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி :————.

18. வேறு யாதேனும் தகவல் :————.

19. இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதி யளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற் கும் நியமிக்கப்படுதற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

திகதி :————. ————, விண்ணப்பதாரியின் கையொப்பம்.

ஏற்கனவே சேவையிலுள்ளவர்களின் விண்ணப்பங்கள் கீழ்க்காணும் புறக்குறிப்புடன் அனுப்பப்பட வேண்டும்.

**(பகுதித் தலைவர் அத்தாட்சிப்படுத்துதல்)**

எனது எண் :
உங்கள் எண் : பொ. நி/5/115.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்வதற்கான கடைசித் திகதிக்கு முன்*/பின் இவ்விண்ணப்பம் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப் பட்டது.

.......... ம் இலக்கப் பந்திகளில் கொடுத்துள்ள விபரங்கள் சரியானவை*/பின்வரும் திருத்தங்களுக்கமையச் சரியானவை* என நான் அத்தாட்சிப்படுத்துகிறேன்.

..............................
..............................
..............................

திகதி :————. ————, பகுதித் தலைவரின் கையொப்பம்.

*பொருத்தமற்றவற்றைக் கீறிவிடுக.

8-868/2—15.8.69 ந திகதிய வர்த்தமானி இல. 14,867

---

எனதெண்: பொ/நி/5/90

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

**பதவி : 1 ம் வகுப்புத் தச்சர்**

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் கீழுள்ள தொழில் நுட்ப நிலையங்களில் 1 ம் வகுப்பு தச்சர் பதவிகளுக்கு கீழ்க்காணும் நிபந்தனை களைப் பெற்றுள்ள அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படு கின்றன. கீழே கொடுபட்டுள்ள மாதிரிப் படிவமுறையில் விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு " நிரந்தரக் காரியதரிசி (பொது நிர்வாகக் கிளை), கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு, மலாய் வீதி, கொழும்பு 2 " என்ற விலாசத்துக்கு 1969 ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 31 ஆந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பப்பட வேண்டும். காகித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "1 ம் வகுப்புத் தச்சர் பதவி" எனத் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

2. **நியமன நியதிகளும் சேவை நிபந்தனைகளும்**

(i) இப்பதவி நிரந்தரமானது. நியமதாரி இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் அந்தஸ்து 7.2.64 ந திகதிய 633 ம் இலக்கத் திறைசேரி சுற்றுநிருபத்தின் ஏற்பாடுகளுக்கமையும். நியமதாரி மாதாந்தச் சம்பள அளவுத் திட்டத்தில் வைக்கப்பட்டதும் இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் அந்தஸ்து வழங்கப்படும்வரை அரசினர் சேவை சேமலாப நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும். இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் அந்தஸ்து வழங்கப்பட்டதும் விதவைகள், அநாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிக்குக் கட்டணங்கள் செலுத்தப்பட வேண்டும்.

(ii) நியமதாரி, அரசகரும மொழிச் சட்டத்தின் நோக்கங்களின் பொருட்டு, புதிய முறைப்படி நியமிக்கப்படுவராயின் பரீட்சார்த்த காலம் 3 வருடங்களாகும்.

(iii) அரசினரின் கீழ் ஒரு நிரந்தர பதவியை வகிப்பவர் நியமிக்கப் படுதற்குத் தெரிவு செய்யப்படின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு அவர் பதில் கடமை புரியும் அல்லது பரீட்சார்த்த முறையில் நியமிக்கப்படுவார்.

(iv) நியமதாரி தீவின் எப்பகுதியிலும் கடமை புரிய வேண்டும்.

(v) தெரிவு ஒரு நேர்முகப் பரீட்சை, ஒரு செயல்முறைப் பரீட்சை ஆகியவை மூலம் நடாத்தப்படும்.

3. **சம்பளமும் சகாயப் படிகளும்**

(அ) கொழும்பு மாநகர சபை எல்லைக்குள்ளும் கொழும்பு மாநகரசபை எல்லையிலிருந்து 5 மைல் சுற்றுடலுக்குள்ளும் அல்லது எந்திர வியல் நிலையமாகத் திறைசேரியால் அங்கீகரிக்கப்பட்ட நிலையங் களில் சேவை புரிபவர்களுக்கு :—

முதல் ஆறு மாத காலத்துக்கு நாளொன்றுக்கு ரூ. 3.86 வீதமும் பின்னர் ரூ. 1,170–42 × 12—1,674 வருடாந்தம்.

(ஆ) எந்திரவியல் நிலையங்களாக திறைசேரியால் அங்கீகரிக்கப்படா வையும் வெளியூர்களில் உள்ளவையுமான நிலையங்களில் சேவை புரிபவர்களுக்கு :—

முதல் ஆறு மாத காலத்துக்கு நாளொன்றுக்கு ரூ. 3.30 வீத மும் பின்னர் ரூ. 1,044–42 × 8—1,380 வருடாந்தம்.

சீவன சகாயப்படி, விசேட சீவன சகாயப்படி, வாடகைப்படி ஆகியவை அரசினர் விதிகளுக்கமையக் கொடுபடும்.

4. **தேவைப்படும் தகைமைகள்**

ஒவ்வொரு விண்ணப்பதாரியும் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்வதாகத் திருப்திகரமான சான்று காட்ட வேண்டும் :—

(அ) 25 வயதுக்குக் குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாத வராகவும் இருக்க வேண்டும். இவ்வயதுக் கட்டுப்பாட்டின் மேலெல்லை ஏற்கனவே அரசினர் சேவையில் உள்ளவர்களுக்கு அமையாது.

(ஆ) (i) வாசிக்க, எழுதக் கூடியவராய் இருக்க வேண்டும்.

(ii) 1/32 " வரையறையுள்ள அளவுத் திட்டங்களை விளங்கிக் கொள்ளக்கூடியவராய் இருக்க வேண்டும்.

(iii) வரைதல்களை விளங்கிக் கொள்ளக்கூடியவராய் இருக்க வேண்டும்.

(iv) இத்தொழிலுக்குத் தேவையான கருவிகளின் பெயர்கள், உபயோகம், பேணல் முறை ஆகியவை பற்றி நன்று அறிந் திருக்க வேண்டும்.

(v) தான் ஈடுபட இருக்கும் தச்சுவேலையையும் இணைப்பு வேலை யையும் பற்றி நன்றாய் அறிந்திருப்பதுடன் அத்தகைய எவ்வேலையையும் செய்யக்கூடியவராய் இருத்தல் வேண்டும்.

(இ) தொழில் பயில்வோனாக 10 வருட சேவை புரிந்திருக்க வேண்டும். இதில் குறைந்தபட்சம் 6 வருடம் 1 ம் வகுப்புத் தொழில் பயில் வோராக (தச்சர்) இருக்க வேண்டும். (சான்றிதழ் சமர்ப்பிக்கப்பட வேண்டும்)

**குறிப்பு** .—ஐக்கிய இராச்சிய யுத்த களங்களில் தொழில் பயில்வோராக புரிந்த சேவை அங்கீகரிக்கப்பட்ட ஒரு நிலையத்தில் புரிந்த சேவையாக ஏற்றுக் கொள்ளப்படும்.

(ஈ) சிறந்த நல்லொழுக்கமும் உடல் நலமும் உடையவராய் இருக்க வேண்டும்.

5. அபேட்சகர்கள் வேண்டப்படும் நேரத்தில் பின்வரும் சாதனங் களில் எதனையேனும் எல்லாவற்றையேனும் சமர்ப்பிக்க வேண்டும் :—

(அ) ஆகக்கூடிய கல்வித் தகைமைப் பத்திரம்.

(ஆ) பிறப்புச்சாட்சிப் பத்திரம்.

(இ) தொழில் தகைமைப் பத்திரங்களும் தொழில்நுட்பத் தகைமை பத்திரங்களும் அல்லது இவற்றில் எவையேனும்.

(ஈ) மேற்போந்த 4 (உ) ம் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள அங்கீகரிக்கப் பட்டுள்ள நிறுவனத்தில் புரிந்த சேவையை அத்தாட்சிப்படுத்தும் அத்தாட்சிப் பத்திரங்கள்.

(உ) சிங்களத்தில்/தமிழில் அல்லது சிங்களத்திலும் தமிழிலும் சித்தி யெய்திய ஆகக்கூடிய பரீட்சைத் தராதரப் பத்திரம்.

(ஊ) இரு நற்சாட்சிப்பத்திரங்கள்—இவற்றுள் ஒன்று கிராம சேவகரால் வழங்கப்பட்டதாக இருக்க வேண்டும்.

**குறிப்பு.**—(i) சாதனங்களையேனும் அல்லது அவற்றின் பிரதிகளையேனும் விண்ணப்பப் பத்திரத்துடன் இணைத்தனுப்பத் தேவையில்லை.

(ii) கேட்கப்படும் நேரத்தில் சாதனங்களைச் சமர்ப்பிக்கத் தவறுவோரின் விண்ணப்பங்கள் சீர்தூக்கப்படமாட்டா.

6. அபேட்சகர்கள் தமது விண்ணப்பங்களை தத்தம் பகுதி/நிலையத் தலைவர்கள் மூலம் அனுப்ப வேண்டும். விதிக்கப்பட்டுள்ள திகதிக்குப் பின் இக்காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளப்படும் இத்தகைய விண்ணப்பங்கள், விதிக்கப்பட்ட திகதியன்று அல்லது அதற்கு முன்னர் அவை உரிய பகுதி/நிலையத் தலைவரால் பெற்றுக் கொள்ளப்பட்டன வென்றும் நியாயமான காரணங்களைக் காட்டி அவற்றை ஏற்றுக் கொள்ளும்படி அப்பகுதி/நிலையத் தலைவர் சிபார்சு செய்தாலன்றி ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

7. அரசாங்க சேவையிலுள்ள பதவிகளுக்காய நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகள் இந்த வர்த்தமானியின் I ம் பாகம், (II) ம் பிரிவில் வெளியிடப்பட்டுள ; அவற்றைப் பார்க்க.

8. சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி அறிவிக்கப்படும். அத்தகைய அறிவித்தலை இவ்விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 21 நாட்களுக்குள் பெறத் தவறும் அபேட்சகர்கள், கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் மகா வித்தியாதிபதிக்கு அது பற்றி உடனே அறிவிக்க வேண்டும். இவ்வேற்பாட்டின் பிரகாரம் ஒழுகத் தவறும் அபேட்சகர்கள் தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

பொது நிர்வாகக் கிளை,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2, 8.8.1969

(மாதிரி விண்ணப்பப் படிவம்)

**1 ம் வகுப்புத் தச்சர் பதவிக்கான விண்ணப்பம்**

தொடரெண்/5/90

1. முழுப்பெயர் (தெளிவாக) :————.
2. நிரந்தர விலாசம் :————.
3. சொந்த இடம் :————.
4. விண்ணப்ப முடிவுத் திகதியன்று உள்ளபடி வயது :————.
   பிறந்த திகதி :————
5. பின்வருவோர் பிறந்த இடம் :—
   (அ) விண்ணப்பதாரி :————.
   (ஆ) விண்ணப்பதாரியின் தகப்பன் :————.
   (இ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பாட்டன் :————.
   (ஈ) விண்ணப்பதாரியின் தகப்பன் வழிப்பூட்டன் :————.
6. இலங்கைப் பிரஜையா ? அங்ஙனமாயின் வம்சாவழியினாலா பதிவு காரணமாகவா ?————.
7. கல்வித் தகைமைகள் :
   (i) பொது :————.
   (ii) தொழில் தகைமைகளும் தொழில்நுட்பத் தகைமைகளும் :————.
   (iii) சிங்களத்தில்/தமிழில் சித்தி எய்திய ஆகக்கூடிய பரீட்சை :————.
8. அறிவித்தலின் 4 ம் பந்தியின் (உ) ம் பிரிவில் கேட்கப்படும் சேவை விபரங்கள் (நிலையம், சேவைக்காலம், வகித்த பதவிகள் ஆகியவை குறிப்பிடப்பட வேண்டும்) :————.
9. விவாகம் செய்தவரா, செய்யாதவரா, தாரமிழந்தவரா ? :————.
10. சட்டமுறை நீதிமன்றத்தில் யாதேனும் குற்றவியல் தவறுக்காக உம்மீது குற்றத் தீர்ப்பு அளிக்கப்பட்டதா ? அங்ஙனமாயின் (அ) திகதி, (ஆ) வழக்கு இலக்கம், (இ) குற்றத்தீர்ப்பின் தன்மை ஆகியவற்றைக் கொடுக்கவும் :————.
11. நீர் பணமுட்டு அற்றவரா ? பணமுட்டு இருப்பின், எவ்வளவுக்கு :————.
12. யுத்த சேவையில் இருந்து விலகியவராயின்—
   (அ) படைக்கூற்றின் பெயர் :————.
   (ஆ) வகித்த பதவி :————.
   (இ) சேர்ந்த, விலகிய திகதிகள் :————.
13. ஒழுக்க நடவடிக்கை யாதேனும் உம்மீது எடுக்கப்பட்டதா ? அங்ஙனமாயின் முழு விபரங்களையும் கொடுக்கவும் :————.
14. பாடசாலையில் இருந்து விலகியதன் பின் வகித்த உத்தியோகம் :
   (i) வகித்த பதவி :————.
   (ii) சேர்ந்த, விலகிய திகதிகள் :————.
   (iii) விலகியதற்கான காரணம் :————.
15. அரசினரின் கீழ் அல்லது உள்ளூர் ஆட்சிச் சபையொன்றின் கீழ் சேவை புரிந்திருப்பின் நிரந்தர பதவியா அல்லது தற்காலிக பதவியா வகித்தீர், சேவை எந்நேரத்திலேனும் நிறுத்தப்பட்டதா ஆகிய விபரங்களையும் (அ) அத்தகைய உத்தியோகம், (ஆ) சேர்ந்த, விலகிய திகதிகள், (இ) வேலை நிறுத்தப்பட்டதற்கான காரணங்கள் ஆகியவற்றையும் குறிப்பிடவும் :————.
16. தற்போதைய உத்தியோகம் :———— நிலையம் :————.
   (i) பதவிப் பெயரும் தரமும் :————.
   (ii) நியமனத் திகதி :————.
   (iii) இளைப்பாற்றுச் சம்பள உரித்துடையதா, தற்காலிகமானதா, சமயோசிதமா? :————,
   (iv) தற்போதைய சம்பளமும் (சகாயப்படிகள் நீங்கலாக) சம்பள விகிதமும் :————.
   (v) அடுத்த சம்பள உயர்ச்சித் திகதி :————.
17. வேறு யாதேனும் விபரங்கள் :————.

இவ்விண்ணப்பப் படிவத்தில் நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும் சரியானவையுமென இத்தால் உறுதியளிக்கின்றேன். இங்கு கொடுத்துள்ள விபரங்கள் எவையேனும் பொய்யானவை அல்லது பிழையானவை எனக் காணப்படின் தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் நியமிக்கப்படுதற்குப் பின்னராயின் எவ்வித நஷ்ட ஈடின்றி விலக்கப்படுதற்கும் பாத்திரராவேன் என அறிவேன்.

————,
விண்ணப்பதாரியின் கையொப்பம்.

திகதி :————

(பகுதி/நிலையத் தலைவரின் அத்தாட்சிப் பத்திரம்)

எனது எண் :
உங்கள் எண் : பொ. நி 5/90.

நிரந்தரக் காரியதரிசி, க. க. அ. அமைச்சு.

விண்ணப்பம், விண்ணப்பங்கள் முடிவடைதற்கான திகதியன்முன்/* பின் இவ்வலுவலகத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டது.

......இலக்கப் பந்திகளில் கொடுத்துள்ள விபரங்கள் சரியானவை/* பின்வரும் திருத்தங்கள் உட்பட சரியானவை. விண்ணப்பங்கள் உங்களுக்கு அனுப்பப்படுகிறது.

அபேட்சகர் தெரிவு செய்யப்படுமிடத்து சேவையிலிருந்து அவரை விடமுடியும்/விடமுடியாது .

————,
பகுதி/நிலையத் தலைவரின் கையொப்பம்.
பதவிப் பெயர் :————.

திகதி :————.

*பொருத்தமற்றதைக் கீறிவிடுக.

8—868/3—15.8.69 ந திகதிய வர்த்தமானி இல. 14,867

---

## விஞ்ஞான ஆராய்ச்சி வீடமைப்பு அமைச்சு

**வரைவாளர் இலிகிதர் பதவி—II ம் தரம்**

இந்த அலுவலகத்தில் வரைவாளர் இலிகிதர்—II ம் தரப் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. கீழே காட்டப்பட்டவாறான படிவத்தில் விண்ணப்பங்கள் இருத்தல் வேண்டும். 1969 ம் ஆண்டு செப்தம்பர் மாதம் 8 ந் தேதியன்று அல்லது அதற்கு முன்னர் என்னை வந்தடைதல் வேண்டும்.

2. **சம்பள அளவுத்திட்டம்.**—ஆண்டொன்றுக்கு 1,260 ரூபாவிற் தொடங்கி ரூபா 120 தொகைகொண்ட 21 ஆண்டுச் சம்பள ஏற்றங்களினூல் ஆண்டொன்றுக்கு ரூபா 3,780 வரை உயர்ந்து செல்லும். இதற்கிடையில் ரூபா 2,820 க்கு முன்னர் வினைத்திறமை காண்தடையுண்டு.

3. **சேவை நிபந்தனைகள்.**—இப்பதவி நிரந்தரமானதும் இளைப்பாற்றுச் சம்பளமுடையதாகும். தேர்ந்தெடுக்கப்பட்ட அபேட்சகர் மூன்று வருடத்துக்குத் தகுதிகாண் நிலையில் அமர்த்தப்படுவர்.

4. **தேவையான தகைமைகள்.**—ஒவ்வொரு அபேட்சகரும் பின்வரும் தகைமைகளை உடையவர் என்பதற்கு திருப்தியான சான்று காட்டவேண்டும் :—

(அ) இலங்கைப் பிரஜையாக இருத்தல் வேண்டும் ;

(ஆ) 1969 ம் ஆண்டு செப்தம்பர் 8 ந் தேதியன்று 21 வயதுக்குக் குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும். (ஆகக்கூடிய வயதெல்லை ஏற்கெனவே அரசாங்க சேவையிலுள்ள உத்தியோகத்தர்களுக்கு ஏற்புடையதாகாது);

(இ) திறமையான நல்லொழுக்கமும் உடல்நலமும் உடையவராய் இருத்தல் வேண்டும் ;

(ஈ) (i) ஆரம்ப கணிதத்தை ஒரு பாடமாகச் சிரேட்ட பாடசாலைப் பத்திர வகுப்பில், அல்லது

(ii) பாஷை, ஆரம்ப கணிதம் ஆகியவை உட்பட ஆறுபாடங்களில் இரண்டு தடவைகளுக்கு மேற்படாது பெற்ற கல்விப் பொதுத் தராதர (சாதாரண) பரீட்சையில், அல்லது

(iii) இதற்குச் சமமான அல்லது உயர்ந்த பரீட்சையில் சித்தி அடைந்தவராயும், அத்துடன்

(அ) இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரியில் வரைவாளர் கற்கை நெறியில் ஓராண்டு முழுநேரக் கற்கை நெறியையும் ஈராண்டுத் தொழிற் பயிற்சிக் காலத்தையும் திறமையாக முடித்தவராய் இருத்தல் வேண்டும், அல்லது

(ஆ) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியில் சிறுமேற்பார்வையாளர் கற்கை நெறியை அல்லது கனிட்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர் கற்கை நெறியை ஓராண்டுத் தொழிற் பயிற்சியோடு திறமையாக முடித்தவராய் இருத்தல்வேண்டும், அல்லது

(இ) புகழ்வாய்ந்த பொறியியற் கம்பனியோடு அல்லது வரைவு பெற்ற பொறியியலாளர்களின் கீழ், அல்லது கட்டடக் கலைஞர்களின் கீழ் நாலாண்டுக்கால ஒழுங்கான பயிற்சியோடு, இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியில் வெவ்வேறு தரங்களில் மூன்றாண்டுக்கால மாலை வகுப்புகளையும் திறமையாக முடித்தவராய் இருத்தல் வேண்டும். (இத் தகைமை உடைய விண்ணப்பதாரர் வரைவாளர் பற்றிய திணைக்களத்திடையான ஆலோசனைச் சபை, திறைசேரி ஆகியவற்றின் அங்கீகாரத்துக்கமைய ஆண்டொன்றுக்கு 1,620 ரூபாவுக்கு மேற்படாத சம்பளத்திட்டத்தில் நியமிக்கப்படுவதற்குக் கருத்துக்கு எடுத்துக்கொள்ளப்படுவர்),

(ஈ) 1947 ம் ஆண்டுக்கு முன்னர் இலங்கை தொழில் நுட்பக் கல்லூரியில் கட்டட அமைப்பு, II ம் நிலைப்பரீட்சையிற் சித்தியடைந்தவராயும், புகழ்பெற்ற வியாபார நிறுவனத்தில் அல்லது அரசாங்கத் திணைக்களத்தில் வரைவாளராக 2 வருடத்துக்கு மேற்பட்ட காலத்துக்கு வேலைக்கமர்த்தப்பட்டவராயும் இருத்தல் வேண்டும், அல்லது

(உ) புகழ்பெற்ற பொறியியலாளர் கொம்பனி ஒன்றில் அல்லது வரைவுபெற்ற எந்திரிகள் அல்லது கட்டடக்கலைஞர்களின் கீழ் ஐந்து ஆண்டுகள் கொண்ட காலத்துக்கு வரைவாளராகப் பணிபுரிந்தவராக இருத்தல்வேண்டும்.

**குறிப்பு.**—தேவையான தகைமைகளோடு கல்விப் பொதுத் தராதர (சாதாரண) பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் இரசாயனத்திலும், பௌதிக இயலிலும் திறமைச் சித்திகள் பெற்றவராய் இருக்கும் விண்ணப்பதாரருக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

5. விண்ணப்பதாரர்கள் தங்களுடைய விண்ணப்பங்களோடு பின்வருவனவற்றின் படிகளை (மூலங்களை அல்ல) இணைத்தல்வேண்டும் :—

(i) பிறப்புப் பதிவுச் சான்றிதழ் (மு. கு.—ஞானஸ்நானப் பத்திரங்கள் அல்லது உதவி நன்கொடை பெறும் பாடசாலைகளின் கைநூல் பிரமாணங்களின் நோக்கத்தின் பொருட்டு வழங்கப்படும் பிறப்புச் சான்றிதழ் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது);

(ii) பெற்ற உயர்தகைமைச் சான்றிதழ்கள் ;

(iii) பெற்ற தான்புரிதொழில், தொழில்நுட்ப தகைமைச் சான்றிதழ்கள் ;

(iv) விண்ணப்பதாரரின் தகைமை, குணநலன், திறமை, பதவியில் நியமிக்கப்படுவதற்குரிய ஏற்புடைமைபற்றி மூன்று அண்மைக் காலக் குணச் சான்றிதழ்கள் (ஏற்கனவே அரசாங்கசேவையிலுள்ள விண்ணப்பதாரர்கள் இவ்வுட்பிரிவின் கீழ் சான்றிதழ்கள் சமர்ப்பிக்கவேண்டப்பட மாட்டார்).

**மு.கு.**—சான்றிதழ்களினதும், குணச்சான்றிதழ்களினதும் படிகள் விண்ணப்பதாரர்களுக்குத் திருப்பி அனுப்பப்படமாட்டா. இச்சான்றிதழ்களின் மூலங்கள், விண்ணப்பதாரர்கள் நேர்முகத் தேர்வுக்கு அழைக்கப்பட்டாராயின் அப்போது மட்டுமே சமர்ப்பிக்கப்படுதல்வேண்டும்.

6. அரசாங்க சேவையிலுள்ள தகுதிவாய்ந்த விண்ணப்பதாரர்களிடமிருந்து வரும் விண்ணப்பங்கள் தத்தமது திணைக்களத் தலைவர்களுக்கூடாகச் சமர்ப்பிக்கப்படுதல்வேண்டும். விதிக்கப்பட்ட தேதிக்கு முன்னர் அவர்களின் திணைக்களத் தலைவர்களினால் விண்ணப்பங்கள் பெறப்பட்டு, தொடர்புடைய விண்ணப்பங்கள் பெற்றமை பற்றி திணைக்களத்தலைவர் விதந்துரைத்து காலதாமதத்திற்குரிய தகுந்த காரணங்கள் காட்டினால் ஒழிய, விதிக்கப்பட்ட தேதிக்குப் பின்னர் இத்திணைக்களத்திற் பெறப்படும் விண்ணப்பங்கள் கருத்துக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டா.

7. இவ்வர்த்தமானியின் I பாகம் II பிரிவின் தொடக்கத்தில் வெளியிடப்பட்ட அரசாங்க சேவைகளுக்கு பதவிகளுக்கு ஏற்புடைத்தான பொது நிபந்தனைகளைப் பார்வையிடுமாறு வேண்டப்படுகின்றனர்.

8. விண்ணப்பங்கள் அல்லது பதவி தொடர்பான ஏதேனும் கடிதத் தொடர்புகள் விஞ்ஞான ஆராய்ச்சி வீடமைப்பு அமைச்சின் நிரந்தரச் செயலாளர், 123, விஜயராம றோட்டு, கொழும்பு 7 என முகவரியிடப்படவேண்டுமே அன்றி அமைச்சின் எந்த ஒரு உத்தியோகத்தருக்கும் அனுப்பப்படுதல் ஆகாது.

நிரந்தரச் செயலாளர்,
விஞ்ஞான ஆராய்ச்சி வீடமைப்பு அமைச்சு.

123, விஜயராம றோட்டு, கொழும்பு 7,
1969 ம் ஆண்டு ஓகஸ்ட் மீ 2 ந் வ.

## விஞ்ஞான ஆராய்ச்சி வீடமைப்பு அமைச்சு

### II ம் தர வரைவாளர் இலிகிதர் பதவிக்குரிய விண்ணப்பம்

1. பெயர் (தடித்த எழுத்துக்களில்) :————.
(அ) முதலெழுத்துக்களுடன் பெயர் :————.
(ஆ) வேறு பெயர்கள் :————.

2. தபால் முகவரி
(அ) வதியும் இடத்து :————.
(ஆ) அலுவலக :————.

3. பிறந்த தேதி :————.

4. 1969 ம் ஆண்டு செப்ரம்பர் 8 இல் வயது :—
வருடங்கள் :———— மாதங்கள் :———— நாட்கள் :————.

5. விவாகம் செய்தவரா; செய்யாதவரா :————.

6. சாதியம் :————.
(அ) பதிவு காரணமாகவோ வம்சாவழி காரணமாகவோ வந்த இலங்கைப் பிரஜையா :————.
(ஆ) வம்சாவழி வந்த பிரஜையானால் பின்வருவோர் பிறந்த இடத்தைத் தருக :—
(i) விண்ணப்பதாரர் :————.
(ii) விண்ணப்பதாரரின் தகப்பன் :————.
(iii) விண்ணப்பதாரரின் தகப்பன் வழிப்பாட்டன் : ————.
(iv) விண்ணப்பதாரரின் தகப்பன் வழிப்பூட்டன் : ————.

7. கல்வியும் மற்றும் தகைமைகள் :————.
(அ) (i) கல்வித்தகைமைகள் :————.
(சித்தியடைந்த பரீட்சையைக் குறிப்பிட்டு அதிற் சித்தியடைந்த பாடங்களையும், தேதியையும் தருக).
(ii) கல்விப் பொதுத் தராதர (சாதாரண) பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் அல்லது உயர்தர பரீட்சையில் ஆரம்பகணிதம் ஒரு பாடமாகச் சித்தியடைந்திருக்கின்றீரா :————.
(iii) கல்விப் பொதுத் தராதர (சாதாரண) பரீட்சையில் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் பின்வரும் பாடங்களிற் திறமை சித்திகள் பெற்றிருக்கின்றீரா, அல்லது உயர்தர பரீட்சையில் இப்பாடங்களிற் சித்தியடைந்திருக்கின்றீரா, அப்படியானால், விபரங்களைத் தருக :—
(அ) இரசாயனம் :————.
(ஆ) பௌதிகம் :————.
(ஆ) தொழில் அல்லது தொழில்நுட்பத் தகைமைகள் :
(i) சித்தியடைந்த உயர்தரப் பரீட்சை : (சித்தியடைந்த தேதிகளினதும், தொழில் நுட்பக்கல்லூரியினதும் அல்லது பல்கலைக் கழகத்தினதும் விபரங்களைத் தருக)————.
(ii) செய்முறைப்பயிற்சி (தொழிற் பயிற்சி) :—

| இருந்து | வரை | நிறுவனத்தின் அல்லது நிலையத்தின் பெயர் |
|---|---|---|
| ———— | ———— | ———— |
| ———— | ———— | ———— |
| ———— | ———— | ———— |

8. தொழில் பழகு நிலைமுடிந்த பின்னர், வகித்த பதவிகள் (வகித்த பதவி வேலைகொள்வோரின் பெயர், தேதி ஆகியவற்றைச் சுருக்கித்தருக) :————.

9. அரசாங்கத்தில் எப்போதாவது வேலை பார்த்தீரா, அப்படியாயின் வேலை செய்த திணைக்களங்களின் பெயர்களையும் வேலைசெய்த தேதிகளையும், விட்டு விலகிய காரணங்களையும் தருக :————.

10. யாதேனும் விசேட உரிமைகள் இருப்பின், அதுபற்றிய விபரங்கள் : ————.

11. குணச்சான்றிதழ்கள் அளிப்போரின் பெயரும் அந்தஸ்தும் :—

(i) ————.

(ii) ————.

(iii) ————.

12. நீதிமன்றத்தில் எப்போதாவது குற்றச்சாட்டுக்காகத் தண்டிக்கப் பட்டிருக்கின்றீரா அப்படியாஞல் குற்றம், தண்டனை ஆகியவற்றின் விபரத்தைத் தருக :————.

மேலே நான் கொடுத்துள்ள விபரங்கள் யாவும் உண்மையானவையும், செம்மையானவையும் என உறுதியுரை அளிப்பதுடன் விபரங்கள் யாதேனும் உண்மையற்றவை அல்லது பிழை என, தெரிவு செய்யப்படு தற்கு முன்னர் காணப்படின் தகுதியற்றவராக்கப்படுவதற்கும் நிய மனத்திற்குப்பின் காணப்படின் எவ்வித நஷ்ட ஈடுமின்றி விலக்கப்படு வதற்கும் பாத்திரராவேன் எனவும் அறிவேன்.

————,
விண்ணப்பதாரரின் கையொப்பம்.

தேதி :————.

8–675—15.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,867

---

## கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

### கணக்காளர்கள் பதவி

**கல்வித் தகைமைகளும் அனுபவமும்.**—தத்துவம் பெற்ற, ஒருங் கிணைந்த கழகம், அல்லது செலவு மற்றும் தொழில் கணக்காளர் கழகத்தின் அங்கத்தவராகவும் அத்துடன் 5 வருட அனுபவமுடை யவராகவும் அல்லது இக்கழகங்களின் இடைநிலைப் பரீட்சைகளில் சித்தியடைந்தவராகவும் அல்லது இலங்கை கணக்கியலில் டிப்ளோமா (இறுதி) பட்டம் பெற்றவராகவும் அத்துடன் ஒரு அரசாங்க திணைக் களத்தில், அரசாங்க உதவிபெறும் திணைக்களத்தில் அல்லது அங்கீ கரிக்கப்பட்ட ஒரு வர்த்தக நிறுவனத்தில் குறைந்தது 7 வருடங் களுக்கு ஒரு உதவிக் கணக்காளராக கடமையாற்றிய அனுபவம் உடை யவராகவும் இருத்தல் வேண்டும். செலவுக் கணக்கியலில் அனுபவம் இருப்பின் அது மேலதிக தகைமையாக கணிக்கப்படும். மேலதிக உயர் கல்வித் தகைமைகள் இருப்பின் அவற்றிற்கு தகுந்த சம்பளம் வழங் குவதற்கு உரிய கவனம் கொடுக்கப்படும்.

**வயது :** 30–45 வயதிற்குட்பட்டவராக இருக்க வேண்டும்.

**சம்பள வரிசை:** ரூபா 1,400 —1,600 / 4×50 மாதம் ஒன்றிற்கு (எல்லாம் உட்பட)

அரசாங்க திணைக்களங்கள், அரசாங்க உதவிபெறும் திணைக்களங்கள், மற்றும் அரசாங்க கூட்டுத்தாபனங்கள் என்பவற்றிலிருந்து விண்ணப்பங் கள் அனுப்பும் ஊழியர்கள் அவ் விண்ணப்பங்களை தமது திணைக்களங் கள் அல்லது கூட்டுத்தாபனங்களின் தலைவர்கள் ஊடாக அனுப்புதல் வேண்டும்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களின் தகுதி நிர்ணய/பரீட் சார்த்த காலம் மூன்று வருடங்களாகும், அத்துடன் அவர்கள் அரசாங் கத்தின் மொழிக் கொள்கையை குறிப்பாக 1956 ம் ஆண்டின் 33 ம் இலக்க உத்தியோக மொழிச்சட்ட நியதிகளை அமுலாக்கும் முகமாக ஏற்கனவேயும் இனிமேலும் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பிரஸ் தாப விண்ணப்பதாரர்கள் கட்டுப்பட வேண்டும்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்கள் வாழைச்சேனையில் அல்லது இத் தீவிலுள்ள, கூட்டுத்தாபனத்தின் எந்த நிறுவனங்களிலும் தங்கி யிருந்து வேலை செய்யும்படி வேண்டப்படுவர்.

தெரிவு செய்யப்படும் விண்ணப்பதாரர்களின் கல்வித் தகைமைகள், அனுபவம் என்பவற்றிற்கு தக்கதாய் மேற்படி சம்பள வரிசையில் தகுந்தபடி குறிக்கப்படலாம்.

விண்ணப்பதாரர்கள் இக் கந்தோரில் கிடைக்கப்பெறும் படிவங்களில், தமது சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பங்களைப் பூர்த்திசெய்து 31.8.1969 ந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கீழ்க்காணும் விலாசத்திலுள்ள தலைவருக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பிவைக்க வேண்டும்.

தபாலில் விண்ணப்பப் படிவங்களைப் பெற விரும்புபவர்கள், தங்களது விலாசம் பொறித்த முத்திரை ஒட்டிய நீண்ட உறையினை அனுப்பி வைக் கும்படி வேண்டப்படுகிறார்கள்.

தேவையான தகைமைகள் உள்ள விண்ணப்பதாரர்கள் மட்டுமே விண்ணப்பிக்கவும்.

க. சி. தங்கராஜா,
தலைவர்,
கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

த. பெ. 1367,
135, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2, 1969 ம் ஆண்டு ஜூலை மீ 31 ந் உ.

8–827/1—15.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,867

---

## கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்

### பாதுகாப்பு உதவியாளர்கள் பதவிகள், தரம் III

**கல்வித் தகைமைகளும் அனுபவமும்**—சி. பா. த. ப. அல்லது க. பொ. த. ப. பரீட்சையில் சித்தியெய்தியிருப்பதுடன் பொலிஸ் அல்லது ஏதாவது ஒரு படைச் சேவையில் மூன்று வருட அனுபவம் உடையவராகவும் இருக்க வேண்டும்.

தீயணைப்பும், அதைத் தடுத்தலில் அனுபவமும் மற்றும் முதலுதவி அறிவும் மேலதிக தகைமையாக கணிக்கப்படும்.

**வயது.**—30 பதிலிருந்து 40 பது வயதிற்குள்.

**சம்பளம் :** ரூபா 280 — 350 / 7×10 மாதம் ஒன்றிற்கு (எல்லாம் உட்பட)

அரசாங்க திணைக்களங்கள்/அரசாங்க உதவி பெறும் திணைக்களங்கள்/ அரசாங்க கூட்டுத்தாபனங்கள் என்பவற்றிலிருந்து விண்ணப்பங்கள் அனுப்பும் ஊழியர்கள் அவ்விண்ணப்பங்களை தமது கந்தோர் தலைவர் மூலமாக அனுப்ப வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களின் தகுதி நிர்ணய/பரீட் சார்த்த காலம் மூன்று வருடங்களாகும். அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை குறிப்பாக 1956 வருடத்திய 33 ம் இலக்க உத்தியோக மொழிச்சட்ட நியதிகளை அமுலாக்கும் முகமாக ஏற்கனவேயும் இனிமேலும் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு பிரஸ்தாப விண்ணப் பதாரர்கள் கட்டுப்பட வேண்டும்.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்கள் வாழைச்சேனையில் அல்லது இத் தீவில் எப்பகுதியிலுமுள்ள கூட்டுத்தாபன நிறுவனங்களில் தங்கி யிருந்து வேலை செய்யும்படி வேண்டப்படுவர்.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பதாரர்களின் கல்வித் தகைமைகள், அனுபவம் என்பவற்றிற்கு தக்கதாய் மேற்படி சம்பள வரிசையில் தகுந்த படி குறிக்கப்படலாம்.

விண்ணப்பதாரர்கள் இக் கந்தோரில் கிடைக்கப்படும் படிவங்களில், தமது சொந்தக் கையெழுத்தில் விண்ணப்பங்களைப் பூர்த்தி செய்து 31.8.1969 ஆந் திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ கீழ்க் காணும் விலாசத்திலுள்ள பொது முகாமையாளருக்கு கிடைக்கும்படி அனுப்பிவைக்க வேண்டும்.

தபாலில் விண்ணப்பப் பத்திரங்களை பெற விரும்புபவர்கள், தங்களது விலாசம் பொறித்த முத்திரை ஒட்டிய நீண்ட உறையினை அனுப்பி வைக் கும்படி கோரப்படுகின்றனர்.

தகைமைகள் உள்ள விண்ணப்பதாரர் மட்டுமே விண்ணப்பிக்கவும்.

தி. ப. நாரன்பனுவ,
பொது முகாமையாளர்,
கிழக்கிலங்கை கடதாசி ஆலைக் கூட்டுத்தாபனம்.

135, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2, 1969 ம் ஆண்டு ஜூலை மீ 29 ந் உ.

8–827/2—15.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,867

இல. வெ.மு./4/76

## கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு

### ஐக்கிய இராச்சியத்தில் செல்லுபடியான பொதுநலவரசுப் புலமைப் பரிசில்கள்—1970 ஆம் ஆண்டு

பொதுநலவரசுப் புலமைப் பரிசில், இணையுரிமைப் பரிசில் திட்டத்தின் கீழ் வழங்கப்படுபவையும் ஐக்கிய இராச்சியத்திலுள்ள உயர்தர கற்கை நிலையங்களில் 1970 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் ஆரம்பமாகும் கழகவாண்டு தொடக்கம் செல்லுபடியானவையுமான புலமைப் பரிசில்களை வழங்குதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

ஐக்கிய இராச்சியத்தில் உயர்தர பயிற்சி நெறிகளைப் பின்பற்றுதற்கு அல்லது ஆராய்ச்சி வேலைகளை மேற்கொள்ளதற்கான வாய்ப்புகள் இப் புலமைப் பரிசில்கள் மூலம் அளிக்கப்படும். பல்கலைக் கழகங்களிலும் தொழில்நுட்பவியல் நிலையங்களிலும் நடைபெறும் இப்பயிற்சி நெறிகள் பட்டப்பின் படிப்பு மட்டத்தில் அல்லது ஆராய்ச்சி வேலை மட்டத்தில் நடைபெறுகின்றன. கற்கை நெறிகள் மட்டுப்படுத்தப்பட்டில்லை. (முதலாவது பட்டப் பயிற்சி நெறிகளுக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா.)

தமது பயிற்சி நெறியை பூர்த்தி செய்துகொண்டு திரும்பி வந்தபின் இந்நாட்டின் முன்னேற்றத்துக்குக் குறிப்பிடத்தக்க பணி செய்யக் கூடியவரெனக் கருதப்படும் நல் நுண்ணறிவு ஆற்றல் உடையவர்களுக்கே இப்புலமைப் பரிசில்கள் வகுக்கப்பட்டுள்ளன.

**குறிப்பு 1.** புலமைப் பரிசிலால் ஏற்பாடு செய்யப்படும் பயிற்சி ஒரு திட்டம் தொடர்பாக அத்தியாவசியமென அவர் கடமை புரியும் திணைக்களத் தலைவர் 16.5.60 ந் திகதிய 514 ம் இலக்கத் திறைசேரிச் சுற்று நிருபத்துக்கிணங்க அத்தாட்சிப்படுத்தி அச்சுற்றுநிருபத்தில் கேட்டுள்ள பிரகாரம் திட்டம் பற்றிய விபரங்கள் கொடுபட்டாலன்றி எவ் அரசாங்க ஊழியரினது விண்ணப்பமும் ஏற்றுக் கொள்ளப் படமாட்டாது.

**குறிப்பு 2.** சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக்கழகங்கள், அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் இத்தகைய நிலையங்கள் ஆகியவற்றில் கடமை புரிபவர்களின் விண்ணப்பங்கள் உரிய நிலையத் தலைவர் மூலம் அனுப்பப்பட வேண்டும். படிவத்தின் 27 ம் கூட்டை பூரணப்படுத்தி விண்ணப்பத்தை அனுப்பி வைக்கும்படி சம்பந்தப்பட்ட தலைவர் கேட்கப்பட வேண்டும்.

**குறிப்பு 3.** ஒவ்வொரு விண்ணப்பதாரியும் ஒரு விண்ணப்பமே அனுப்புவதுடன் ஒரு கற்கை நெறிக்கே விண்ணப்பிக்க வேண்டும்.

**2. கால எல்லை :** புலமைப் பரிசில்கள் சாதாரணமாக 2 வருட கால அளவினதாகும். எனினும், வெகுமதி ஒன்று ஒரு கழகவாண்டு அளவினதாக அமையக்கூடும்.

எனினும் துர்நடத்தை, வரவில் ஒழுங்கீனம், சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் அனுமதியின்றி கல்லூரியில் அல்லது விடுதிச்சாலையில் இல்லாமை, படிப்பில் திருப்தியற்ற முன்னேற்றம், பரீட்சைகளில் சித்தியடையத் தவறுதல் போன்று காரணங்களையிட்டு ஐக்கிய இராச்சிய அதிகாரிகளின் தற்றுணிபுக்கேற்ப புலமைப் பரிசில்கள் பயிற்சி நெறிக் காலத்தின்போது எந்நேரத்திலேனும் நிறுத்தப்படலாம். அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், புலமைப் பரிசு பெற்றவர் தனது சொந்தச் செலவிலேயே இலங்கைக்குத் திரும்பிச் செல்லும்படி வேண்டப்படலாம்.

**3. தகவுத்திறன் :** அபேட்சகர்கள் பின்வரும் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்ய வேண்டும் :—

**(i)** இலங்கைப் பிரசைகளாக இருக்க வேண்டும்.

**(ii)** 1.10.1970 அன்று 35 வயதுக்குக் குறைந்தவராய் இருக்க வேண்டும்.

**(iii)** அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தால் வழங்கப்படுவதும், விரும்பும் பயிற்சி நெறிக்கு பொருத்தமுடையதுமான, இரண்டாம் வகுப்பு (உயர்பிரிவு) பட்டம் பெற்றிருக்க வேண்டும். எனினும், மருத்துவ பட்டங்களைப் பொறுத்தவரையில் மட்டும், ஆகக்குறைந்த சேவை அங்கீகரிக்கப்பட்ட ஒரு பல்கலைக் கழகத்தின் 2 ஆம் வகுப்புப் பட்டமாகும். (பரீட்சைப் பெறுபேறுகளை எதிர்பார்த்திருப்போரின் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப் படமாட்டா).

**(iv)** ஆங்கிலத்தில் உயர்ந்த தேர்ச்சி பெற்றிருக்க வேண்டும்.

**குறிப்பு 1.** அரசாங்கத்தின் கீழ் அல்லது ஒரு சபையில் அல்லது கூட்டுத்தாபனத்தில் அல்லது பல்கலைக் கழகத்தில் அல்லது அரசாங்க உதவிபெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் ஒரு நிலையத்தில் விதிக்கப்பட்டுள்ள ஒரு காலத்துக்கு சேவை புரிவதாக ஒரு உடன்படிக்கை அல்லது முறிசெய்துள்ள ஓர் அபேட்சகர் அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் விதிக்கப்பட்டுள்ள காலத்தைப் பூர்த்தி செய்து அவ்வுடன்படிக்கையில் அல்லது முறியில் குறிப்பிடப்பட்டுள்ள கடமைப்பாடுகளை 1.10.70 அளவில் நிறைவேற்றி இருந்தாலன்றி விண்ணப்பித்தலாகாது.

**குறிப்பு 2.** தற்காலிக நியமனங்களை வகிக்கும் அரசாங்க ஊழியர்களும் நிரந்தர நியமனங்களை வகிக்கும் ஆனுல் நியமனங்களில் உறுதிப்படுத்தப்படாதவர்களான அரசாங்க ஊழியர்களும் தங்கள் பதவிகளைத் துறப்பதற்கு சம்மதமாயிருந்தாலன்றி இவற்றுக்கு விண்ணப்பித்தற்கு உரித்துடையராகார். படிவத்தின் 15 (ஈ) ம் கூட்டில் அத்தகைய விருப்பம் தெரிவிக்கப்படல் வேண்டும்.

**4. அளிப்பு நிபந்தனைகள் :** இப்புலமைப் பரிசில்கள் கீழ்க்காணும் நயங்கள் உடையனவாய் இருக்கும் :—

(அ) பிரித்தானியாவுக்குச் செல்வதற்கும் புலமைப் பரிசிலை முடித்துக் கொண்டு திரும்புதற்குமான பயணச்செலவு (வெகுமதிகள் அளிக்கப்படுதற்கு முன் பிரயாணச் செலவுகள் கொடுபடா).

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட கற்கை, ஆய்கூட, பரீட்சைக் கட்டணங்கள்.

(இ) மாதாந்தம் £68 வீதம் சொந்தப் பராமரிப்புக் கொடை.

(ஈ) புத்தகங்களுக்கும் உபகரணங்களுக்குமாக வருடாந்தம் £30 கொடையும் பொருத்தமான இடத்து ஆராய்ச்சிக் கட்டுரைகளின் தட்டெழுத்துப் பிரதிகள் தயாரித்தற்கும் அவற்றைக் கட்டுதற்கும் £25 வரை.

(உ) பிரித்தானியாவுக்குள் அங்கீகரிக்கப்படும் பிரயாணச் செலவுகளுக்கு வருடாந்தம் £25 வரை கொடை.

(ஊ) அயன தேசங்களிலிருந்து வரும் மாணவர்களுக்கு, சிபார்சு செய்யப்படுதற்கமைய, உடைகளின் பொருட்டு ஆரம்பத்தில் £50 கொடை.

(எ) மனைவிமாருடன் வரும் மாணவர்களுக்கு மாதாந்தம் விவாகச் சகாயப்படியாக £27 உம் அவருடன் பிரித்தானியாவில் வசிக்கும் முதலாம், இரண்டாம், மூன்றும் (16 வயதுக்குட்பட்ட) பிள்ளைகளுக்கு முறையே £6, £4, £3. 10 sh சகாயப்படியும் மனைவி புலமைப் பரிசில் பெற்றிருப்பின் அல்லது வேதனம் பெறும் உத்தியோகத்திலிருப்பின் விவாகச் சகாயப்படி வழங்கப்படமாட்டாது.
(மேற்குறித்த வரும்படிகளின்மீது ஐக்கிய இராச்சியத்தில் வருமான வரி விதிக்கப்படமாட்டாது.)

**குறிப்பு.**—இப்புலமைப் பரிசில்களுக்குத் தெரிவு செய்யப்படும் அரசாங்க ஊழியர்களுக்கு லீவு வழங்குதல், காலத்துக்குரிய திறைசேரி விதிகளுக்கும் வித்தியா பகுதி விதிகளுக்கும் பிரமாணங்களுக்கும் அமையும்.

**5. நேர்முகப் பரீட்சை :** தகவுடைய அபேட்சகர்கள் கொழும்பில், விதிக்கப்படும் நேரத்திலும் இடத்திலும் நேர்முகப் பரீட்சைக்குச் சமுகமளிக்க வேண்டும். இந்நேர்முகப் பரீட்சை தொடர்பில் பிரயாணச் செலவேனும் வேறு எவ்வித செலவேனும் கொடுபடாது. இந்நேர்முகப் பரீட்சையின்போது தராதரப் பத்திரங்கள், பிறப்புச் சாட்சிப் பத்திரம், தமது உரிமையை அத்தாட்சிப்படுத்தும் சான்றுகள் ஆகியவற்றின் மூலங்களையும் சமர்ப்பிக்கக்கூடியவராய் இருக்க வேண்டும்.

**6. உடன்படிக்கை :** தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள், ஐக்கிய இராச்சியத்துக்குச் செல்லுமுன் பின்வரும் முறையில் இலங்கை அரசாங்கத்துடன் உடன்படிக்கை செய்துகொள்ள வேண்டும் :—

(அ) ஏனைய விடயங்களுடன், விதிக்கப்படும் கற்கை நெறியை விசுவாசமாகவும் விவேகமாகவும் பின்பற்றி திருப்திகரமாகப் பூர்த்தி செய்வதாகவும் வேண்டப்படுமிடத்து, பயிற்சி நெறியைப் பூர்த்தி செய்தபின் விதிக்கப்படும் ஒரு காலத்துக்கு (அரசாங்கத்தால் இது தீர்மானிக்கப்பட வேண்டியது) இலங்கை அரசாங்கத்தின் கீழ் சேவை புரிவதாகவும் ;

**(ஆ) உடன்படிக்கையின் நியதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் அமைய ஒழுகத் தவறுமிடத்து புலமைப் பரிசின் முழுச் செலவையும்** (அதாவது புலமைப் பரிசு தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கும் அதனை வழங்கும் முகவராண்மைக்கும் ஏற்படும் முழுச் செலவையும்—அரசினர் ஊழியர்களைப் பொறுத்தவரையில் சம்பளங்கள் சகாயப்படிகள் ஆதியன உட்பட) இலங்கை அரசாங்கத்துக்குத் திருப்பிக் கொடுப்பதாகவும்.

**7. வைத்திய பரீட்சை :** தெரிவு செய்யப்படும் அபேட்சகர்கள் ஐக்கிய இராச்சியத்தில் கற்கை நெறி ஒன்றினை மேற்கொள்தற்கு வேண்டிய உடல்நலன், மனநலன் உடையவரா என பரீட்சித்தற்கு அரசாங்கத்தால் நியமிக்கப்படும் ஒரு விசேட வைத்தியர் சபையினுல் நடாத்தப்படும் வைத்திய பரீட்சையில் தேற வேண்டும்.

**8.** உத்தேச கற்கை நெறியைப் பின்பற்றுவதால் பயிற்சியாளர்கள் கூடிய சம்பளங்களுக்கேனும் பதவி உயர்ச்சி வாய்ப்புகளுக்கேனும் உரித்துடையராகார்.

**9.** விண்ணப்பத்தில் கொடுபடும் விபரம் யாதேனும் பிழையெனக் காணப்படின், தெரிவு செய்யப்படுதற்கு முன்னராயின் தகுதியற்றவராக்கப்படுதற்கும் தெரிவு செய்யப்பட்ட பின்னராயின் அளிப்பு நீக்கப்படுதற்கும் விண்ணப்பதாரி பாத்திரராவார்.

**10.** தெரிவில் தேறிய அபேட்சகர் ஒருவர், தெரிவு செய்யப்பட்ட பின் தெரிவை அல்லது அளிப்பை ஏற்க மறுப்பின், இரண்டு வருட காலத்துக்கு வேறு புலமைப் பரிசில்களைப் பெறும் வாய்ப்பிலிருந்து தடுக்கப்படுவார்.

**11.** நியமனங்கள் மூகவராண்மைகளுக்கு அனுப்பி வைக்கப்பட்ட பின் அவைகளை ஏற்றுக் கொள்தல் அளிப்பை வழங்கும் மூகவராண்மையின் தற்றுணிபையே பொறுத்ததாகையால் இலங்கை அதிகாரிகளின் நியமனமே அளிப்பாகுமெனக் கருதப்படலாகாதென விண்ணப்பதாரிகள் திட்டவட்டமாக அறிந்துகொள்ள வேண்டும்.

**12.** ஓர் அபேட்சகரின் தெரிவுக்கு எம்முறையிலேனும் ஆதரவு வேண்டல் அல்லது செல்வாக்குப் பிரயோகித்தற்கு எத்தனித்தல் அத்தகைய அபேட்சகரைத் தகுதியற்றவராக்கும்.

**13.** இவ்விளம்பரத்தின் தேவைகளுக்கும் விண்ணப்பப் படிவத்தில் அச்சிடப்பட்டுள்ள அறிவுறுத்துரைகளுக்கும் சகல வகைகளிலும் அமையாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**14.** இவ்வலுவலகத்திலிருந்து பெறற்பாலனவாகிய விசேட படிவத்தில் தயாரிக்கப்படவேண்டிய விண்ணப்பங்கள் 1969 ம் ஆண்டு ஓகஸ்ற் மாதம் 29 ந் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அனுப்பப்பட வேண்டும். உரிய திகதிக்குப் பின் பெற்றுக் கொள்ளப்படும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

**15.** ஒவ்வொரு விண்ணப்பம் தொடர்பிலும் ரூபா 10 பெறுமதியான முத்திரை ஒட்டப்பட வேண்டும். விண்ணப்பப் படிவத்தின் முதற் பக்கத்தில் அந்நோக்கத்துக்கான இடத்தில் ரூபா 10 பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டு விண்ணப்பதாரியின் கையொப்பத்தால் அழிக்கப்பட வேண்டும். எச்சந்தர்ப்பத்திலும் முத்திரைக் கட்டணம் திருப்பிக் கொடுபடமாட்டாது.

**16.** ஏற்கனவே அரசினர் சேவையிலுள்ள விண்ணப்பதாரிகள் தமது விண்ணப்பங்களை உரிய பகுதித் தலைவர் மூலம் அனுப்புதல் வேண்டும். சபைகள், கூட்டுத்தாபனங்கள், பல்கலைக் கழகங்கள், அரசாங்க உதவி பெறும் அல்லது அரசாங்க ஆதரவில் நடைபெறும் நிலையங்களிலுள்ள விண்ணப்பதாரிகள் உரிய நிலையத் தலைவர் மூலம் விண்ணப்பங்களை அனுப்புதல் வேண்டும். விண்ணப்பதாரி தனது பதவியிலிருந்து விலகச் சம்மதிக்குமிடத்தும் இத்தேவை அமையும். கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சிலுள்ள உத்தியோகத்தர்கள் தமது விண்ணப்பங்களை உரிய பிரதேச வித்தியாதிபதி மூலம் அனுப்புதல் வேண்டும்.

**17.** சகல விண்ணப்பங்களும் பெற்றுக் கொள்ளப்பட்டதும் அவை பெற்றுக் கொள்ளப்பட்டமை பற்றி விண்ணப்பதாரிகள் அறிவிக்கப்படுவார்கள். அத்தகைய அறிவித்தலை விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியிலிருந்து 7 நாட்களுக்குள் பெறத்தவறும் விண்ணப்பதாரிகள் கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரக் காரியதரிசிக்கு அதுபற்றி உடனே அறிவிக்க வேண்டும். அங்ஙனம் செய்யத்தவறும் விண்ணப்பதாரி, தனது உரிமை சீர்தூக்கப்படுதற்கான உரித்தை இழப்பார்.

நிரந்தரக் காரியதரிசி,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு.

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
மலாய் வீதி, கொழும்பு 2,
8.8.1969.

8—866—15.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,867

---

## இலங்கை அரச ஈட்டு வங்கி—வெற்றிடங்கள்

இவ்வங்கியில் பின்வரும் பதவிகளில் கடமையாற்றுவதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

### சட்ட உதவியாளர்

**வயது .**—விண்ணப்பதாரிகள் 1969 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதியன்று 35 வயதிற்கு மேற்படாதவராக இருக்கவேண்டும்.

**தகைமைகள் .**— குறைந்தது 3 வருடமாவது வழக்கறிஞர் —நொத்தாரிசு துறையில் அனுபவம் பெற்றவர்களாக இருக்க வேண்டும். சி. பா. த. அல்லது க. பொ. த. பரீட்சையில் சிங்கள பாடத்தில் சித்திபெய்தாதவர்கள் சிங்களத்தில் தகைமை பெற்றிருக்க வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம் .**— ரூ. 460—940 மாதாந்தம்.
8 × 30:6 × 40

### கணக்குப் பதிவாளர் தரம் II

**2. வயது .**— விண்ணப்பதாரிகள் 1969 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதியன்று 20 வயதுக்குக் குறையாதவராகவும் 35 வயதுக்கு மேற்படாதவராகவும் இருக்கவேண்டும்.

**தகைமைகள் .**— (அ) சி. பா. த. அல்லது க. பொ. த. (சாதாரண) பரீட்சையில் ஒரே முறையில் ஆறு பாடங்களுள் ஆங்கிலத்தோடு ஆரம்ப கணிதத்தில் அல்லது கணிதத்தில் அல்லது வர்த்தகக் கணிதத்தில் விசேட சித்தியும்,

(ஆ) கணக்கியலிலும்/அல்லது கணக்குப்பதிவியலிலும் ஒரு மதிப்புள்ள தகைமையும், தொழிலிலுள்ள சாட்டட்-கணக்காளரினால் இதற்கத்தாட்சியாக சான்றிதழ்கள் வழங்கப்பட்டிருந்தால் விரும்பத்தக்கது.

சி. பா. த. அல்லது க. பொ. த. பரீட்சையில் சிங்களப்பாடத்தில் சித்திபெய்தாத விண்ணப்பதாரிகள் சிங்களப்பாடத்தில் தகைமை பெற்றிருக்க வேண்டும்.

ஏற்கனவே வங்கியில் எழுது வினைஞர்களாகக் கடமையாற்றுபவர்களுக்கு மேற்கூறிய தகைமைகள் தேவைப்படமாட்டாது. ஆனால்,

(அ) அவர்கள் வங்கியின் கணக்குப்பகுதியில் 10 வருட கால சேவை செய்தவர்களாகவோ அல்லது.

(ஆ) வங்கியில் கணக்குப் பகுதியில் கணக்கியலிலும்/அல்லது கணக்குப் பதிவியலிலும் ஒரு மதிப்புள்ள தகைமையோடு 5 வருட கால சேவை செய்தவர்களாகவுமிருக்க வேண்டும்.

**சம்பள அளவுத்திட்டம் .**— ரூ. 192—450 மாதாந்தம்
6 × 10 : 4 × 12 : 10 × 15

**பொது நிபந்தனைகள் .**—வாழ்க்கைச் செலவுப்படி, வாழ்க்கைச் சிறப்புப்படி வாடகைப்படி ஆகியவைகள் வங்கியின் பிரமாணங்களின் படி கொடுக்கப்படும். இப்பதவிகள் உபகாரச் சம்பளமற்றவைகள் ஆனால் பதவியிலுள்ளவர்கள் வங்கியின் சகாய நிதியின் அங்கத்தவர்களாக இருப்பார்கள்.

55 வயதுக்கும் 60 வயதுக்குமிடையில் விரும்பினால் இளைப்பாறலாம். ஆனால் 60 வயதில் கட்டாய இளைப்பாற்றமுண்டு.

விண்ணப்பதாரிகள் இலங்கையர்களாகவிருக்க வேண்டும். பிறந்த திகதி மற்றும் தகைமைகள், அனுபவங்களுக்குரிய விபரங்களை விளக்கமாகக் குறிப்பிடல் வேண்டும்.

நியமனங்கள் முதல் ஒரு வருட தகுதிகாண் காலமாகவிருக்கும்.

சேவையின் மற்றைய நிபந்தனைகள் நியமனக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருக்கும்.

**விண்ணப்பப்பத்திரத்துடன் சித்திபெய்திய பரீட்சைகளின் சான்றிதழ்களும், அண்மையில் பெற்ற இரு குணச்சான்றுக் கடிதங்களும் சேர்த்து அனுப்பப்படல் வேண்டும். மூலப்பிரதிகள் அனுப்பப்படக்கூடாது.**

அரசாங்க திணைக்களங்களில் அல்லது கூட்டுத்தாபனங்களில் சேவை செய்யும் உத்தியோகத்தர்கள் தத்தம் திணைக்கள/கூட்டுத்தாபன தலைவர்களூடாகவே விண்ணப்பிக்க வேண்டும்.

விண்ணப்பப்பத்திரங்கள் கீழொப்பமிடப்பட்டவருக்கு 1969 ம் வருடம் ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்பு கிடைக்கும் படி அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்பப்பத்திரங்கள் அனுப்பப்படும் காகித உறையில் இடது பக்க மேல் மூலையில் " சட்டஉதவியாளர்/கணக்குப்பதிவாளர் பதவிகளுக்கான விண்ணப்பம் " எனக் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும்.

எவ்வகையேனும் ஆதரவு தேடுவோர் தகமை நீக்கப்படுவர்.

எச். பி. கப்புவத்த,
பொது முகாமையாளர்.

இலங்கை அரச ஈட்டு வங்கி,
91, ஹோட்டன் பிளேஸ்.,
கொழும்பு —7.

8—733—15.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,867

## கல்வி வெளியீட்டுத் திணைக்களம்

### II ஆம் நிலைப் பதிப்பாளர் பதவிகள்

1969 யூலை 25 ஆம் தேதி இல. 14,864 இலங்கை அரசாங்க வர்த்தமானியின் I ஆம் பகுதி II ஆம் பிரிவில் வெளியான ஆங்கில தமிழ் அறிவித்தல்கள் பற்றிய விடத்துக் கணிதம் (சிங்களம்), விலங்கியல் (சிங்களம், தமிழ்) என்பனவற்றிற்குரிய விவரங்களைப் பின்வருமாறு கொள்ள வேண்டும் :—

**கணிதம்** (சிங்களம்) :—கணிதத்திற் சிறப்புப் பட்டம், அல்லது தூய, பிரயோக கணிதங்களைப் பாடங்களாகக் கொண்டபொதுப் பட்டம்.

**விலங்கியல்** (சிங்களம், தமிழ்) :— விலங்கியலிற் சிறப்புப் பட்டம், அல்லது விலங்கியலுடன் இரசாயனவியல் அல்லது தாவரவியலைப் பாடங்களாகக் கொண்ட பொதுப் பட்டம்.

இந்தப் பிழை காரணமாக விண்ணப்பிக்க முடியாதவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் 29.8.69 வரை ஏற்றுக்கொள்ளப்படும்.

சேனரத் வணிகதுங்க,
தற்காலிக ஆணையாளர்.
கல்வி வெளியீட்டுத் திணைக்களம்.

8–760—15.8.69 ந திகதிய வர்த்தமானி இல. 14,867

---

# பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

## கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில் திணைக்களம்

### 1968 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் இத்திணைக்களத்தால் நடாத்தப்பட்ட இறுதி வருடத்திய நெசவுப் பரீட்சையின் பெறுபேறுகள்

1969 ம் ஆண்டு யூலை மாதம் 18 ந திகதி வெளியான 14,863 இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட பெறுபேறுகள் அட்டவணையில் பின்வரும் பெயரும் சேர்க்கப்படல் வேண்டும்.

| சுட்டிலக்கம் | பெயர் | விலாசம் |
|---|---|---|
| ஜி 91 | எம். எம். சோமாவதி | ஸ்ரீ ஞானுதார நெசவுப்பாடசாலை, 23 எ, மரைக்கார் வீதி, தர்கா நகர் |

கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில்
திணைக்களம், கொழும்பு 7,
1968 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 7 ந உ.

பி. எச். பி. டி சில்வா,
கிராமாபிவிருத்தி சிறு கைத்தொழில்,
பணிப்பாளர்.

8–749—15.8.69 ந திகதிய வர்த்தமானி இல. 14,867

---

## உயர்தர பாடசாலைகளில் 8 ந் 9 ந் 10 ந் தரங்களில் மாணவர்களை 1970 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சேர்த்தல்

உயர்தர பாடசாலைகளில் 8 ந, 9 ந, 10 ந தரங்களில் தமது பிள்ளைகளை 1970 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் சேர்க்க விரும்பும் பெற்றோர்களும் பாதுகாவலாளர்களும், அவர்களைச் சேர்க்க விரும்பும் பாடசாலைத் தலைவர்களுக்குத் தமது விண்ணப்பங்களை அனுப்புமாறு இத்தால் கேட்கப்படுகின்றனர். விண்ணப்பங்கள் கீழ்க்காணும் மாதிரிப் படிவ முறையில் தயாரிக்கப்பட்டு 8.9.69 அன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக சம்பந்தப்பட்ட பாடசாலைத் தலைவர்களுக்குப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

அரசினர் பாடசாலைகளில் அல்லது அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட உதவி நன்கொடை பெறுத பாடசாலைகளில் படிப்பவர்களும் பின்வரும் வகுதிகளில் அடங்குபவர்களுமான மாணவர்கள் தொடர்பிலேயே இவ்வறிவித்தலின் கீழ் விண்ணப்பங்கள் அனுப்பப்படலாம் :

தற்போது 7 ந தரத்தில் படிக்கும் மாணவர்கள் (8 ஆந் தரத்தில் சேர்தற்கு)

தற்போது 8 ந தரத்தில் படிக்கும் மாணவர்கள் (9 ஆந் தரத்தில் சேர்தற்கு).

தற்போது 9 ந தரத்தில் படிக்கும் மாணவர்கள் (10 ஆந் தரத்தில் சேர்தற்கு).

8 ந தரத்துக்கு அனுமதி கோரும் மாணவர்கள் ஒரு சேர்வுப் பரீட்சைக்குத் தோற்றுமாறு கேட்கப்படக்கூடும். ஒரு மாவட்டத்திலுள்ள சகல பாடசாலைகளுக்கும் பொதுவாக அமையும் இச்சேர்வுப் பரீட்சை உரிய பிரதேச வித்தியாதிபதியின் அல்லது மாவட்டப் பிரதம வித்தியாதிகாரியின் பணிப்புரையின் கீழ் நடைபெறும். மாணவர் ஒருவர், தான் தெரிவு செய்யும் பாடசாலைக்கு தெரிவுத் திட்டத்துக்கும் பரீட்சைப் பெறுபேறுகளுக்கும் அமைய அனுமதி பெறத்தவறுமிடத்து, பிரதேச வித்தியாதிபதி அல்லது மாவட்டப் பிரதம வித்தியாதிகாரி தீர்மானிப்பதற்கமைய தகுந்த உயர்தர பாடசாலை ஒன்றில் அவருக்கு இடம் கொடுக்கப்படும்.

சி. ஜே. சேரசிங்க,
கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின்
நிரந்தரக் காரியதரிசியும் மகா
வித்தியாதிபதியும்.

கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சு,
கொழும்பு 2,
1969 ம் ஆண்டு ஜூலை மீ 25 ந உ.

### மாதிரி விண்ணப்பப் படிவம்

அதிபர், [ * ]

...................வித்தியாலயம்

.........................

**....ந் தரத்துக்கு அனுமதி கோரும் விண்ணப்பம்**

**(அ) மாணவர் பற்றிய விபரங்கள்**

1. பெயர் :
2. பால் :
3. பிறந்த திகதி :
4. 1.1.1970 அன்றுள்ளபடி வயது :
5. சமயம் :
6. சாதியம் :
7. தற்போது படிக்கும் பாடசாலை :
8. போதனை பெறும் மொழி :
9. தற்போது படிக்கும் தரம் :

**(ஆ) தகப்பன்/தாய்/பாதுகாவலர் பற்றிய விபரங்கள்**

1. பெயர் :
2. வதிவிட விலாசம் :

**(இ) மாணவர் தற்போது அனுமதி கோரும் பாடசாலை பற்றிய விபரங்கள்**

1. பாடசாலைப் பெயர் :
2. மேற்போந்த (இ) (1) ம் கூட்டில் குறிப்பிட்டுள்ள பாடசாலையில் காலியிடம் இல்லாவிடில், சேரவிரும்பும் வேறு 4 பாடசாலைகளின் பெயர்களை விருப்ப ஒழுங்கின் பிரகாரம் குறிப்பிடவும். இந்நாலு பாடசாலைகளில் ஒன்று தற்போதைய பாடசாலைக்கு ஆகக் கிட்ட உள்ள உயர்தர பாடசாலையாகவும், இரண்டு பாடசாலைகள் பிரதேசத்திலுள்ள உயர்தர பாடசாலைகளாகவும் இருக்க வேண்டும். மற்றப் பாடசாலை வேறு பிரதேசத்தில் உள்ளதாக இருக்கலாம். 1. 2. 3. 4.

* 9 ந/10 ந தரத்துக்கு அனுமதி கோரப்படின் பின்பற்ற விரும்பும் கற்கை நெறியை அதாவது கலை/விஞ்ஞானம்/வர்த்தகம் எனக் குறிப்பிடவும்.

————.
தகப்பன்/தாய்/பாதுகாவலாளர்
கையொப்பம்.

திகதி :————.

**(ஈ) தற்போதய பாடசாலைத் தலைவரின் அத்தாட்சிப் பத்திரம்**

மேலே குறிப்பிடப்பட்டுள்ள மாணவர் தற்போது .......... ஆந் தரத்தில் படிக்கிருரெனவும் அரசினர் வர்த்தமானியில் கொடுபட்டுள்ள அறிவுறுத்துரைகளுக்கமைய அவர் 1970 இல் ........ ஆந் தரத்துக்கு அனுமதி கோருதற்குத் தகுதியுடையவரெனவும் இத்தால் அத்தாட்சிப் படுத்துகிறேன். இப்பாடசாலையில் ........ஆந் தரத்திலிருந்து ........ஆந் தரம்வரை கல்வி ஊட்டப்படுகிறது ; 9 ந, 10 ந தரங்களில் கலை/விஞ்ஞான/வர்த்தக கற்கை நெறிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

எனது முன்னிலையில் மாணவர் கையொப்பமிட்டாரென்பதையும் அத்தாட்சிப்படுத்துகின்றேன்.

————, அதிபரின் கையொப்பமும் திகதியும்.

————, மாணவரின் கையொப்பம்.

திகதி : ————.
பாடசாலைப் பெயர் : ————.

(பொருத்தமற்ற சொற்களைக் கீறிவிடுக)

8–734—15.8.69 ந திகதிய வர்த்தமானி இல. 14,867

---

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### நிலத்தக நீர் ஆராய்ச்சிகள்

யாழ்ப்பாணம், தொண்டமனூர்க்கட்டு (பராஜில்) உள்ள 5 தொடக்கம் 18 வரை துவார வழிகளின் உயர்த்தும் கதவுகள் திருத்தவேலைகள் சம்பந்தமான கேள்விப்பத்திரங்கள் வடபெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் அவர்களால் 5.9.69 வெள்ளிக்கிழமை காலை 10 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும். அதன் பின்பு உடன் திறக்கப்படும்.

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் ரூபா 25,000 தொகைக்கும் அதற்கு மேலதிகமாக பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் மட்டுமே இக்கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

3. இக்கேள்விக்காகிய வெற்றுப்பத்திரங்கள் யாழ்ப்பாணம் நிலத்தக நீர் ஆராய்ச்சி, அலுவலகத்திலும், நீர்ப்பாசனப் பொறியியலாளர், யாழ்ப்பாண உபபிரிவு, கிளிநொச்சி அலுவலகத்திலும் அலுவலக நேரங்களில் 1.9.69 பிற்பகல் 3.00 மணிவரைக்கும் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியாளர்களாக முன்வருவோர் தங்கள் பதிவுப்புத்தகங்களுடன் தாம் இப்பொழுது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப் படுத்தி இக் கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். இவை அவ்வொப்பந்தக்காரர்கள் கேள்விப்பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமா வென்றறிய நீர்ப்பாசனப் பொறியியலாளருக்குப் பயன்படும். வெற்றுப் பத்திரங்கள் வழங்குமுன் நீர்ப்பாசனப் பொறியியலாளர்களின் அலுவலகத்தில் மேல் குறிக்கப்பட்ட தொகைகளைக் கேள்விக்கட்டணமாகச் செலுத்தப்படல் வேண்டும். இக்கேள்விக் கட்டணம் 25 ரூபாவாகும். இக்கேள்விக்கட்டணங்களை ஓர் கச்சேரியில் செலுத்திப் பற்றுச்சீட்டுக் காட்டினுலும் போதுமானது.

4. இக்கேள்விகளைப்பற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் யாழ்ப்பாணம் நிலத்தக நீர் ஆராய்ச்சி அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

செ. சிவசிதம்பரம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
நிலத்தக நீர்ப்பாசன ஆராய்ச்சி
அலுவலகம், யாழ்ப்பாணம்.

யாழ்ப்பாணம்,
3.8.69.

8–687—15.8.69 ந திகதிய வர்த்தமானி இல. 14,867

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### கண்டி உப பிரிவு

1969/70, 1970/71 நிதி வருடத்திற்கு கண்டி உப பிரிவு பண்டக சாலைக்கும், பண்டகசாலையிலிருந்தும் சாமான்கள் ஏற்றுமதி இறக்குமதி செய்வதற்குரிய கேள்விப்பத்திரங்கள் கண்டி பெரும்பிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரினுல் 1969 ம் ஆண்டு புரட்டாசி மாதம் 5 ந் திகதி காலை 10.00 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. நீர்ப்பாசனத் திணைக்களத்துடன் ரூபா 20,000 க்கும் அதற்கு மேலும் பதிவுள்ள ஒப்பந்தக்காரர்கள் மாத்திரமே கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதி உடையவர்களாவர்.

3. கேள்விப்பத்திரம் சமர்ப்பிப்பவர்கள் குறைந்த பட்சம் இரண்டு லொறிகளாவது வைத்திருக்க வேண்டும். அதோடு லொறிகளின் பதிவுக்குரிய அத்தாட்சிப்புத்தகங்களையும், 1969 ம் ஆண்டுக்குரிய (வரி) லைசன்சையும் பரிசோதனைக்குக் கொடுக்கவேண்டும்.

4. இரண்டு பத்திரங்களில் கேள்விகள் அனுப்பவேண்டும். இவ் வெற்றுப்பத்திரங்கள் கண்டி, மாத்தளை, அசலக்க, நுவரெலியா முதலிய இடங்களிலுள்ள நீர்ப்பாசன உபபிரிவு அலுவலகங்களில் கந்தோர் நேரங் களில் 15.8.1969 க்கும் 2.9.69 க்கும் இடையில் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருவோர், இத் திணைக்களத்தில் மேற்கொண் டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஒப்பந் தத்தில் வெளிப்படுத்தி கேள்விப்பத்திரத்திற்கு விண்ணப்பிக்கவேண்டும். அத்துடன் பதிவுப் புத்தகம், வேலைகளின் முன்னேற்றம் முதலியன வற்றையும் காண்பிக்க வேண்டும்.

5. கேள்விப்பத்திரங்கள் தருவதற்குமுன்னர், நீர்ப்பாசனக் காரியாலயத்திலோ, அல்லது ஒரு கச்சேரியிலோ ரூபா 25 கட்டுப்பணம் செலுத்தியதற்குரிய பற்றுச்சீட்டைக் காண்பிக்க வேண்டும்.

6. இக் கேள்விப் பத்திரத்திற்குரிய மேலதிக விஷயங்களை அறிய விரும்புவோர், கண்டி உபபிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளர், கண்டி, என்ற விலாசத்துக்கு விண்ணப்பித்துப் பெற்றுக் கொள்ளவும்.

ஏ. ரி. ஜே. டி பின்தோ,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
கண்டி உபபிரிவு.

நீர்ப்பாசன அலுவலகம்,
கண்டி உப—பிரிவு,
குண்டசாலை,
1969 ம் ஆண்டு யூலை மீ 31 ந உ.

8–683—15.8.69 ந திகதிய வர்த்தமானி இல. 14,867.

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்—கண்டி உபபிரிவு

கண்டி உபபிரிவின் கீழ்வரும் கீழே சொல்லப்பட்ட வேலைக்கு கேள்விப் பத்திரங்கள் குண்டசாலை மத்திய பகுதி பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரால் 5.9.1969 முற்பகல் 10 மணிவரையும் பெற்று உடனே திறக்கப்படும்.

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் கீழே கூறப்பட்ட தொகைக்குப் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களும் கூட்டுறவுச் சங்கங்களும் கிராம முன்னேற்றச் சங்கங்களும் மட்டுமே கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

| வேலையின் பெயர் | ஒப்பந்தக்காரரின் பதிவுத் தொகை ரூ. | ச. | கேள்விக் கட்டணம் ரூ. | ச. |
|---|---|---|---|---|
| (1) குறகன்தெனியகுளம், உடுநுவர .. | 25,000 | 0 .. | 25 | 0 |
| (2) தேவலிகுளம், உடுநுவர .. | 27,000 | 0 .. | 50 | 0 |

இக்கேள்விக்குரிய வெற்றுப்பத்திரங்களை கண்டி/மாத்தளை/கஸலக்கா/நுவரெலியா ஆகிய உபபிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளர்களின் காரியாலயங்களில் 2.9.69 முற்பகல் 11.00 மணிவரை பெற்று, மேற் கூறிய நீர்ப்பாசனப் பொறியியலாளரின் காரியாலயத்தில் அல்லது கச்சேரியில் மேற்கூறிய கேள்விக் கட்டணத்தைக் கட்டிய பற்றுச் சீட்டுடன் கேள்விகளை இரு பிரதியில் சமர்ப்பித்தல் வேண்டும். கேள் வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகத்தைச் சமர்ப்பித்து கேள்விக்குரிய வெற்றுப் பத்திரத்தைக் கோரவேண்டும்.

இக்கேள்விக்காய மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் கண்டி உபபிரிவு நீர்ப்பாசனப் பொறியியலாளரின் காரியாலயத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

ஏ. ரி. ஜே. டி பின்ரோ,
நீர்ப்பாசனப் பொறியியலாளர், கண்டி
உப பிரிவு.

8–685—15.8.69 ந திகதிய வர்த்தமானி இல. 14,867

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### பதுளை உபபிரிவு

கீழ்க் குறிக்கப்பட்டிருக்கும் வேலைக்கான கேள்விப்பத்திரங்கள் பண்டாரவளையிலுள்ள ஊவா பெரும் பகுதி நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1969 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.00 மாணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும். அதன் பின் உடனே திறக்கப்படும்.

| வேலையின் விபரம் | ஒப்பந்தக்காரரின் பதிவுத் தொகை | கேள்விக்கட்டணத் தொகை |
|---|---|---|
| | ரூபா | ரூபா |
| பண்டாரவளை, கஹடவளையிலுள்ள பிரமச்சாரிகள் கட்டிடத்தின் மிகுதிவேலை .. | 30,000 .. | 50 |

நீர்ப்பாசனத் திணைக்களத்தில் மேற்குறிப்பிடப்பட்டுள்ள தொகைக்கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள், கூட்டுறவு ஸ்தாபனங்கள், கிராம முன்னேற்றச் சங்கங்கள் மட்டுமே இக்கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையராவர்.

இக்கேள்விக்கான வெற்றுப்பத்திரங்கள் பதுளை, மஹியங்கனை, மொனராகலை ஆகிய இடங்களிலுள்ள நீர்ப்பாசனப் பொறியியலாளரிடம் அலுவலக நேரங்களில் 1969 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 1 ம் திகதி திங்கட்கிழமை வரைக்கும் பெற்றுக் கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது இத் திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஒரு பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விப் பத்திரத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும். வெற்றுப் பத்திரங்கள் வழங்கு முன் அதே நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் வேலைக்கெதிரே குறிக்கப்பட்டுள்ள கேள்விக்கட்டணத் தொகை கேள்விக் கட்டணமாக செலுத்தப்படவேண்டும். இக்கட்டணத்தை ஒரு கச்சேரியில் செலுத்திப் பற்றுச்சீட்டைக் காட்டினாலும் போதுமானது.

இக் கேள்விகளைப் பற்றிய மேலதிகமான விபரங்களை பதுளை உபபிரிவு நீர்ப்பாசனப் பொறியிலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

வி. நாகேந்திரன்,
நீர்ப்பாசனப் பொறியியாளர்,
பதுளை உப பிரிவு.

நீர்ப்பாசன அலுவலகம், பதுளை,
1969 ம் ஆண்டு ஒகஸ்ட் மீ 6 ந வ.

8–689—15.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,867

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### யாழ்ப்பாண உபபிரிவு

கிளிநொச்சி நீர்ப்பாசன உபபிரிவிலுள்ள கனகராயன் ஆறு வெள்ளப் பெருக்குத் தடுப்பு அணைக்கு திருத்த வேலைகள் செய்தல் வவுனியாவிலுள்ள வடபெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளர் அவர்களால் 5.9.69 வெள்ளிக்கிழமை காலை 10 மணிவரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும். அதன் பின்பு உடன் திறக்கப்படும்.

2. நீர்ப்பாசனத் திணைக்களத்தில் ரூபா 36,000 தொகைக்குப் பதிவு செய்யப்பட்டுள்ள பாரமான இயந்திரங்கள் பாவித்து வேலைசெய்யக்கூடிய ஒப்பந்தக்காரர்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள், கிராமமுன்னேற்றச் சங்கங்கள், இவ்வேலையை 1969 ம் ஆண்டு புரட்டாசி மாதம் முடிய முன்னர் செய்யக்கூடியவர்மட்டும் இக்கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

3. இக்கேள்விக்காகிய வெற்றுப்பத்திரங்கள் யாழ்ப்பாணம்/மன்னார்/வவுனியா/முல்லைத்தீவு/வவுனிக்குளம் முதலிய இடங்களிலுள்ள நீர்ப்பாசனப் பொறியியலாளர்களின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 1.9.69 பிற்பகல் 3.00 மணிவரைக்கும் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்பொழுது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். இவை அவ்வொப்பந்தக்காரர்கள் கேள்விப்பத்திரங்கள் அனுப்ப அனுமதிக்கப்படலாமாவென்றறிய நீர்ப்பாசனப் பொறியியலாளருக்குப் பயன்படும். வெற்றுப்பத்திரங்கள் வழங்குமுன் நீர்ப்பாசனப் பொறியியலாளர்களின் அலுவலகத்தில் மேல் குறிக்கப்பட்ட தொகைகளைக் கேள்விக்கட்டணமாக செலுத்தப்படல் வேண்டும். இக்கேள்விக் கட்டணங்களை ஓர் கச்சேரியில் செலுத்திப் பற்றுச்சீட்டுக் காட்டினாலும் போதுமானது.

4. இக்கேள்விகளைப்பற்றிய மேலதிகமான விபரங்கள் எல்லாவற்றையும் யாழ்ப்பாண உபபிரிவிலுள்ள நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக் கொள்ளலாம்.

செ. சோமசுந்தரம்,
நீர்ப்பாசனப் பொறியியலாளர்,
யாழ்ப்பாண உபபிரிவு.

கிளிநொச்சி,
1969 ம் ஆண்டு ஜூலை மீ 18 ந வ.

8–682—15.8.69 ந் திகதிய வர்த்தமானி இல். 14,867.

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### நுவரெலியா உபபிரிவு

நுவரெலியா உபபிரிவில், கீழ்காணும் வேலைகட்கு கேள்விப் பத்திரங்கள் குண்டசாலையிலுள்ள மத்தியபகுதி பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1969 ம் ஆண்டு செப்டம்பர் 8 ம் திகதி காலை 10 மணி வரைக்கும் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. 1969–70, 1970–71 வருடங்களில் நுவரெலியா உப பிரிவில் பொருட்கள் ஏற்றிச் செல்லுதல் (1.10.69 ம் திகதியிலிருந்து இரண்டு வருடங்களுக்கு).

3. நீர்பாசன திணைக்களத்தில் ரூபா 20,000 அதற்கு மேலும் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமே இக் கேள்விப் பத்திரங்கள் சமர்ப்பிக்க தகுதியுடையவர்.

4. ஒப்பந்தக்காரர்களாக முன்வருவோர் . தமது சொந்தத்தில் இரண்டு லொறியேனும்வைத்திருப்பதுடன் தேவைப்படின் ரெயிலர்பூட்டிய டிராக்டர் மூலம் பொருட்களை ஏற்றிச் செல்லத் தயாராக இருத்தல் வேண்டும். நுவரெலிய, கண்டி, கசலக்கை, மாத்தளை ஆகிய நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகத்தில், அலுவலக நேரங்களில் 1969 ம் ஆண்டு ஆகஸ்டு மாதம் 9 ம் திகதி தொடக்கம் செப்டம்பர் 5 ம் திகதிவரை பெறக்கூடிய வெற்றுப் பத்திரங்களில் மாத்திரமே கேள்விகள் ஏற்றுக் கொள்ளப்படும்.

5. கேள்வியாளராக முன்வருவோர் தமது பதிவுப் பத்திரங்களுடன் தற்பொழுது செய்யும் வேலைகளின் பெறுமதியையும் குறிப்பிட்டு விண்ணப்பிக்கவேண்டும். வெற்றுப் பத்திரங்கள் வழங்கு முன் ரூபா 25 கேள்விக் கட்டணமாக கச்சேரியில் அல்லது மேற்கூறிய அலுவலகங்களில் செலுத்திப் பற்றுச்சீட்டையும் சமர்ப்பிக்கவேண்டும்.

6. கிராம முன்னேற்றச் சங்கங்கள், பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் கேள்விக் கட்டணப் பணம் செலுத்தத் தேவைப்படாது.

7. இக்கேள்விக்காகிய விபரங்கள் நுவரெலியா நீர்ப்பாசனப் பொறியியலாளர் அலுவலகத்தில் அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

கணபதிப்பிள்ளை அம்பிகைபாகா,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
நுவரெலியா உபபிரிவு.

நீர்ப்பாசன இலாகா,
நுவரெலியா,
1969 ம் ஆண்டு ஆடி மீ 27 ந வ.

8–684—15.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,867

## கமத்தொழிற்றிணைக்களம்

**அரசாங்கப் பண்ணைகளில் வெற்றுச் சாக்குகள், தகரங்கள், பொலித்தின் கடதாசிப் பைகள், மிளகாய்க் கோது ஆகியன விற்பனைக்கான கேள்விகள் கோரப்படுகின்றன**

கீழ்க்காணப்படும் பண்ணைகளில் கீழ்க் கொடுக்கப்படும் அளவுகளுடைய சாக்குகள், பொலித்தீன், கடதாசி பைகள், தகரங்கள், மிளகாய்க் கோது ஆகியவை விற்பனைக்கான கேள்விகள் கமத்தொழில் அதிகாரி யினுல் (பண்ணை முகாமையும் ஆக்கமும்) யாழ்ப்பாணம் கமத்தொழில் கந்தோரில் 1969.9.5 ஆம் திகதி மு. ப. 10 மணிவரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

(1) நெற்கமம் கந்தளாய்—

| | | |
|---|---|---|
| (அ) | வெற்று பொலித்தின் பைகள் .. | 112 |
| (ஆ) | வெற்று உரச்சாக்குப் பைகள் .. | 350 |
| (இ) | வெற்று சிமெந்துப் பைகள் .. | 125 |
| (ஈ) | 1 கலன் அளவுடைய வெற்றுத் தகரங்கள் .. | 37 |
| (உ) | 4 கலன் அளவுடைய வெற்றுத் தகரங்கள் .. | 5 |
| (ஊ) | 5 கலன் அளவுடைய வெற்றுத் தகரங்கள் .. | 5 |
| (எ) | 1 கலன் அளவுடைய கிமிநாசினி இருந்த வெற்றுத் தகரங்கள் .. .. | 86 |

(2) வவுனியா கமத்தொழிற் பண்ணை—

| | | |
|---|---|---|
| (அ) | மிளகாய்க் கோது இரு. .. .. | 12 |
| (ஆ) | 2½ புசல் அளவுடைய வெற்று சாக்குகள் .. | 750 |
| (இ) | மிருக உணவு வெற்றுச் சாக்குகள் .. | 1,000 |
| (ஈ) | 56 இரு. கொள்ளக்கூடிய கோழித்தீன் வெற்றுக் கடதாசிப் பைகள் .. .. | 500 |

2. கேள்விக்காரர்களுக்கு, கேள்விகள் அனுப்பு முன் காரியாலய நேரத்தில் பண்ணைக்கு வந்து பண்ணை முகாமையாளரின் முன்னிலையில் மேற்குறிப்பிட்ட பொருட்களைப் பரீட்சார்த்தமாகப் பார்வையிடுவதற்கு அனுமதியுண்டு. ஒவ்வொரு பொருட்களுக்கும் தனித்தனியாகவும், மிளகாய்க் கோதிற்கு ஒரு ருத்தலுக்கும் பெறுமதி குறிப்பிடப்பட வேண்டும்.

3. கேள்விகள் முடிவுறும் தினத்திற்கு முன்தினம் நண்பகல் 12 மணி வரையும் யாழ்ப்பாணம் கமத்தொழில் அதிகாரியினுல் (ப. மு. ஆ.) கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். கேள்வி ஒன்றுக்கு ரூபா 10 வைப்புப் பணமாகச் செலுத்திய பற்றுச்சீட்டை சமர்ப்பித்து கேள்விப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். வைப்புப்பணம் பேராதனை கமத்தொழிற்றிணைக்களத்திலோ அல்லது எந்த அரசாங்கச் செயலகங்களிலுமோ செலுத்திப் பற்றுச்சீட்டைப் பெறலாம்.

4. கேள்விப்பத்திரங்கள் இரட்டைப் பிரதியில் தயாரிக்கப்பட்டு பதிவுத் தபால் மூலம் கமத்தொழில் அதிகாரி (ப. மு. ஆ.), கமத்தொழிற் கந்தோர், யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு அனுப்புவதுடன் உறையின் இடதுபக்க மேல் மூலையில் " அரசாங்கப் பண்ணைகளில் வெற்றுச் சாக்குகள், தகரங்கள், பொலித்தின்–கடதாசிப் பைகள், மிளகாய்க் கோது ஆதியன விற்பனைக்கான கேள்விகள் " எனக் குறிப்பிட வேண்டும்.

5. தெரிவு செய்யப்பட்ட கேள்விக்காரர் பண்ணை முகாமையாளர் களால் குறிக்கப்படும் தினத்தில் முழுப் பணத்தையும் செலுத்தி பண்ணை முகாமையாளரிடமிருந்து பொருட்களைப் பெற்றுக்கொள்ள வேண்டும். குறிப்பிடப்பட்ட காலத்திற்குள் குறிக்கப்பட்ட தொகைப் பொருட்களைப் பெற்றுக் கொள்ளத் தவறின் அவற்றை வேறு முறையில் விற்பதற்கு நடவடிக்கை எடுப்பதுடன் அவருடைய வைப்புப்பணம் அரசாங்கத்தால் பறிமுதலாக்கப்பட்டு அவருடைய பெயர் கொந்த ராத்துக்காரரின் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு தாமத வேலை செய்யும் கொந்தராத்துக்காரரின் பட்டியலில் சேர்க்கப்படும். அத்துடன் அவரிடமிருந்து வேறு எதும் அறவீடு செய்வதற்கு அரசாங்கத்திற்கு எவ்விதத் தடையுமில்லை.

6. இது சம்பந்தமாக மேலதிக விபரங்களுக்கு கந்தளாய் நெற்கம முகாமையாளருக்கும், வவுனியாப் பண்ணை முகாமையாளருக்கும் கடிதம் எழுதியோ நேரிலோ அறிந்து கொள்ளலாம்.

பி. ரி. ஜினேந்திரதாச,
பிரதிக் கமத்தொழில் அத்தியட்சகர்,
(க. க. வும் ப.)

பேராதனை,
30.7.1969.

8–670—15.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,867

---

## நீர்ப்பாசனத் திணைக்களம்

**மொனருகல உப பிரிவு**

மொனருகல உபபிரிவிலுள்ள தம்பேவவவின் பாதையை தேவையான திருத்தங்கள் செய்து செப்பனிடுவதற்கான கேள்விப்பத்திரங்கள் பண்டார வளை ஊவாப்பிரிவு நீர்ப்பாசன பொறியியலாளரால் 5.9.69 வெள்ளிக் கிழமை காலை 10 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. ரூபா 35,000 தொகைக்கு அல்லது அதற்கு மேற்பட்ட நீர்ப்பாசன திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரர்களும், கிராம முன் னேற்ற சங்கங்களும், கூட்டுறவுச் சங்கங்களுமே இக்கேள்விப்பத்திரத் தைச் சமர்ப்பிக்கத் தகுதியுடையர்.

3. வெற்றுப்பத்திரங்கள் மொனருகல, பதுளை, மையங்கன நீர்ப்பா சன கந்தோர்களில் 1969 ம் ஆண்டு புரட்டாதி மாதம் 1 ம் திகதி நண்பகல் 12 மணிவரையும் காரியாலய நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம். கேள்வியாளராக முன்வருவோர் தங்கள் பதிவுப் புத்தகத்துடன் தாம் தற்போது திணைக்களத்தில் மேற் கொண்டுள்ள வேலைகளின் முழு விபரங்களையும் அவற்றின் பெறுமதியையும் ஒரு பத்திரத்தில் தெரியப் படுத்தி விண்ணப்பிக்க வேண்டும். கேள்விப்பத்திர கட்டுப்பணம் ரூபா 50 ஐ ஏதாவது ஒரு கச்சேரியில் அல்லது கேள்விப்பத்திரங்கள் பெற்றுக் கொள்ளும் நீர்ப்பாசன கந்தோர்களில் செலுத்தி கேள்விப்பத்திரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

4. இது சம்பந்தப்பட்ட மேலதிக விபரங்களை மொனருகல உபபிரிவு நீர்ப்பாசன பொறியியலாளரின் அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

ஏ. எப். மஹகமகே,
நீர்ப்பாசன பொறியியலாளர்,
மொனருகல உப பிரிவு.

நீர்ப்பாசன அலுவலகம்,
மொனருகல,
1969 ம் ஆண்டு ஆவணி மீ 2 ந் உ.

8–676—15.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,867

---

## நீர்பாசனப் பகுதி

**அம்பாந்தோட்டை உப பகுதி**

கீழ் குறிப்பிடும் வேலைகளுக்குரிய கேள்விப்பத்திரங்கள் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 9 ஆம் திகதி (9.9.69) முற்பகல் 10 மணிவரையும் தங்காலை, தென் பெரும்பாகப் பொறியிலாளரால் அவரது அலுவல கத்தில் பெற்று உடன் பரிசீலனை பெறும் .—

| வேலை விபரம் | பதிவுத்தொகை | கேள்வுக்கட்டுப் பணம் |
|---|---|---|
| முறுத்தாவலை நீர்தேக்கக் இடது | | ரூபா |
| வாய்க்கால் இருபிரிவுக்கட்டு அமைத்தல் .. | 25,000 .. | 25 |

2. மேற்குறிப்பிட்ட தொகையும் அதற்கு மேலும் பதிவுபெற்ற ஒப் பந்தக்காரார், கூட்டுறவு சங்கங்கள், கிராமமுன்னேற்றச் சங்கங்கள் ஆகிய வையே கேள்வி கேட்கத் தகுதியுடையர்.

3. கேள்விப்படிவங்கள் 29.8.69—5.9 69 வரை அம்பாந்தோட்டை நீர்ப்பாசன பொறியிலாளர் அலுவலகத்தில், இயங்கு நேரங்களில் பெற லாம். கேள்விப்படிவங்கள் கோரும் சமயம் தங்கள் பதிவேடும் அத்துடன் தற்சமயம் கையிருக்கும் ஒப்பந்தத் தொகையும் தகமை யறிதற் பொருட்டு சமர்ப்பிக்கவேண்டும். படிவங்கள் பெறுமுன் மேற் குறிப்பிட்ட கட்டுப்பணம் குறிப்பிட்ட அலுவகத்திலோ கச்சேரியிலோ கட்டிய பற்றுச்சீட்டு கொடுக்கவேண்டும்.

4. மேலதிக விபரங்கள் நீர்பாசனப் பொறியலாளர் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறியக்கூடும்.

பெ. சத்திவேல்,
நீர்ப்பாசன பொறியலாளர்,
அம்பாந்தோட்டை உப–பகுதி.

நீர்ப்பாசன அலுவலகம்,
அம்பாந்தோட்டை,
1969 ந் ஆண்டு ஓகஸ்ட் மீ 1 ந் உ.

8–678—15.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,867.

## நீர்ப்பாசனத் திணைக்களம்

### மாத்தளை உப பிரிவு

மாத்தளை உபபிரிவில் கீழ்க்காணும் வேலைகட்கு கேள்விப் பத்திரங்கள் நத்தரம் பொத்த குண்டசாலையில் உள்ள மத்திய பகுதி பெரும்பாக நீர்ப்பாசனப் பொறியியலாளரினால் 1969 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ம் திகதி காலை 10 மணி வரை ஏற்றுக்கொளப்படும். அதன் பின்பு உடனே திறக்கப்படும்.

1969–70, 1970–71 வருடங்களில் மாத்தளை உப பிரிவில் பொருட்கள் ஏற்றுச் செல்லுதல் (1.10.1969 திகதியிலிருந்து இருவருடங்களுக்கு) நீர்ப்பாசனத் திணைக்களத்தில் ரூ. 20,000 கும் அதற்கு மேலும் பதிவு செய்யப்பட்டுள்ள ஒப்பந்தக்காரர்கள் கிராம அபிவிருத்திச் சபைகள், பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மட்டுமே இக்கேள்விப்பத்திசங்கள் சமர்ப்பிக்கத் தகுதியுடையவராவர்.

ஒப்பந்தக்காரராக முன்வருவோர் தமது சொந்தத்தில் இரண்டு லொறியேனும் வைத்திருப்பதுடன் தேவைப்படின் செயிலர் பூட்டிய டிராக்டர் மூலம் பொருட்கள் ஏற்றிச் செல்லத் தயாராக இருக்க வேண்டும் கேள்விப் பத்திரங்கள் பெறுமுன்னர் தம்மிடம் லொரிகள் இருப்பதை அத்தாட்சிப் படுத்தும் விதத்தில் 1969 ம் ஆண்டுக்குரிய லைசென்ஸ் பத்திரத்தை சமர்ப்பித்தல் வேண்டும். மாத்தளை, கண்டி, கசலக்க, நுவரெலிய ஆகிய நீர்ப்பாசனப் பொறியியலாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் 1969 ம் ஆண்டு ஆகத்து 15 ந் திகதி தொடக்கம் செப்டம்பர் 4 ந் திகதி வரைக்கும் பெறக்கூடிய வெற்றுப் பத்திரங்களில் மாத்திரமே கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கேள்வியாளராக முன் வருவோர் தங்கள் பதிவுப் புத்தகங்களுடன் தாம் இப்போது இத்திணைக்களத்தில் மேற்கொண்டுள்ள வேலைகளின் விபரங்களையும் அவற்றின் பெறுமதிகளையும் ஓர் பத்திரத்தில் வெளிப்படுத்தி இக்கேள்விப் பத்திரங்களுக்கு விண்ணப்பிக்க வேண்டும். வெற்று பத்திரங்கள் வழங்கு முன்பு ரூ. 25 கேள்விக் கட்டணமாக ஓர் கச்சேரியில் அல்லது மேற்கூறிய பொறியலாளரின் அலுவலகங்களிலாவது செலுத்திப் பற்றுச் சீட்சையும் சமர்ப்பிக்க வேண்டும். கிராம முன்னேற்றச் சங்கங்கள், பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் இக்கட்டணம் செலுத்தத் தேவைப்படாது. இக் கேள்விக்காய விபரங்கள் எல்லாவற்றையும் மாத்தளை நீர்ப்பாசனப் பொறியிய்லாளரின் அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பெற்றுக்கொள்ளலாம்.

க. கனகலிங்கம்,
நீர்ப்பாசன பொறியியலாளர், மாத்தளை உபபிரிவு.

8–791—15.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,867

---

## நாடு நகர நிருமாணப் பிரிவு—உள்ளூராட்சி அமைச்சு

### இடம் துப்புரவு செய்தல், வெட்டுதல், நிரப்புதல், மட்டப்படுத்தல்—மாளிகாவத்தை அபிவிருத்தித் திட்டம்

மாளிகாவத்தை அபிவிருத்தித் திட்டத்தின் இரண்டாம் கட்டத்திற்குரிய நிலத்தைக் கழிவகற்றல், வெட்டுதல், நிரப்புதல், மட்டப்படுத்தலுக்குமான இலாஞ்சனையிட்ட கேள்வி இணைப்படிகளை 1969, ஒகத்து மாதம் 30 ஆம் திகதி மு. ப. 10 மணிவரை கொழும்பு 10, டீ. ஆர். விஜயவர்த்தன மாவத்தையில் உள்ள நாடு, நகர நிருமாணப் பிரிவின் கேள்விச் சபைத்தலைவர் ஏற்றுக்கொள்வார். அதே நாளில் நாடு, நகர நிருமாணப் பிரிவில் மு. ப. 10.15 மணிக்கு கேள்விகள் திறக்கப்படும் பொழுது கேள்விக்காரரும் சமுகம் அளிக்கலாம்.

2. கேள்விகள் நாடு, நகர நிருமாணப் பணிப்பாளர், டீ. ஆர். விஜயவர்த்தனமாவத்தை, கொழும்பு 10 என்ற முகவரிக்கு விண்ணப்பித்துப் பெறறகேள்விப்பத்திரப் படிவத்தில் இருத்தல் வேண்டும். கேள்விப்பத்திரப் படிவங்கள் 1969, ஒகத்து மாதம் 29 ஆம் திகதி பி. ப. 2.30 மணிவரை வழங்கப்படும். இவை சிவில்பொறியியலாளர் வேலைகளுக்காக 2,00,000 ரூபாவிற்கும் அதற்கு மேலும் ஏதாவது அரசாங்கத் திணைக்களத்தில் பதிவுசெய்த தகுந்த ஆதாரத்தையும் கேள்விவைப்பாக 100 ரூபாவையும் கொழும்பு 1, ஹேமாஸ் கட்டிடத்தில் உள்ள உள்ளூராட்சி அமைச்சிலாயினும் அல்லது கொழும்பிற்கு வெளியே உள்ள எந்த கச்சேரியிலாயினும் கட்டிய பற்றுச்சீட்டை உடையவர்களுக்கு வழங்கப்படும்.

3. அங்கீகரிக்கப்பட்ட சங்கங்களும் கேள்விகள் அனுப்பலாம். அவை மேலே பந்தி 2 ல் குறிப்பிட்டதற்கான தொகையை ஏதாவது அரசாங்கத் திணைக்களத்திலாவது பதிவு செய்திருத்தல் வேண்டும். அப்படியான சங்கங்கள் கேள்வி வைப்பில் இருந்து விதிவிலக்கப்படும்.

4. எல்லாக் கேள்விகளும் இலாஞ்சனையிடப்பட்டு உறையின் இடப்பக்க மேல்மூலையில் " மாளிகாவத்தை—நிலம் நிரப்பல் " எனக் குறிப்பிட்டுப் பதிவுத் தபாலிலோ அல்லது இந்நோக்கத்திற்காக நாடு நகர நிருமாணப் பிரிவில் வைத்திருக்கும் கேள்விப் பெட்டியில் இடப்பட்டோ அல்லது நாடு நகர நிருமாணப் பிரிவு அலுவலக உதவியாளரிடம் கையளித்ததற்கான ஒப்புக் கொள்ளுதலையோ பெறவேண்டும்.

என். குணரதன,
நாடு நகர நிருமாணப் பணிப்பாளர்.

நாடு நகர நிருமாணப் பிரிவு,
உள்ளூராட்சி அமைச்சு,
டீ. ஆர். விஜயவர்த்தன மாவத்தை,
கொழும்பு 10, ஒகத்து 6, 1969.

8–790—15.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,867

---

## காணி அபிவிருத்தித் திணைக்களம்

### சுமக்கக்கூடிய 20 நீர் பம்பிகள் வழங்குவதற்கான கேள்விப் பத்திரம்

பின்வரும் நீர்ப்பம்பியை வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள் 1969ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29 ம் திகதி முற்பகல் 11 மணிவரை காணி அபிவிருத்தி அதிபர் ஏற்றுக்கொள்வார்.

2. கேள்விக்காரர் பின்வருவனவற்றை வழங்குவதற்காகக் குறிக்கலாம். (அ) முன்னைய இருப்பும், கிருலப்பனை மத்திய வேலைத்தலத்தில் வழங்கப்பட்டமையும் கேள்விக்காரர் முந்திய விநியோகக் காலத்தைக் குறிப்பிடலாம்.

3. கேள்விப் பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 50 கட்டுப்பணமாக இவ்வலுவலகத்திலோ அல்லது காணி அபிவிருத்தி அதிபரின் 1ம் இலக்கக் கணக்கில் வரவு வைக்கும் பொருட்டு இலங்கை வங்கி (யோர்க் வீதி அலுவலகத்தில் ) யிலோ அல்லது கொழும்புக்கு வெளியிலுள்ள ஏதாவதொரு கச்சேரியிலோ. செலுத்தி 1969 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 28 திகதி நண்பகல் 12 மணிவரை அதற்குரிய பற்றுச்சீட்டைக் கொழும்பு 1, காணி அபிவிருத்தி அதிபருக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் இருபிரதிகளில் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்காலம்.

4. கேள்விப் பத்திரப்படிவங்கள் முதலியவற்றைப் பெற்றும் கேள்விப் பத்திரங்களைச் செலுத்தத் தவறுவோரின் வைப்புப்பணத்தை மீளப் பெறவேண்டுமாயின் கேள்விப்பத்திரங்களை அனுமதிப்பதற்காகக் குறிக்கப்பட்ட திகதியும் நேரமும் முடிவடையும் முன்னர் படிவங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

5. எல்லாக் கேள்விப்பத்திரங்களிலும் " மின்சக்தியால் இயங்கும் நீர்ப்பம்பிகள் வழங்குவதற்கான கேள்விப்பத்திரம் " எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டுக் காணி அபிவிருத்தி அதிபர், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1, என்ற முகவரியிட்டு அனுப்பப்படவேண்டும். கேள்விக்காரரின் பெயரும் முகவரியும் கடித உறையின் இடதுபக்கக் கீழ்மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப் பத்திரங்கள் தபால் மூலமாயின் பதிவுத்தபாலிலும் அல்லது கேள்விக்காரர் நேரடியாகவும் அல்லது அவரின் முகவர்மூலம் நேரடியாகவும் பிரதான கணக்காளர், காணி அபிவிருத்தித் திணைக்களத்திலோ அல்லது காணி அபிவிருத்தித் திணைக்களக் கேள்விப்பத்திரப் பெட்டியிலோ சேர்ப்பிக்கலாம்.

6. கேள்விப் பத்திரங்கள் நிரந்தரமானவையும், மாற்றமுடியாதவையுமாகும். கேள்விப்பத்திரங்களை ஒப்புநோக்குவதற்காக அவைகளைக் கேள்விப்பத்திர முடிவு திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் மீளப் பெற்றுக் கொள்ளக்கூடாது.

7. கேள்விக்காரர் விநியோகம் சம்பந்தமான முழுவிபரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். ஏற்றுக் கொண்ட விபரங்களில் ஏதாவது மாற்றமிருப்பின் அவ்வாறு குறிப்பிட்டுக் காட்ட வேண்டும்.

8. தேர்வு பெற்ற கேள்விக்காரர் விநியோகத்தில் தவறிழைப்பின் அவருடைய வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர் அரசாங்க வேலை ஒப்பந்தங்களைப் பெற முடியாது தவறிய ஒப்பந்தகாரர் பட்டியலில் சேர்க்கப்படுவர்.

9. கொழும்பு 1, எச்சலன் சதுக்கத்திலுள்ள காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் 1969 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29 திகதி முற்பகல் 11 மணிக்குக் கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப் பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விக்காரர் சமுகமளிக்கலாம்.

10. கேள்விப்பத்திரத்தில் சிலவற்றையேனும் அல்லது யாவற்றையேனும் நிராகரிக்க அல்லது சிலவற்றையேனும் ஏற்க அரசாங்கத்திற்கு ஆட்சேபணையற்ற உரிமையுண்டு.

11 மேலதிக தகவல்கள் வேண்டுமாயின் காணி அபிவிருத்தி அதிபரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

பீ. இரத்தினசிங்கம்,
காணி அபிவிருத்தி அதிபருக்காக.

காணி அபிவிருத்தித் திணைக்களம்,
எச்சலன் சதுக்கம்,
கொழும்பு 1,
1969 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 6 ம வ.

8–796—15.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,867

## காணி ஆணையாளர் திணைக்களம்

பின்வரும் வேலையைச் செய்வதற்கான கேள்விப்பத்திரங்களைத் த. பெ. எண் 500, கொழும்பு என்னும் முகவரியுள்ள காணி ஆணையாளர் திணைக்களத்தைச் சேர்ந்த கேள்விப்பத்திர சபைத் தலைவர் அவர்கள் 1969 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ம் திகதி பி. ப. 2.30 மணி வரை ஏற்றுக்கொள்வார்.

(1) **வேலையின் விபரம்:** மாத்தளையில், மாத்தளை ஓவல எஸ்டேட் கிராம விஸ்தார திட்டத்தின் தண்ணீர் எடுக்கும் குளாய் அமைத்தல்.

(2) கேள்விப் பத்திரங்கள் த. பெ. எண் 500, காணிக்கமிசனர் காரியாலயம், கேள்விப்பத்திர சபைத் தலைவர் என்ற விலாசத்திற்கு பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். கேள்விப்பத்திரங்கள் தபால் மூலம் அனுப்பப்படாவிட்டால் அவற்றை நேரடியாகக் கொழும்பிலுள்ள செயலகதின் 357 ம் இலக்க அறையினுள் வைத்திருக்கும் கேள்விப் பத்திரப் பெட்டியிலும் போடலாம்.

(3) இக்கேள்விக்கான வெற்றுக் கேள்விப்பத்திரங்கள் 1969 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ம் திகதி மு. ப. 10.30 மணி வரையும் மாத்தளைக் கசசேரியிலுள்ள காணிக் கந்தோரில் வழங்கப்படும். வேறு பத்திரங்களில் அல்லது விண்ணப்பப்பத்திரத்தில் கூறிய நிபந்தனைகளுக்க்டங்காத கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா.

(4) வெற்றுக் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும் மாத்தளைக் கச்சேரியில் ரூபா 100/- கேள்விக் கட்டணமாகக் கட்டிய பற்றுச் சீட்டு கேள்விக்காரர்களால் அரசாங்க அதிபருக்குக் காண்பிக்கபட வேண்டும். கேள்விப்பத்திரங்கள் இணைப்பிரதிகளாகப் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும்.

(5) ஏற்றுக் கொள்ளப்பட்ட கோள்வியாளர் முழுத் தொகையில் 5 சத வீதத்தை, பிணைத் தொகையாகக் கட்டல் வேண்டும். ஏற்றுக்கொள்ளப்பட்ட கேள்விக்குரியவர்கள் இது பற்றியவர்களுக்கு அறிவித்தல் கடிதத்திலுள்ள தினத்திலிருந்து 7 நாட்களுக்குள் இதற்குரிய பிணைத் தொகையைக் கட்டி ஒப்பந்தத்தைச் செய்யமறுத்தால் அன்னாரின் கேள்விப்பத்திர வைப்புப் பணம் திருப்பிக்கொடுபடமாட்டா. கேள்விப்பத்திரங்களை ஒப்புக் கொண்டபடிக்கு கேள்விக்காரர்களால் கொடுக்கப்பட்ட விலாசத்துக்கு அனுப்பினால், கேள்விக்காரர்களுக்கு கிடைத்திருக்குமென நம்பப்படும்.

(6) ஏதேனும் ஒரு கேள்வியை (ரெண்டர்) அல்லது அதன் பகுதியை ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ, கேள்விப்பத்திர சபைக்கு அதிகாரமுண்டு.

(7) மாத்தளை அரசாங்க அதிபரின் அனுமதியில்லாமல் ஏற்கப்பட்ட கேள்விக்காரர் வேறு யாராகிலும் ஒருவருக்கு வேலையை ஒப்படைத்தல் அல்லது ஒரு பாகத்தைக் கூலிக்குச் செய்வித்தல் கூடாது தெரிவு செய்யப்பட்ட கேள்விப்பத்திரகாரர் பயிற்றப்பட்ட/பயிற்றப்படாத இலங்கையரையே வேலைக்கமர்த்தல் வேண்டும். கூடிய வரை வேலை நடைபெறும் பிரதேசங்களில் இருந்து கூலியாட்களை வேலைக்கமர்த்தல் வேண்டும்.

(8) தங்கள் பதிவுப் புஸ்தகங்களைக் காட்டிய பதிவு செய்த ஒப்பந்தக்காரருக்கு மாத்திரமே கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படும். பதிவு செய்யப்படாத ஒப்பந்தக்காரர் தாங்கள் வசிக்கும் பகுதியிலுள்ள காரியாதிகாரியிடமிருந்து இவருக்கு 50,000 ரூபா பெறுமதியான வேலை கொடுப்பதற்கு தகுந்தவர் என கடிதம் அணைக்கப்படல் வேண்டும.

(9) பலநோக்க கூட்டுறவுச் சங்கங்களும் கிராம அபிவிருத்திச் சங்கங்களும் கேள்விப் பத்திரம் பெறுவதற்குக் கட்டுப்பண பற்றுச் சீட்டு தேவை அற்றது. இதற்குப் பதிலாக தங்கள் தலைமை அதிகாரியிடமிருந்தோ அல்லது காரியாலயத்திலிருந்தோ இச்சங்கம் பதிவு செய்யப்பட்ட சங்கமெனவும் இது இவ்வேலையைப் பொறுப்பெடுப்பதற்கு தகுந்ததெனவும் அத்துடன் இச்சங்கத்தால் இவ்வேலை செய்வதற்கென பேசியுள்ள கூட்ட அறிக்கையும் காண்பிக்கப்படல் வேண்டும்.

வேறு விபரங்கள் மாத்தளைக் காணிக்கிளை, கச்சேரி, மாத்தளையில் பெற்றுக்கொள்ளமுடியும்.

ஜெ. எச். எம். அபயகோன்,
மாத்தளை அரசாங்க அதிபருக்காக.

கச்சேரி, மாத்தளை.
1969 ம் ௵ ஆகஸ்ற் ௴ 3 ந உ.

8–754—15.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,867.

---

## ஹம்பாந்தோட்டைக் கச்சேரி

### பனம் விதைகள் விநியோகிப்பதற்குக் கேள்விப்பத்திரங்கள்

ஹம்பாந்தோட்டையில் விதைப்பதற்காகத் தேவைப்படும் 30,000 பனம் விதைகளுக்கு கேள்விப் பத்திரங்கள், ஹம்பாந்தோட்டைக் கச்சேரியில் 1969 ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5 ந் திகதி, பி. ப. 3.00 மணிவரை ரெண்டர் சபைத்தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

2. கேள்விக்கட்டணமாக எந்த ஒரு கச்சேரியிலாவது ரூபா 10/- ஐக் கட்டிப் பெறும் பற்றுச் சீட்டைக் காண்பித்து வெற்றுக் கேள்விப்பத்திரங்களை அக்கச்சேரியில் பெற்றுக் கொள்ளலாம்.

3. கேள்விப்பத்திரங்கள் (இணைப்பிரதிகள்) பதிவுத்தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். ஹம்பாந்தோட்டைக் கசசேரியிலுள்ள கேள்விப்பத்திரப் பெட்டியில் நேரடியாகவும் சேர்க்கலாம். கேள்விப் பத்திரம் பொறியிடப்பட்ட உறையிலிட்டு அதன் இடப்பக்க மேல் மூலையில் " பனம் விதைகள் விநியோகிப்பதற்கான கேள்விப்பத்திரங்கள் " என எழுதப்படல் வேண்டும். குறிப்பிட்ட நேரத்திற்கு முன் ரெண்டர் சபைத் தலைவரிடம் சேர்ப்பிக்கவேண்டும்.

4. நிர்ணயிக்கப்படும் விலை விபரம் விநியோகத்திற்காகவும், ஹம்பாந்தோட்டைக் கச்சேரியில் 1969 ம் வருடம் அக்டோபர் 10 ந் திகதிக்கு முன் கொண்டு வந்து சேர்ப்பதற்காகவுமாயிருத்தல் வேண்டும்.

5. கேள்விக்காரர்களோ அல்லது அவர்களின் அதிகாரம் பெற்ற பிரதி நிதிகளோ 1969 ம் வருடம் செப்டம்பர் மாதம் 5 ந் திகதி பி. ப. 3.00 மணிக்குக் கச்சேரியில் கேள்விப்பத்திரம் திறக்கப்படும் நேரத்தில் பிரசன்னமாயிருக்க அனுமதிக்கப்படுவர்.

6. எந்தவொரு கேள்விப்பத்திரத்தையோ அல்லது எல்லாக்கேள்விப்பத்திரங்களையுமோ ஏற்கவோ, நிராகரிக்கவோ ஹம்பாந்தோட்டைக் கச்சேரி ரெண்டர் சபைத் தலைவருக்கு உரிமையுண்டு.

7. கொன்துருத்துக்காக ஒட்டப்படும் முத்திரை வரிச்செலவு தேர்ந்தெடுக்கப்படும் கேள்வியாளரால் கட்டப்படல் வேண்டும்.

8. தேர்ந்தெடுக்கப்பட்ட கேள்விக்காரர்களுக்குக் கொடுக்கப்படும் அறிவித்தல்கள் நேரிலோ அல்லது கேள்விப்பத்திரத்தில் குறிப்பிட்ட விலாசத்திற்குத் தபால் மூலமாக அனுப்பப்படினுமோ அவருக்குச் சேர்கப்பட்டதாகக் கருதப்படும்.

9. விதைகள் விதைப்பதற்குத் தகுதியுள்ளனவாகவிருத்தல் வேண்டும். தகுதியானவை என மாவட்ட விவசாய அபிவிருத்தி அதிகாரியினால் சிபார்சு செய்யப்படும் விதைகளுக்கே பணம் கொடுக்கப்படும்.

10. மேலும் விபரங்கள் ஹம்பாந்தேட்டை அரசாங்க அதிபரிடம் பெற்றுக் கொள்ளலாம்.

ஏம். டீ. ஈ. குணதிலக,
ஹம்பாந்தோட்டை மாவட்ட அரசாங்க அதிபருக்காக.

ஹம்பாந்தோட்டைக் கச்சேரி,
1969 ம் ௵ ஆகஸ்ட் ௴ 6 ந உ.

8–816—15.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,867.

---

## சமூக சேவைப் பகுதி

### குருடர், செவிடர் வேலைத்தலம்—சீதுவை

கீழே கையொப்பமிடுபவரால் 1969 ஆம் செத்தெம்பர் மாதம் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 10 மணிவரை, 1969 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 1 ஆம் திகதி முதல் 1970 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை, மேற்குறிக்கப்பட்ட தாபனத்தில் உள்ள விடுதிக்கு பாண், அப்பம், பலகாரம் கொடுப்பதற்குப் பொறியிட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கொழும்பிலுள்ள சமூக சேவைப் பகுதியில் ரூபா 25 கட்டிப் பற்றுச் சீட்டுக் கொடுத்துக் கீழே கையொப்பமிடுபவரிடம் பெற்றுக் கொள்ளும் கேள்விப்பத்திரத்தில் கேள்விகள் தயாரிக்கப்படல் வேண்டும். வேறு விபரங்களைச் சீதுவை — குருடர், செவிடர் வேலைத்தல அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளவும்.

ஏ. எம். எம். சகாப்தீன்,
சமூக சேவை அதிகாரி.

சமூக சேவைப் பகுதி,
த. பெ. இல. 577,
கொழும்பு 3.
1969 ம் ௵ ஓகத்து ௴ 15 ந உ.

8–870/1—15.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,867.

## சமூக சேவைப் பகுதி

### கொக்கல, மிரிகாமம், அனுராதபுரம், கைதடி ஆகிய இடங்களிலுள்ள அரசினர் வயோதிப இல்லங்கட்குச் சேவைகள் செய்வதற்கும், பொருட்கள் வினியோகம் செய்வதற்கும் கேள்விப்பத்திரங்கள்

1969 ஆம் ஆண்டு ஒற்ரோபர் 1 ஆம் திகதி முதல் 1970 ஆம் ஆண்டு செத்தெம்பர் 30 ஆம் திகதிவரை 2 ஆம் பந்தியிற் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிக்கப்பட்ட சேவைகளை ஆற்றுவதற்கும், பொருட்களை வினியோகம் செய்வதற்கும், பொறியிடப்பட்ட கேள்விகளைச் சமூக சேவைப் பகுதி அதிகாரி ஏற்பார்.

2. கொக்கல, மிரிகாமம், அனுராதபுரம், கைதடி ஆகிய பகுதிகளிலுள்ள அரசினர் வயோதிப இல்லங்களில் அல்லது இந்தக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளப்படும் மாதிரிப்பத்திரத்தில் இரட்டைப் பிரதியில் கேள்விகள் தயாரிக்கப்பட்டு அனுப்பப்படல் வேண்டும். கேள்விகள் சம்பந்தமான ஒப்பந்த நிபந்தனைகள், மாதிரிப்பத்திரங்கட்கு விண்ணப்பிக்கும் சமயத்தில் கேள்வியாளர்கட்கு விளக்கப்படும். பின்னால் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையில் குறிக்கப்பட்ட சேவைகளுள் ஒன்றிற்காவது அல்லது பலவிற்காவது கேள்விகளை அனுப்பலாம். ஒவ்வொரு இல்லஞ் சம்பந்தமான சேவைக்கும் அல்லது ஒவ்வொரு இல்லஞ் சம்பந்தமான வினியோகத்திற்கும், பிரத்தியேகமான ஒவ்வோர் கேள்வி பதிவு செய்த தபாலில் அனுப்பப்படுதல் வேண்டும்.

3. கேள்விகள், 1969 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 29 ஆம் திகதி நண்பகல் 12 மணிக்கு மூடப்படும். இதே தினத்தில் பிற்பகல் 2.30 மணிக்குக் கேள்விகள் திறக்கப்படும். கேள்விகள் திறக்கப்படும் நேரத்தில் கேள்வியாளர்கள் நேரில் சமூகமளிக்கலாம். கேள்வியாளர்களின் பெயர்களும், விகிதங்களும், நேரில் சமூகமளிக்கும் கேள்வியாளர்கட்கு வாசித்துக் காட்டப்படும்.

4. பின்னாற் கொடுக்கப்பட்ட அட்டவணையின் 3 ஆம் பந்தியில் குறிக்கப்பட்ட கட்டுப்பணத் தொகையை இந்தக் காரியாலயத்தில் அல்லது கொக்கல, மிரிகாமம், அனுராதபுரம், கைதடி ஆகிய இடங்களிலுள்ள அரசினர் வயோதிப இல்லங்களிலுள்ள அதிபர்களிடம் கட்டிப் பெற்றுக் கொள்ளும் பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்தே கேள்வி விண்ணப்பப் பத்திரங்களைப் பெற்றுக் கொள்ளலாம். கேள்வி விண்ணப்பப் பத்திரங்கட்குத் தபால் மூலம் விண்ணப்பஞ் செய்பவர்கள் நேரத்துடன், கட்டுப்பணத் தொகையைச் சமூக சேவை அதிகாரிக்கு எழுதப்பட்ட மணிஓடர்மூலம், இக்காரியாலயத்திற்கு அனுப்பிவைத்தல் வேண்டும். நேரத்துடன் ஒருவர் கேள்வி விண்ணப்பப்பத்திரங்களைப் பெற்றுக் குறிக்கப்பட்ட திகதிக்குமுன், கேள்விகளை அனுப்புவதற்கு இதுவேமுறை.

தெரிந்தெடுக்கப்படாத கேள்வியாளர்களின் கட்டுப்பணங்கள் திருப்பிக் கொடுக்கப்படும்.

5. இக்காரியாலயத்திலுள்ள கேள்விப் பெட்டியில், கேள்விகளை நேரில் கொண்டுவந்து போடலாம் அல்லது கேள்விகளைப் பதிவுசெய்யப்பட்ட தபாலில், " சமூக சேவை அதிகாரி, சமூக சேவைப் பகுதி, பாலதக்ஷ மாவத்தை, கொழும்பு 3 " என்ற விலாசத்திற்கு அனுப்பலாம். தபால் உறையின் இடதுகை மேல் மூலையில், " **வினியோகத்திற்கும், சேவைகட்கும் கேள்விகள், 1969/70** " அரசினர் வயோதிப இல்லம் :........................................................................................................................................
(அரசினர் வயோதிபர் இல்லத்தின் பெயரை எழுதவும்) என்ற வார்த்தைகள் எழுதப்பட்டிருத்தல் வேண்டும்.

6. கேள்வி விண்ணப்பப் பத்திரங்களைச் சரியாகவும், பூரணமாகவும், நிரப்பி அனுப்பும்படி கேள்வியாளர்களை வேண்டிக்கொள்கிறோம். சரியாக நிரப்பப்படாத கேள்விகளை ரத்துச்செய்வதற்குச் சமூக சேவை அதிகாரிக்கு அதிகாரமுண்டு.

7. தெரிவு செய்யப்பட்ட ஒரு கேள்வியாளருக்கு, அன்னாரின் தெரிவு பற்றி அறிவிக்கப்பட்ட சந்தர்ப்பத்தில், கேள்வியாளர் ஒப்பந்தஞ் செய்யத்தவறினால், அல்லது கட்டுப்பணம் கட்டத்தவறினால், ஆரம்பத்தில் கட்டிய கட்டுப்பணத்தை அன்னார் இழக்க வேண்டி நேரிடும்.

8. எந்த ஒரு கேள்வியையாவது அல்லது எல்லாக் கேள்விகளையுமாவது, ஒருவருடத்திற்கு மேற்படாத ஒரு காலவெல்லைக்குட்பட்ட ஒரு கேள்வியையாவது விசாரணையின்றி ரத்துச்செய்ய அரசாங்கத்திற்குச் சகல அதிகாரமும் உண்டு.

செ. நிற்குணனந்தன்,
சமூக சேவை அதிகாரிக்குப் பதிலாக.

சமூக சேவைப் பகுதி,
பாலதக்ஷ மாவத்தை, கொழும்பு 3,
1969 ம் ஆண்டு ஓகத்து மீ 7 ந் உ.

**அட்டவணை**

| | (1) தாபனத்தின் பெயர் | (2) வினியோகம் அல்லது சேவை | (3) கேள்விக் கட்டுப்பணம் ரூபா | (4) பிணைவைப்பு ரூபா |
|---|---|---|---|---|
| 1. | அரசினர் வயோதிபர் இல்லம், மிரிகாமம் .. | விறகு ஏற்றிச் செல்வதற்கு .. | 10 | .. ரூபா 100. மேற்கொண்டு ரூபா 90 தெரிந்தெடுக்கப்பட்ட கேள்வியாளரால் பாக்கிப் பிணைவைப்பாகக் கட்டப்படல் வேண்டும் |
| 2. | கைதடி அரசினர் வயோதிபர் இல்லம் .. | விறகு ஏற்றிச் செல்வதற்கு .. | 10 | |
| 3. | அனுராதபுரம், அரசினர் வயோதிபர் இல்லம் .. | விறகு ஏற்றிச் செல்வதற்கு .. | 10 | |
| 4. | கொக்கல அரசினர் வயோதிபர் இல்லம் .. | சவப்பெட்டி வினியோகம் செய்வதற்கு .. | 10 | .. ரூபா 25. மேற்கொண்டு ரூபா 15 தெரிந்தெடுக்கப்படும் கேள்வியாளரால் பாக்கிப்பிணைவைப்பாகக் கட்டப்படல் வேண்டும் |
| 5. | மிரிகாமம் அரசினர் வயோதிபர் இல்லம் .. | சவப்பெட்டி வினியோகம் செய்வதற்கு .. | 10 | |
| 6. | அனுராதபுரம் அரசினர் வயோதிபர் இல்லம் .. | சவப்பெட்டி வினியோகம் செய்வதற்கு .. | 10 | |
| 7. | கைதடி அரசினர் வயோதிபர் இல்லம் .. | சவப்பெட்டி வினியோகம் செய்வதற்கு .. | 10 | |
| 8. | கொக்கல அரசினர் வயோதிபர் இல்லம் .. | அழுக்குத்துணிகளைச் சலவைசெய்வதற்கு .. | 25 | .. ரூபா 100. மேற்கொண்டு ரூபா 75 தெரிந்தெடுக்கப்படும் கேள்வியாளரால் பாக்கிப் பிணைவைப்பாகக் கட்டப்படல் வேண்டும் |
| 9. | மிரிகாமம் அரசினர் வயோதிபர் இல்லம் .. | அழுக்குத்துணிகளைச் சலவைசெய்வதற்கு .. | 25 | |
| 10. | அனுராதபுரம் அரசினர் வயோதிபர் இல்லம் .. | அழுக்குத்துணிகளைச் சலவைசெய்வதற்கு .. | 25 | |
| 11. | கைதடி அரசினர் வயோதிபர் இல்லம் .. | அழுக்குத்துணிகளைச் சலவைசெய்வதற்கு .. | 25 | |
| 12. | கொக்கல அரசினர் வயோதிபர் இல்லம் .. | ஒரு பகுதிநேர முடிவினைஞர் முகம் வழிப்பதற்கும் முடிதிருத்துவதற்கும் | 10 | .. ரூபா 50. மேற்கொண்டு ரூபா 40 தெரிந்தெடுக்கப்படும் கேள்வியாளரால் பாக்கிப்பிணை வைப்பாகக் கட்டப்படல் வேண்டும் |
| 13. | மிரிகாமம் அரசினர் வயோதிபர் இல்லம் .. | ஷை .. | 10 | |
| 14. | அனுராதபுரம் அரசினர் வயோதிபர் இல்லம் .. | ஷை .. | 10 | |
| 15. | கைதடி அரசினர் வயோதிபர் இல்லம் .. | ஷை .. | 10 | |

8–801—15.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,867

## சமூக சேவைப் பகுதி

### குருடர், செவிடர் வேலைத்தலம்—சீதுவை

கீழே கையொப்பமிடுபவரால் 1969 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பகல் 10.00 மணி வரையில், மேற்குறிக்கப்பட்ட தாபனத்தில், 1969 ஆம் ஆண்டு ஒற்ரோபர் மாதம் 1 ஆம் திகதி முதல் 1970 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 30 ஆம் திகதி வரை, அழுக்குத் துணிகளைச் சலவை செய்வதற்கு பொறியிட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

கொழும்பிலுள்ள சமூக சேவைப் பகுதியில், ரூபா 25 கட்டிப் பற்றுச் சீட்டுக் கொடுத்து கீழே கையொப்பமிடுபவரிடம் பெற்றுக்கொள்ளும் கேள்விப்பத்திரத்தில் கேள்விகள் தயாரிக்கப்படல் வேண்டும். வேறு விபரங்களை சீதுவை — குருடர், செவிடர் வேலைத்தல அதிகாரியிடமிருந்து பெற்றுக்கொள்ளவும்.

ஏ. எம். எம். சகாப்தீன்,
சமூக சேவை அதிகாரி.

சமூக சேவைப் பகுதி,
த. பெ. இல. 577,
கொழும்பு 3,
1969 ம் ஆண்டு ஓகத்து மீ 15 ந் உ.

8—870/2—15.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,867.

---

## வித்தியாபகுதி

கீழ்க்காணும் வேலைக்கான கேள்விப்பத்திரங்கள் 1969 ம் ஆண்டு செத்தம்பர் மாதம் 7 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மு. ப. 10.30 மணிவரை யாழ்ப்பாண வட பெரும்பாக கல்வித் திணைக்களக் கேள்விச் சபைத் தலைவரால் ஏற்றுக்கொள்ளப்படும்.

| பாடசாலைப் பெயர் | வேலை விபரங்கள் |
|---|---|
| யா/பலாலி ஆசிரியர் கலாசாலை .. | விடுதி மனைக் கட்டடம் அமைத்தல். |

மாவட்ட குறுக்கம்
யா=யாழ்ப்பாண மாவட்டம்

**குறிப்பு** :— பதிவுத்தகைமை.

மேற்கூறிய வேலைக்கு ரூபா 48,500 மும் அதற்கு மேலும்.

2. இவ்வேலைகளுக்கான கேள்விப்பத்திரங்கள் குறிப்பில் கொடுக்கப்பட்ட தொகைகளுக்கு கல்வி, கலாச்சார அமைச்சில், பொது வேலைப்பகுதியில் அல்லது நீர்ப்பாசனத் திணைக்களத்தில் பதியப்பட்டவர்களுக்கு 1969 ம் ஆண்டு செத்தம்பர் மாதம் 6 ம் திகதி சனிக்கிழமை நண்பகல் 12 மணிவரை வடபெரும்பாக கல்வியதிபதி அவர்களால் வழங்கப்படும். (நீர்ப்பாசனத் திணைக்களத்தில் ரூபா 15,000 க்கும் அதற்கு குறைந்த தொகைக்கும் பதியப்பட்டவர்கள் மேற்படி வேலைகளுக்கு விண்ணப்பிக்கத் தகுதியுடையவர் அல்லர்). இவ்வேலைகளுக்கு ரூபா 100/- கொழும்பு கலாச்சார அமைச்சு அலுவலகத்திலோ அல்லது வடபெரும்பாக கல்வித்திணைக்களத்திலோ அல்லது கொழும்புக்கு வெளியேயுள்ள எக்கச்சேரியிலோ கட்டியதாக பற்றுச் சீட்டு வடபெரும்பாக வித்தியாதிபதியிடம் சமர்ப்பிக்கப்பட வேண்டும். காசோலை, மணியோடர், போஸ்ரலோடர் ஆகியன ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கேள்விப்பத்திரங்களுக்கான காசு கட்டுவதற்குரிய பத்திரங்கள் கொழும்பு 2, மலாய் வீதியிலுள்ள கல்வி, கலாச்சார அலுவல்கள் அமைச்சின் நிரந்தரச் செயலாளரின் அலுவலகத்துப் பாடசாலை வேலைகள் கிளையிலிருந்து அல்லது வடபெரும்பாக கல்வியதிபதியின் அலுவலகத்திலிருந்து பெற்றுக்கொள்ள வேண்டும். குறிப்பில் காண்பிக்கப்பட்டபடி பதியப்பட்டதாக அத்தாட்சி காண்பிப்பவர்களுக்கு மாத்திரமே பணமிடும் பத்திரம் வழங்கப்படும்.

3. நீர்ப்பாசனத் திணைக்களத்தில், பொதுவேலைப்பகுதியில் அல்லது கல்வி அமைச்சில் குறிப்பில் கொடுக்கப்பட்ட தொகைளுக்கு பதியப்பட்ட அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள், இவ்வேலைகளுக்கு விண்ணப்பிக்க முடியும், அங்கீகரிக்கப்பட்ட சங்கங்கள் இடுபணம் செலுத்துவதிலிருந்து விலக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு கேள்விப்பத்திரங்கள் வழங்கப்படுமுன் குறிப்பில் கொடுக்கப்பட்ட தொகைகளுக்கு பதியப்பட்டதாக அவை அத்தாட்சி காண்பித்து கேள்விப்பத்திர படிவங்களை பெற்றுக்கொள்ளலாம்.

4. 2 ம் 3 ம் பந்தியில் குறிப்பிட்டபடி வடபெரும்பாக வித்தியாதிபதியிடமிருந்து பெறக்கூடிய கேள்விப்பத்திரங்கள் இரட்டைப் பிரதிகளில் அவரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம். அக்கந்தோரிலிருந்து வேண்டிய மாதிரிப்படம் பிறவிபரங்களும் அறியலாம். கேள்விப்பத்திரங்கள் பதிவுசெய்த தபால்மூலம் தலைவர், கேள்விச்சபை, வடபெரும்பாக கல்வித்திணைக்களம், 153, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற விலாசமிட்டு அனுப்பப்பட வேண்டும். உள்ளூர் விண்ணப்பகாரர்கள் கேள்விப்பத்திரங்கள் தபாலில் அனுப்ப விரும்பாவிடின் விண்ணப்பகாரரோ அல்லது அவரின் பிரதிநிதியோ தமது கேள்விப்பத்திரங்களை அடையாள முத்திரையிட்டு யாழ்ப்பாண கல்வித்திணைகள நிர்வாக உதவியாளரிடம் கொடுத்து பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளல் வேண்டும். மேலுறையில் விண்ணப்பக்காரரின் பெயர், விலாசம் முதலியன குறிப்பிடப்பட வேண்டும்.

5. 1969 ம் ஆண்டு செத்தம்பர் மாதம் 7 ம் திகதி ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு கேள்விப்பத்திரங்கள் யாழ்ப்பாண, 153, ஆஸ்பத்திரி வீதியிலுள்ள வடபெரும்பாக கல்வித் திணைக்களத்தில் திறக்கப்படும். விண்ணப்பக்காரர்கள் இவ்வேளையில் அங்கு பிரசன்னமாய் இருக்கலாம். அவர்களுக்கு கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பித்தவர்களின் பெயர்களும் தொகையும் வாசித்துக் காண்பிக்கப்படும்.

6. கேள்விப்பத்திரங்களை பெறும் திகதி முடிவடைந்தபின் ஆறு வாரங்களுக்கு தமது கேள்வியை அமுலில் வைக்க வேண்டுமென்று கேள்விப்பத்திரம் சமர்ப்பிப்போர் வேண்டப்படுவர்.

7. யாழ்ப்பாண வடபெரும்பாக கல்வித் திணைக்கள பாடசாலை வேலைகள் கிளையில் பரிசீலனைக்கென கேள்விப்பத்திரங்கள் கிடைக்கக் கூடியதாய் இருக்கும்.

8. இக் கேள்விப்பத்திரங்களுக்கு 30.9.1966 க்கு முன் கல்வித் திணைக்களத்தால் பதியப்பட்ட ஒப்பந்தகாரப் பதிவுகள் கல்வி, கலாச்சார அமைச்சினுல் பதிவு செய்யப்பட்டதாகக் கருதப்படும்.

சி. தணிகாசலம்,
கல்வியதிபதி,
வட பெரும்பாகம், யாழ்ப்பாணம்.

கல்வித்திணைக்களம், 153, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம், 4.8.1969.

8—686—15.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,867

---

## காணி அபிவிருத்தித் திணைக்களம்

### மின்சக்தியால் இயங்கும் நீர்ப்பம்பி ஒன்று வழங்குவதற்கான கேள்விப்பத்திரம்

மின்சக்தியால் இயங்கும் நீர்ப்பம்பி ஒன்று வழங்குவதற்கான கேள்விப் பத்திரங்களை 1969.9.5 ந் திகதி முற்பகல் 11 மணிவரை காணி அபிவிருத்தி அதிபர் ஏற்றுக்கொள்வார்.

2. கேள்விக்காரர்கள் பின்வருவனவற்றை வழங்குவதற்காகக் குறிக்கலாம் : (அ) முன்னைய இருப்பு உள்வரும் பொருட்கள் (ஆ) கப்பலிலிருந்து உட்கொணரப்பட்டு இருலப்பனை மத்திய வேலைத்தளத்தில் விநியோகிக்கப்பட்டவை. கேள்விக்காரர்கள் முந்திய விநியோகக் காலத்தைக் குறிப்பிடலாம்.

3. கேள்விப்பத்திரங்கள் பெறுவதற்கு ரூபா 25 கட்டுப்பணமாக இவ்வலுவலகத்திலோ அல்லது காணி அபிவிருத்தி அதிபரின் 1 ஆம் இலக்கக் கணக்கில் வரவுவைக்கும் பொருட்டு இலங்கை வங்கி (யோர்க் வீதி அலுவலகத்தில்) யிலோ அல்லது கொழும்புக்கு வெளியிலுள்ள ஏதாவது ஒரு கச்சேரியிலோ செலுத்தி 1969.9.4 நண்பகல் 12 மணிவரை அதற்குரிய பற்றுச்சீட்டைக் கொழும்பு 1 காணி அபிவிருத்தி அதிபருக்குச் சமர்ப்பிப்பதன் மூலம் அவரிடமிருந்து பெறக்கூடிய படிவங்களில் இரு பிரதிகளில் கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிக்கலாம்.

4. கேள்விப்பத்திரப் படிவங்கள் முதலியவற்றைப் பெற்றும் கேள்விப் பத்திரங்களைச் செலுத்தத் தவறுவோரின் வைப்புப் பணத்தை மீளப் பெறவேண்டுமாயின் கேள்விப் பத்திரங்களை அனுமதிப்பதற்காகக் குறிக்கப்பட்ட திகதியும் நேரமும் முடிவடையுமுன்னர் படிவங்களைத் திருப்பிக் கொடுக்க வேண்டும்.

5. எல்லாக் கேள்விப்பத்திரங்களிலும் " மின்சக்தியால் இயங்கும் நீர்ப்பம்பி ஒன்று வழங்குவதற்கான கேள்விப்பத்திரங்கள் " எனக் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் குறிப்பிட்டுக் காணி அபிவிருத்தி அதிபர், எச்சலன் சதுக்கம், கொழும்பு 1, என்ற முகவரியிட்டு அனுப்பப்பட வேண்டும். கேள்விக்காரரின் பெயரும் முகவரியும் கடித உறையின் இடதுபக்கக் கீழ் மூலையில் குறிப்பிடப்பட்டிருத்தல் வேண்டும். கேள்விப்பத்திரங்கள் தபால் மூலமான பதிவுத் தபாலிலும் அல்லது கேள்விக்காரர் நேரடியாகவும் அல்லது அவரின் முகவர் மூலமும் நேரடியாகவும் பிரதான கணக்காளர், காணி அபிவிருத்தித் திணைக்

களத்திலோ அல்லது காணி அபிவிருத்தித் திணைக்களக் கேள்விப் பத்திரப் பெட்டியிலோ சேர்ப்பிக்கலாம்.

6. கேள்விப்பத்திரங்கள் நிரந்தரமானவையும் மாற்ற முடியாதவையுமாகும். கேள்விப்பத்திரங்களை ஒப்பு நோக்குவதற்காக அவைகளைக் கேள்விப்பத்திர முடிவு திகதியிலிருந்து 60 நாட்களுக்குள் மீளப் பெற்றுக்கொள்ளக் கூடாது.

7. கேள்விக்காரர்கள் விநியோகம் சம்பந்தமான முழு விபரங்களையும் சமர்ப்பிக்க வேண்டும். ஏற்றுக்கொண்ட விபரங்களில் ஏதாவது மாற்ற மிருப்பின் அவ்வாறு குறிப்பிட்டுக் காட்ட வேண்டும்.

8. தேர்வுபெற்ற கேள்விக்காரர் விநியோகத்தில் தவறிழைப்பின் அவருடைய வைப்புப்பணம் பறிமுதல் செய்யப்படுவதுடன் அவர் அரசாங்க வேலை ஒப்பந்தங்களைப் பெறமுடியாது தவறிய கேள்விக்காரர் பட்டியலில் சேர்க்கப்படுவர்.

9. கொழும்பு 1, எச்சலன் சதுக்கத்திலுள்ள காணி அபிவிருத்தித் திணைக்களத்தில் 1969.9.5 ந் திகதி முற்பகல் 11 மணிக்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். கேள்விப்பத்திரங்கள் திறக்கும் நேரத்தில் கேள்விக்காரர் சமுகமளிக்கலாம்.

10. கேள்விப்பத்திரத்தில் சிலவற்றையேனும் அல்லது யாவற்றையேனும் நிராகரிக்க அல்லது சிலவற்றையேனும் ஏற்க அரசாங்கத்திற்கு ஆட்சேபனையற்ற உரிமையுண்டு.

11. மேலதிக தகவல்கள் வேண்டுமாயின் மேற்பார்வைப் பொறியியலாளர், காணி அபிவிருத்தித் திணைக்களம், கொழும்பிலிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

பொ. இரத்தினசிங்கம்,
காணி அபிவிருத்தி அதிபருக்காக.

காணி அபிவிருத்தித் திணைக்களம்,
எச்சலன் சதுக்கம்,
கொழும்பு 1,
1969 ம் ஆ ஓகத்து மீ 8 ந உ.
CT/2/378.

8–795—15.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,867

---

# பொருட்கள் விற்பனையும் பிறவும்

## நில அளவைத் திணைக்களம்

### பாவனைக்கு உதவாத பொருள்களின் ஏலவிற்பனை

150வது இலக்கம், கிருல வீதி, கொழும்பு 5ல் உள்ள நிலஅளவைப் பகுதி அலுவலகத்தில், கீழ்க்காணும் பாவனைக்கு உதவாத பொருள்கள், 1969 ம் ஆண்டு ஆவணி மாதம் 25 ம் திகதி மு.ப. 10 மணிக்குப் பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.

| | | |
|---|---|---|
| 1. | இலாந்தர் சிமினிகள் | 327 |
| 2. | சிறிய போத்தல்கள் (“ சி ” யிலிருந்து “எல்” வரை அடையாளம் இடப்பட்டுள்ளது) | 10 குவியல்கள் |
| 3. | ஒருகலன் கொள்ளும் வட்டமான எண்ணெய்த் தகரங்கள் | 31 |
| 4. | ஒருகலன் கொள்ளும் தகரங்கள் | 5 |
| 5. | பெரிய போத்தல்கள் (“ஓ” என்னும் அடையாளம் கொண்டது) | 1 குவியல் |
| 6. | நடுத்தரப் போத்தல்கள் (“பி” அடையாளம் கொண்டது) | 1 „ |
| 7. | சிறிய போத்தல்கள் (“கியு” அடையாளம் கொண்டது) | 1 „ |
| 8. | பழைய பட்டரிகள் | 9 |
| 9. | பழைய வர்த்தமானிகள் | 1 குவியல் |
| 10. | எண்ணெய்ப் பேணிகள் | 18 |
| 11. | பெற்ரோல் பேணிகள் | 2 |
| 12. | நாலு கலன் கொள்ளும் உருக்குத் தகரங்கள் | 2 |
| 13. | பாவனைக்கு உதவாத புல்வெட்டிகள் | 4 |

2. மேற்கூறிய பொருள்களை 1969 ம் ஆண்டு ஆவணி மாதம் 24 ந் திகதி காலை 10 மணி முதல் மாலை 4 மணி வரை மேற்கூறிய விலாசத்தில் பார்வையிடலாம்.

3. விற்பனை முடிந்தவுடன் பணம் செலுத்திப் பொருள்களை உடனடியாக எடுத்துச் செல்ல வேண்டும்.

ஏ. தம்பிராஜா,
பதில் நிலஅளவை நாயகத்துக்காக.

நில அளவைப் பகுதி,
150, கிருல வீதி,
கொழும்பு 5, 1969 ம் ஆ ஓகத்து மீ 8 ந உ.

8–856—15.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,867

---

# நானாவித அறிவித்தல்கள்

## ஆயுள்வேதத் திணைக்களம்

### 1961 ம் ஆண்டு 31 ம் இலக்க ஆயுள்வேதச் சட்டம் ஆயுள்வேதக் கல்லூரி — ஆரோக்கியசாலைச் சபை தேர்தல்

1962 ம் ஆண்டு நவம்பர் மாதம் 23 ந் திகதி வெளியாகிய 13,399 ம் இலக்க வர்த்தமானியின் III ம் பகுதி 4 ம் பிரிவில் வெளியான (சபைத் தேர்தல்கள்) பிரமாணங்களுக்கும், 16.6.1967 ல் வெளியான 14,753 ம் இலக்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட புதிய பிரமாணங்களுக்கமைய, ஆயுள்வேதக் கல்லூரி–ஆரோக்கியசாலைச் சபைக்கு இரு அங்கத்தவர்களை தெரிவுசெய்வதற்குரிய நியமனப் பத்திரங்கள், 1961 ம் ஆண்டு 31 ம் இலக்கச் சட்டத்தின் 22 ம் பிரிவு (1) உபபிரிவு (எச்) பந்திப்படி கோரப்படுகின்றன.

அபேட்சகர்களிடமிருந்து நியமனப் பத்திரங்கள், 1969 ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29 ந் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிவரை ஆயுள்வேத ஆணையாளர் அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படும்.

ஆயுள்வேதத் திணைக்களம்,
325, கொட்டா ரோட்,
கொழும்பு 8,
8.8.1969.

விமல் நவகமுவ,
ஆயுள்வேத ஆணையாளர்.

குறிப்பு :—(1) 1962 ம் ஆண்டு வெளிவந்த ஆயுள்வேத (சபைத் தேர்தல்) பிரமாணங்கள் iii ம் பகுதி 7 (பி) பிரிவின்படி தேர்தலுக்கு நிற்கும் ஒவ்வொரு அபேட்சகரும் ஆயுள்வேத ஆணையாளரிடம் நியமனப் பத்திரம் தாக்கல் செய்யும் குறிப்பிட்ட தினத்திற்கு முன்னர் நூற்றைம்பது ரூபா கட்டுப்பணம் செலுத்துதல் வேண்டுமென்பதை தெரிவுக்கு நிற்கும் அபேட்சகர்களின் கவனத்திற்குக் கொண்டுவரப்படுகின்றது.

(2) தேர்தல் நியமனப் பத்திரங்கள், ஆயுள்வேத ஆணையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

8–864—15.8.69 ந் திகதிய வர்த்தமானி இல. 14,867

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

*இலங்கை அரசாங்க வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.*

*இலங்கை அரசாங்க வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிக்கப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பிவைக்கப்படும். அரசாங்க வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களை பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சகத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.*

*அரசாங்க வர்த்தமானிகளுக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் அரசாங்க பிரசுராலய அதிபர், தபால் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.* **அரசாங்க அழுத்தகன் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ள மாட்டார்.**

### அட்டவணை—1969

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | | |
|---|---|---|---|---|---|---|
| ஓகத்து | 1.8.69 | வெள்ளி | 25.7.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 8.8.69 | வெள்ளி | 1.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 15.8.69 | வெள்ளி | 8.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 22.8.69 | வெள்ளி | 15.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 29.8.69 | வெள்ளி | 22.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| செத்தெம்பர் | 5.8.69 | வெள்ளி | 29.8.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 12.9.69 | வெள்ளி | 5.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 19.9.69 | வெள்ளி | 12.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 26.9.69 | வெள்ளி | 19.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| ஒற்றோபர் | 2.10.69 | வியாழன் | 26.9.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 9.10.69 | வியாழன் | 2.10.69 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 17.10.69 | வெள்ளி | 9.10.69 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 24.10.69 | வெள்ளி | 17.10.69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 31.10.69 | வெள்ளி | 24.10.69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| நவெம்பர் | 7.11.69 | வெள்ளி | 31.10.69 | வெள்ளி | ந.ப. | 12.00 |
| | 14.11.69 | வெள்ளி | 6.11.69 | வியாழன் | ந.ப. | 12.00 |
| | 21.11.69 | வெள்ளி | 14.11.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 28.11.69 | வெள்ளி | 21.11.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| திசம்பர் | 5.12.69 | வெள்ளி | 28.11.69 | வெள்ளி | பி.ப. | 3.30 |
| | 12.12.69 | வெள்ளி | 4.12.69 | வியாழன் | பி.ப. | 3.30 |
| | 19.12.69 | வெள்ளி | 12.12.69 | வெள்ளி | பி.ப | 3.30 |
| | 26.12.69 | வெள்ளி | 18.12.69 | வியாழன் | பி.ப. | 3.30 |

அரசாங்க அச்சகப் பகுதி,
கொழும்பு,
1969 ம் ஆண்டு யூன் மீ 13 ந் உ.

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
பதில் அரசாங்க அழுத்தகன்.

இலங்கை அரசாங்க அச்சகப் பகுதியிற் பதிப்பிக்கப்பெற்றது.